
பக்கம் 10


பக்கம் 11


பக்கம் 17


பக்கம் 24

20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 76

வள்ளுவர் ஆண்டு 2043 தை 26 வெள்ளிக்கிழமை (10/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# அரச படையினரிடம் ஒப்படைத்தோரை மூன்று வருடங்களாகியும் காணவில்லை

## அமெரிக்கத் தூதுவரிடம் முல்லை மக்கள் கண்ணீர் மல்க எடுத்துரைப்பு

முல்லைத்தீவு, பெப்ரவரி 10

இறுதிப் போர் முடிந்து அரச படையினரிடம் சரணடைந்தபோது தாம் தமது கைப்பட வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினரிடம் ஒப்படைத்த உறவினர்கள் பலர் மூன்று வருடங்களாகிவிட்டபோதும் இதுவரை மீண்டும் வரவில்லை என்றும் அவர்களில் சிலரை இறந்தவர்கள் என்று பதிவு செய்து கொள்ளுமாறு இப்போது இராணுவத்தினர் கூறுகிறார்கள் என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோளக் குற்றவியல் நீதி விசாரணைக்கான தூதுவர் ஸ்ரீபன் ராப்பிடம் தெரிவித்தார்கள் முல்லைத்தீவு மக்கள். இராணுவத்தினரிடம் தாம் ஒப்படைத்த பிள்ளைகளின் ஒளிப்படங்களையும் ராப்பிடம் கையளித்த பெற்றோர்கள் அவர் முன் கதறியழுதபடி நீதி கிடைக்க வழிசமைக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

அரசு நியமித்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் விசாரணை தமக்குத் திருப்திகரமானதாக இல்லை என்றும் அங்கு தெரிவித்த பெற்றோர்கள், நீதியான சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்றும் உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ராப்பின் திடீர் பயணம்

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ராப் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். நேற்று அவர் கிளிநொச்சியில் சந்திப்புக்களை நடத்தக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. அதையொட்டி கிளிநொச்சியில் சிறிது பரபரப்பும் நிலவியது. ஆனால் திடீரென

27

# ஐ.தே.க. - கூட்டமைப்பு முக்கிய பேச்சு

கொழும்பு, பெப்.10

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பிலான தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பகிரங்கமாக அறிவிக்கவுள்ள நிலையில், இது தொடர்பிலான இதர எதிர்க்கட்சிகளின் அபிப் பிராயத்தையும் ஐ.தே.க. கேட்டறிந்துள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் இதற்கான விசேட அறிவிப்பு வெளிவரவுள்ளது. இந்த அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னதாக எதிர்க்கட்சிகளாக உள்ள பிரதான கட்சிகளின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளும் வகையில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முக்கிய பேச்சுகளை நடத்தியுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட இதரகட்சிகளுடன் ரணில் நேற்று பேச்சு நடத்தினார்.

நல்லாட்சி மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை வலியுறுத்துவதே ஐக்கிய தேசி

27

# இலங்கைக்கு எதிரான பிரேரணை ஆதரிக்கும் நிர்ப்பந்தத்தில் ஆஸி.

## எதிர்க்கட்சி கடும் அழுத்தம்

மெல்போர்ன், பெப். 10

இலங்கை விவகாரம் தொடர்பில் ஜெனிவாவில் கொண்டுவரப்படவுள்ள ஐ.நாவின் பிரேரணைக்கு ஆதரவு வழங்கும் மேற்குலக நாடுகளுடன் ஆஸ்திரேலியாவும் இணைந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைப்பாட்டிலிருந்து ஆஸ்திரேலிய அரசு விலகும் பட்சத்தில் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கும் அது உள்ளாக வேண்டிய நிலை ஏற்படக்கூடும்.

- இவ்வாறு ஆஸி. செனட் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து அந்நாட்டின் எதிர்க்கட்சியான கிரீன் கட்சி கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இதையடுத்து, இலங்கை அரசின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை ஏற்க மறுக்கும் பிரிட்டிஷ், கனடா ஆகிய நாடுகளின் தலைவர்கள் வரிசையில் ஆஸ்திரேலியாவும் தற்போது மெதுவாக இணையக்கூடும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆணைக்குழுவின் அறிக்கை அரைகுறையானது. ஆதலால், இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்படுவதற்கு இதர நாடுகளுடன் இணைந்து ஆஸ்திரேலிய அரசும் அறைகூவல் விடுக்கவேண்டுமெனக் கோரும் பிரேரணை ஆஸி. செனட்சபையில் கிரீன் கட்சியால் தாக்கல் செய்யப்பட்டது.

27

# மாலைதீவு ஜனாதிபதியின் குடும்பம் இலங்கையில் தஞ்சம்

## நேற்றுக் கொழும்பு வந்தனர் மனைவி, மகள்மார்

கொழும்பு, பெப்.10

மாலைதீவில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையால் ஜனாதிபதிப் பதவியை இராஜினாமாச் செய்த மொஹமட் நஷீட்டின் குடும்பத்தினர் பாதுகாப்புத்தேடி நேற்று இலங்கையிடம் அரசியல் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்தத் தகவலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மொஹமட் நஷீட்டின் மனைவியும் மகள்மாரும் நேற்றுக் கொழும்பு வந்தடைந்தனர் என ஏ.எவ்.பி. செய்திச் சேவையிடம் பந்துல ஜயசேகர கூறியுள்ளார்.

மாலைதீவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி பதவியிலிருந்து மொஹமட் நஷீட் இராஜினாமா செய்தார்.

அதன் பின்னரும் அங்கு மொஹமட் நஷீட்டின் ஆதரவாளர்களுக்கும் தற்போதைய

27

# மின் கட்டணம் அதிகரிக்காது

கொழும்பு,பெப் 10

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை என மின்சக்தி எரிசக்தி பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகர நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்

27

# சவேந்திர சில்வா தப்பினார்

நியூயோர்க், பெப்.10

ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப்பிரதிநிதி சவேந்திர சில்வாவிற்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நியூயோர்க்கின் தென் மாவட்ட நீதிமன்றில் சவேந்திர சில்வாவிற்குஎதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களினால்இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இலங்கை அரசு சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறிச்செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சவேந்திர சில்வாவிற்கு இராஜதந்திர வரப்பிரசாதம் காணப்படுவதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

27

# தமிழருக்குத் தீர்வைப்பெற வாருங்கள் போராடுவோம்

## கூட்டமைப்புக்கு ஐக்கிய சோஷலிஸக் கட்சி அழைப்பு

கொழும்பு, பெப்.10

தொடர்ச்சியாக மக்கள் போராட்டங்களை வெடிக்கச் செய்வதன் மூலமே மஹிந்த அரசிடமிருந்து தீர்வைப்பெறலாம் என்ற நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே, கூட்டமைப்பு, சர்வதேசத்தை நம்பாது தமிழ்மக்களை ஒன்றுதிரட்டி, வீதியில் இறங்கி நீதிக்காகப் பேராட வேண்டும். அதற்கு நாம் பக்கபலமாக இருப்போம். வாருங்கள் போராடுவோம்!

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது ஐக்கிய சோஷலிஸக் கட்சி.

மாலைதீவு ஜனாதிபதியின் இராஜினாமாவின் தாக்கத்தை ஜெனிவா மாநாட்டில் வைத்து அரசு நிச்சயம் உணரும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

தீர்வு விடயம், மாலைதீவு ஜனாதிபதியின் திடீர் இராஜினாமா ஆகியவை தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே, ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேசத்தை நம்பினால் தீர்வுப்பொதி கூரையைப் பிரித்துக் கொண்டு வானத்திலிருந்து விழும் என கூட்டமைப்பு நினைத்துக்கொண்டிருக்கின்றது. தீர்வை அவ்வாறு வழங்குவதற்கு மஹிந்த ஒன்றும் கடவுள் அல்லர்.

27

### ஜனாதிபதி மாளிகைக்கு சூரிய சக்தி மின்சாரம்

ஜனாதிபதி மாளிகைக்கு நேற்று முதல் சூரிய சக்தி மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காகப் பொருத்தப்பட்டுள்ள ஆழியை ஜனாதிபதி இயக்கி மின்சார இணைப்பை ஏற்படுத்தினார். 2016 ஆம் ஆண்டில் இலங்கையின் மின்சாரத் தேவையில் 10 வீதத்தை சம்பிரதாய முறையல்லாத வேறு மூலங்களிலிருந்து பெறப்பட வேண்டும் என்ற மஹிந்த சிந்தனை கோட்பாட்டுக்கு இணங்கவே இந்த திட்டம் ஜனாதிபதி மாளிகையில் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க- பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகர- இலங்கை தனியார் மின்சார நிறுவனத்தின் தலைவர் சந்தன ஹப்புதந்திரி ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

### கற்பிட்டியில் ஹெரோயின் மீட்பு

கற்பிட்டியில் ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. 1180 கிராம் எடையுடைய போதைப் பொருள்களை மீட்டுள்ளதாகவும் , போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ரயில் பாதை கடவைகளுக்கு பாதுகாப்பு உபகரணம்

நாட்டில் உள்ள ரயில்பாதை கடவைகளுக்குப் பாதுகாப்பு உபகரணம் பொருத்த 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். நாடளாவியரீதியில் 230 ரயில் கடவைகள் இந்த பாதுகாப்பு உபகரணங்களைப் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சரணடைந்த சிறுமி நம்பிக்கை இல்லத்தில்

15 வயதுச் சிறுமி ஒருவர் தனக்கு பாதுகாவலர் யாருமில்லை எனக் கூறி யாழ். பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவில் சரணடைந்துள்ளார். அவரை அந்தப் பிரிவில் பொலிஸ் பொறுப்பதிகாரி யாழ் .நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன் நேற்றுமுன்னிலைப் படுத்தினர். சிறுமியை கொழும்புத்துறையில் உள்ள நம்பிக்கை இல்லத்தில் தங்க அனுமதிக்குமாறு உத்தரவிட்டதோடு சட்ட வைத்திய அதிகாரியிடம் சிறுமியை முற்படுத்தி மருத்துவ அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறும் பணித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இல்லாத பாடசாலை ஒன்றின் பெயரில் ஒரு கோடி 77 லட்சம் ரூபா பணம் மோசடி

இல்லாத பாடசாலையின் பேரில் செய்யப்பட்ட ஒரு கோடியே 77 இலட்சத்து 18ஆயிரத்து 66 ரூபா மோசடி அம்பலப்படுத்தப்பட்டது. இதற்குப் பதில் அளிக்க ஒரு மாத கால அவகாசம் கேட்கின்றது அரசு.

இப்படியான ஒரு சம்பவம் நேற்று நாடாளுமன்றில் இடம் பெற்றது.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது வன்னி மாவட்டத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் சபையில் இந்த மோசடி தொடர்பான விடயங்களை முன்வைத்தார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திமவீரக்கொடி தலைமையில் கூடியது.

இந்த வேளையில் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

''வன்னி மாவட்டத்தில் கோவிற்குளம் கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கென ஒரு கோடியே 77 இலட்சத்து 18 ஆயிரத்து 66 ரூபா பெறப்பட்டுள்ளது. உண்மையில் பாடசாலை ஒன்றை அமைக்காமலே, அதனை அமைத்து விட்டதாகக் கூறி இந்தப்பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

✱இந்த மோசடியைச் செய்தவர் யார் ? அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் யார்? அந்தப் பணத்தை பெற்றுக் கொண்டவர் யார்?

✱ மோசடி செய்தவர்களிடமிருந்து அந்தப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

✱ சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா? '' என்று கேள்விகளை அடுக்கினார்.

ஆனால் கல்வி அமைச்சரோ அல்லது உள்நாட்டு மாகாணசபைகள் அமைச்சரோ பதில் அளிக்கவில்லை. அதேவேளை வழமை போல் ஆளும் கட்சிக் கொரடாவான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன இந்த வினாவுக்கு பதில் அளிக்க ஒரு மாதகால அவகாசம் கேட்டு நிலைமையைச் சமாளித்து விட்டார்.

**சாவகச்சேரிப் பாடசாலைகளில் கழிவறைகளைப் பயன்படுத்தமுடியாத நிலை**

வழமையாவே பொயின்ட் ஒவ் நபர் என்று சபையில் பிரபல்யம் பெற்றவர் ஆளும் கட்சி உறுப்பினரான அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர். நேற்று அவரும் சரியான- முக்கியமான ஒரு பொயின்டைப் பிடித்து விட்டார்.

சாவகச்சேரி நகரசபைப் பிரதேசத்தில அமைந்துள்ள 12 பாடசாலைகளில் உள்ள மலசல கூடங்களில் கழிவுகள் அகற்றப் படவில்லை.

பாடசாலை நிர்வாகங்கள் இது குறித்து சாவகச்சேரி நகரசபைக்கு அறிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் பல ஆயிரம் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே உள்ளூராட்சி அமைச்சர் சாவகச்சேரி நகர சபைக்கு ஆலோசனைகளை வழங்கி இந்தப் பிரச்சினைகளை தீர்க்க உதவுவாரா? என்று அஸ்வர் கேள்வி எழுப்பினார்.

**தமிழில் கேட்டதால் அமைச்சருக்குப் புரியவில்லை**

கேள்வியைக் கேட்கும்படி பிரதி சபாநாயகர் அஸ்வர் எம்.பியின் பெயரைக் குறிப்பிட்டார். அப்போது அஸ்வர் எம்.பி ''நான் அந்தக் கேள்வியைக் கேட்கின்றேன்'' என்று கூறினார். அது அமைச்சருக்குப் புரியவில்லை. ''கேள்வியைக் கேட்கவில்லையா?'' என்று அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கேட்டார்.

''நான் ஏற்கனவே கேட்டுவிட்டேன்'' என்றார் அஸ்வர். ''இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க எனக்கு ஒரு மாத கால அவகாசம் கேட்டார்'' என்றார் தினேஷ்.

''அப்படியா! இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க ஒரு மாத கால அவகாசம் கேட்கின்றீர்களா?'' என்று மீண்டும் தமிழில் கேட்டார் அஸ்வர்.

''இந்த மனிதர் என்ன கூறுகின்றார் என்று புரியவில்லை. ஆளைக் குழப்புகின்றார் ''என்று கூறிக் கொண்டு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அமர்ந்துவிட்டார். (அப்படியானால் இந்தப் பாடசாலைகள் அதுவரை நாறவேண்டுமோ? )

**அதிவேகப் புகையிரத பாதை பாதுகாப்புக்கடவைகள்**

''காலியில் இருந்து மாத்தறை வரை அமைக்கப்பட்டுள்ள அதிவேக ரயில் பாதையில் பல பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் காணப்படுகின்றன. இந்த இடங்களில் தொடர்ச்சியாக விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்தப் பாதுகாப்பற்ற கடவைகளில் உரிய முறையில் உரிய முறையில் பாதுகாப்புக் கடவைகளை அமைக்க போக்குவரத்து அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?'' என்று மாத்தறை மாவட்ட ஐ.தே.க உறுப்பினரான புத்திக்க பத்திரண கேள்வி ஒன்றை எழுப்பினார்.

உறுப்பினர்களின் கேள்வியை ஒப்புக் கொண்டார் அமைச்சர் குமார வெல்கம.

''காலிக்கும் மாத்தறைக்கும் இடையில் 91 குறுக்குப் பாதைகள் இருக்கின்றன. இவற்றுள் 61 பாதைகள் பாதுகாப்பற்ற கடவைகளாகக் காணப்படுகின்றன. இந்தக் கடவைகளுக்குப் போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எல்லாக்கடவைகளிலும் தன்னியக்கக் கடவைகள் அமைக்க முடியாது'' என்று கூறினார் அமைச்சர்.

**''லைட் என்ட் சிக்னல்''**

''தன்னியக்கக் கடவைகள் அமைக்க பெருந்தொகையான பணம் தேவை. அதற்கான நிதியும் எம்மிடம் இல்லை. இதனால் ரயில் கடவைகளை அமைக்கும்போது சமிக்ஞை விளக்கும், மணி ஒலியும் எழுப்பும் 'லைட் என்ட் பெல்' முறை ஏற்பாடு செய்யப்படும். இதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. கூடியவிரைவில் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப் படும்'' என்று உறுதியளித்தார் அமைச்சர் குமார வெல்கம.

**பெருந்தோட்டக் கம்பனியும் சீனி உற்பத்தியில்**

ஜே.வி.பி உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி ஹிங்குலான சீனித் தொழிற்சாலை தொடர்பான கேள்வி ஒன்றை எழுப்பினார். ''ஏற்கனவே ஹிங்குலான சீனித் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் அந்தப் பகுதியிலுள்ள பயிர்ச் செய்கையாளர்களுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் இருந்தது. இதன்படி அவர்கள் உற்பத்தி செய்த கரும்பை தொழிற்சாலைக்கு வழங்கினர்.

ஆனால் இப்பொழுது தொழிற்சாலை அரசுடமையாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களும் பயிர்ச்செய்கையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?'' என்று சுனில்ஹந்துன்நெத்தி அரச வளங்கள் தொழில் முயற்சி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கும் அமைச்சர்களின் சார்பில் பதில் அளித்தார் ஆளும் கட்சி பிரதம கொரடாவான தினேஸ் குணவர்த்தன.

''ஹிங்குலான சீனித் தொழிற்சாலை கல்லோயா பெருந்தோட்டக் கம்பனியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. 49 வீதம் கம்பனிக்கும் 51 வீதம் அரசுக்கும் உரித்துடையதாகும். ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக கல்லோயா பெருந்தோட்டக் கம்பனியுடன் பேசப்பட்டுள்ளது. தற்பொழுது 429 துண்டுக் காணிகளில் கரும்பு உற்பத்தி செய்யப் படுகின்றது'' என்றார் அமைச்சர்.

**தொழிற்சாலையே இல்லை கரும்பை யாருக்கு விற்பது**

இந்த இடத்தில் மடக்கினார் சுனில். ''ஐயா! இந்த அமைச்சர் கூறுவது வேடிக்கையாக இருக்கின்றது. ஹிங்குலானை சீனித் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்படியான நிலையில் தாம் உற்பத்தி செய்யும் கரும்பை யாருக்கு விற்பது என்ற சிக்கலினால் பயிர் செய்கையில் ஈடுபடத் தயக்கம் காட்டுகின்றனர்விவசாயிகள். இதற்கு அமைச்சர் என்ன கூறப் போகின்றார்?'' என்றார் சுனில் ஹந்துன்நெத்தி.

**ஒரே நாளில் கரும்பை உற்பத்தி செய்யமுடியாது**

''இதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மார்ச் மாதம் அளவில் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்துவிடும். கரும்பை ஒரே நாளில் உற்பத்தி செய்துவிடமுடியாது. தொழிற்சாலை இயங்கும் போது விவசாயிகள் தாம் உற்பத்தி செய்யும் கரும்பை விற்பனை செய்ய முடியும்'' என்று பதிலடி கொடுத்தார் அமைச்சர் தினேஸ்.

**பெலவத்த ஊழியர்களின் 2 கோடி 40 இலட்சம் மோசடி**

''சபா நாயகர் அவர்களே, அமைச்சரின் பேச்சை எப்படி நம்புவது? ஏற்கனவே பெலவத்த சீனித் தொழிற்சாலையில் பணியாற்றிய ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி- நம்பிக்கை நிதியம் உட்பட 2 கோடி 40 இலட்சம் இதுவரை செலுத்தப்படவில்லை.

இந்தத்தொகை 2012 ஜனவரி மாதத்துக்கு முன்னர் ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்று அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் இன்றுவரை அது செலுத்தப்படவில்லை'' என்று சுட்டிக்காட்டினார் சுனில் ஹந்து நெத்தி.

இந்தக் தாக்குதலைச் சிறிதும் எதிர்பாராத அமைச்சர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, ''மோசடி செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தப் பணத்தைப் பெற்றுக் கொடுப்போம்'' என்று கூறிச் சமாளித்து விட்டார்.

**ரவி கருணாநாயக்கவின் சிறப்புரிமை**

கேள்வி நேரம் முடிந்த நிலையில் ஐக்கியதேசியக் கட்சியின் உறுப்பினரான ரவி கருணாநாயக்க சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

''கடந்த வருடம் ஜீலை 19 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் வெளியான ஆங்கில, சிங்கள நாளேடுகளில் அதிவேகப் பாதையில் வாகனத்தைச் செலுத்தியதால் என்னிடம் குற்றப் பணம் அறவிட்டதாக கற்பனையில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளனர். இது முற்றிலும் பொய்யான செய்தி. இப்படியான ஒரு சம்பவம் இடம்பெற்றதே இல்லை.

உண்மைக்கு மாறான இந்தச் செய்தியினால் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. நான் ஊடகங்களை மதிப்பவன். ஊடகவியலாளர்களை கௌரவமாக நடத்துபவன். ஊடக நண்பர்கள் பத்திரிகை மூலம் அரசியல் நடத்த உறுதுணையாகச் செயற்படக்கூடாது'' என்று குறிப்பிட்ட ரவி கருணாநாயக்க, ''இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

**43 லட்சம் மாணவர்களுக்கு சீருடையில்லை 80ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலையில்லை இதைப் பேச சபையில் இடமில்லை**

இதனைத் தொடர்ந்து ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.




''இப்பொழுது 54 அமைச்சர்கள் இருக்கின்றனர். நிலையியற்கட்டளை III பிரிவின் படி ஒவ்வொரு அமைச்சுத் தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் கட்டாயமாக நடைபெற வேண்டும். ஆனால் அவை நடைபெறுவதில்லை. நாம் அமைச்சுகள் தொடர்பாக இந்தச் சபையில் பேச முற்பட்டால் இங்கு பேச வேண்டாம், ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசுங்கள் என்று தடை விதித்து விடுகின்றீர்கள். நாம் எங்கே போய்ப் பேசுவது?'' என்று கேட்டார் சஜித் பிரேமதாச.

அப்போது குறுக்கிட்ட பிரதி சபாநாயகர் ''இந்த விடயம் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு, மாதாந்தக் கூட்டங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

''பிரதி சபாநாயகர் அவர்களே, இன்று நாட்டில் 43 லட்சம் மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப் படவில்லை. 40 லட்சம் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை. 80 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் இல்லை. இதைப் பற்றிப் பேச இந்தச் சபையில் அனுமதியில்லை.

நீங்கள் தலைமை தாங்குகின்றீர்கள். அமைச்சர்கள் இங்கே இருக்கின்றனர். உங்களுக்கு சகல அதிகாரங்களும் உண்டு. ஏன் உங்களால் இந்த அமைச்சர்களுக்கு உத்தரவிட முடியாது?'' என்று வாதிட்டார் சஜித் பிரேமதாச.

''நான் எனது பதிலை ஏற்கனவே கூறிவிட்டேன். சபையின் அடுத்த நடவடிக்கைகளை ஆரம்பியுங்கள்'' என்று பணித்தார் பிரதி சபாநாயகர்.

**தேசிய பொது வீதிகளின் ஒழுங்கு விதிகள் தொடர்பான சட்டங்களை முன் மொழிந்தார் பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவல.**

''கடந்த மூன்று ஆண்டுகளில் விபத்துகளில் உயிரிழந்தோர் 7168 பேர், காயமடைந்தோர் 7268பேர், உயிரிழந்த மாணவர் 229 பேர்'' என்று எதிர்கட்சிகளின் சார்பில் எதிர்க்கட்சிப் பிரதம கொரடாவான ஜோன் அமரதுங்க விவாதத்தை ஆரம்பித்தார்.

''அதிவேகப் பாதையை பயன்படுத்தும் விவரம் தொடர்பாக வர்த்தக மானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனால் விளக்கமில்லை. அதிவேகப்பாதையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. சாரதிகளுக்கான அத்தியாவசியத் தேவைகளை பெற்றுக்கொள்ளும் வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. முறையான விதிமுறைகள் இன்மையினால் பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

2010ஆம் ஆண்டு விபத்துகளில் சிக்கி 2006பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களுள் 225பேர் பாடசாலை மாணவர்கள். 2011ஆம் ஆண்டு 2570 பேர் உயிரிழந்துள்ளனர். 6142பேர் காயமடைந்துள்ளனர்'' என்று புள்ளி விவரங்களை அடுக்கினார் அவர்.

**அதிவேகப் பாதையில் ஓசிப் பயணம்**

ஜோன் அமரதுங்க மற்றுமொரு கோரிக்கையையும் விடுத்தார்.

''இப்பொழுது அதிவேகப் பாதையில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் ஆகியோர் கட்டணமின்றி பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த வசதிகள் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார் ஜோன் அமரதுங்க.

**ஜனாதிபதியின் புகழ் பாடுவது தானே உங்கள் தொழில்**

விவாதத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் அரியநேத்திரன் உரையாற்றும் போது ஆளும் கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் மூக்கை நுழைத்தார்.

''மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை, புனானை ஆகிய புராதன பூமிகளில் சில பிக்குமார் அடாவடித்தனமாக விகாரைகளை அமைக்க முயல்கின்றனர். இந்த இடங்கள் பாரம்பரிய புதை பொருள் ஆய்வுக்கு உட்படுத் தப்பட வேண்டிய இடங்கள் என ஏற்கனவே பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார் அரியநேத்திரன்.

இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் ''வெறுமனே பத்திரிகைச் செய்திகளை வைத்துக்கொண்டு இந்தச் சபையை தவறாக வழிநடத்தக் கூடாது. சரியான ஆதாரங்களுடன் பேச வேண்டும்'' என்றார்.

''ஐயா உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள். நாங்கள் சகல விதமான ஆதாரங்களையும் புகைப் படங்களுடன் ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்துள்ளோம். எங்களுக்குப் பல வேலைகள் இருக்கின்றன. ஆனால் அரசையும் ஜனாதிபதியையும் புகழ் பாடுவதும் மட்டும் தானே உங்கள் தொழில். அதை யாவது சரியாகச் செய்யுங்கள்'' என்று சூடு கொடுத்தார் அரியநேத்திரன்.

அஸ்வரும் சும்மா இருக்காது தன் கைவசமிருந்த சரக்குகளை அவிழ்த்து விட்டார். இதனால் காரசாரமான சிறு விவாதமே நடந்து முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காணாமற்போகச் செய்யப்பட்டோர் நிலை குறித்து போதிய கரிசனை தேவை

**யா**ழ்ப்பாண மாவட்டத்தில் காணாமற்போனோரின் எண்ணிக்கை விவரத்தை அரசாங்க அதிபரிடம் கூர்ந்து கேட்டுள்ளார், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் போர்க்குற்ற விவகாரங்களுக்கான விசேட தூதுவர் ஸ்ரீபன் ராப். எனினும் அந்த விவரங்கள் இன்னும் பூரணமாகத் திரட்டப்படாமையால், அவற்றை வழங்க முடியாது உள்ளதாக அரச அதிபர் பதில் அளித்துவிட்டார்!

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தி கடந்த ஜனவரி மாதத்தில் சேர்த்த விவரங்களின் பிரகாரம் 553 பேர் யாழ்.மாவட்டத்தில் காணாமற்போன தகவல்கள் கிடைத்துள்ளன. வன்னி மாவட்டங்களிலும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

வடக்கில் காணாமற்போனவர்களின் குடும்பத்தினரால் படையினரின் வற்புறுத்தல்களால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள், படையினரால் நேரடியாகக் கைது செய்யப்பட்டவர்கள், வெள்ளை வான்களில் வந்தோரால் கைது செய்யப்பட்டவர்கள், படையினரின் காவலரண்கள் மற்றும் முகாம்களுக்கு அருகே உள்ள வீதிகளால் தமது சொந்த அலுவல்களுக்கு சென்றுகொண்டிருக்கையில் பிடிக்கப்பட்டவர்கள் என்று பல்வேறு தரப்பினர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிடப்பட்ட சாராரை, காணாமற்போனோர் என்று அடையாளப்படுத்துவதை விட காணாமற்போகச் செய்யப்பட்டோர் என்று கூறுவதே பொருத்தமானது. ஏனெனில் தாமாகவே காணாமற் போவோர்கள், குடும்பச் சண்டைகள் மற்றும் தனிப்பட்ட காரணங்களால், பெற்றோர்கள் அல்லது குடும்பங்களை விட்டுப் பிரிந்து, தூர இடங்களுக்குச் சென்று (அதாவது, கிராம வழக்கில் கண்ணுக்கு எட்டாத் தொலை தூரம் சென்று) தனித்து வாழ்வோரையே காணாமற் போனவர்கள் என்று குறிப்பிடுவது வழக்கம். போர்க் காலத்தில் காணாமற் போனவர்கள் தாமாக அந்த நிலைக்கு வரவில்லை. சரியாகக் குறிப்பிடுவதானால் காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இறுதிப்போரின்போது, இடம்பெற்றதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம் என்று அமெரிக்கா உட்பட்ட மேலை நாடுகள் வலியுறுத்தி வரும் இவ்வேளையில் -

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடர் இம்மாத இறுதியில் ஜெனிவாவில் கூடவிருக்கும் வேளையில் -

காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் விவரங்கள் தகுந்த முறையில் பூரணமாக ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியம். அதன் நிமித்தமே, -

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் போர்க்குற்ற விவகாரங்களுக்கான விசேட தூதுவர் ஸ்ரீபன் ராப் இலங்கை வந்துள்ளார். போரின் போது சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும் மனித உரிமைச் சட்டங்களும் மீறப்பட்டனவா, அவ்வாறாயின் அவற்றுக்கான ஆதாரங்களை நேரில் திரட்டுவதே அவரது விஜயத்தின் பிரதான நோக்கம் என்று கொள்வது தப்பன்று.

ஆனால், அவருக்குத் தேவையான ஆதாரங்கள் மற்றும் பதிவுகளை வழங்கக் கூடிய ஆயத்தங்கள் தமிழர் தரப்பில் பூரணமாகச் செய்யப்படவில்லை என்றே சொல்லலாம்.

காணாமற்போனோர் - காணாமற்போகச் செய்யப்பட்டோர் - விவகாரத்தில் இலங்கைக்கு நீண்டகால வரலாறு உண்டு.

உலகளாவிய ரீதியில், காணாமற்போனோர் - பலாத்காரமாகக் காணாமற்போகச் செய்யப்படுவோரைப் பாதுகாக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு, இலங்கைக்கு வந்து தனது சொந்தத்தில், இவ் விவகாரம் குறித்து ஆராய்ந்து அறிவதற்காக 2006, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திடம் அனுமதி கோரியது. ஆனால் அரசு அனுமதி மறுத்தமை சமகாலப் பதிவுகள் ஆகக் கடைசியாக, கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் நான்காவது முறையாக விடுக்கப்பட்ட வேண்டுகோளும் இந்நாட்டு அரசால் நிராகரிக்கப்பட்டது.

இப்போது, உலக அரங்கில், இலங்கை அரசின் கை இறுகக் கட்டப்பட்டு விட்டதால், ஸ்ரீபன் ராப் இலங்கை வந்துள்ளார். அவரின் வருகைக்குத் தடை போடாமல், வேண்டாம் என்று கூறாமல் அரசு அனுமதி வழங்கியது பெரிய காரியம். அதுவும் ஒரு வகை அழுத்தத்தின் பின்புலத்திலேயே நடந்தேறியது என்ற தகவலும் பரவலாக நிலவுகிறது.

இந்த வேளையில், காணாமற்போகச் செய்யப்பட்டோர் குறித்த விவரங்களை தக்க சான்றாதாரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய முதன்மைப் பொறுப்பு தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடமே உண்டு. இது குறித்து அதிக அக்கறையும் கூடிய கவனமும் காட்டியிருக்க வேண்டியவர்கள் அவர்களே.

பெப்ரவரி மாதத்தில் தேவைப்படும் விவரங்களை ஒரு மாத காலத்தில் அல்லது ஒன்றரை மாத இடைவெளியில் தேடிக் கொள்வது, பாதிக்கப்பட்ட மக்களிடம் விவரங்களைப் பெற்றுக்கொள்ளும் முயற்சி யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்ட கதையாகவே முடியப்போகிறது! இப்போது இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் போர்க் குற்ற விவகாரங்களுக்கான விசேட தூதுவர் ஸ்ரீபன் ராப், அரசாங்கத்திடம் இருந்து தமக்குத் தேவையான சகல தகவல்களையும் பெற முடியும் என்று எதிர்பார்க்க இயலாது; நம்பவும் இடமில்லை.

காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் விடயம் - விவகாரம் - சம்பந்தப்பட்டவர்களின் பெற்றோரையும் மனைவி, மக்களையும் கால வட்டத்தில் அவர்களின் மன, உடல் நலன்களை உருக்கி விடும். காணாமற்போகச் செய்யப்பட்டோர் விவகாரம் வெறுமனே சர்ச்சைக்குட்படுத்தப்படக் கூடிய ஒன்றுமல்ல. இது விடயத்தை சகல தரப்பினரும் பாதிக்கப்பட்டோர் நிலையில் நின்று மனித நேயத்துடன் நோக்க வேண்டும்.

# யாழ்.மாவட்டத்தில் மீண்டும் மலேரியா பரவும் அபாயம்

### விழிப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்து

வலி வடக்கு பெப் 10

யாழ். மாவட்டத்தில் மீண்டும் மலேரியா நோய் பரவக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளமையால் பொது மக்கள் இதனையிட்டு விழிப்புடன் செயல்பட வேண்டும் என யாழ்.மாவட்ட மலேரியா கட்டுப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி இரத்தினசிங்கம் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அண்மைக் காலத்தில் இந்தியாவில் இருந்து திரும்புபவர்கள் மற்றும் இந்தியாவுக்கு சுற்றுலாவுக்கு சென்று வருபவர்கள் என்ற பல தரப்பினராலும் இந்நோய்க் காவியை கொண்டு வரமுடியும்.

இந்தியாவிலும் மலேரியா நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படாத நிலைமையே காணப்படுகின்றது.

ஆபிரிக்க நாடுகளுக்கு சுற்றுலாவுக்காக சென்றவர்கள் அல்லது வேறு காரணங்களுக்காகச் சென்று திரும்பி வருபவர்கள் மூலம் மூளை மலேரியா நோய்க் காவிகளும் கொண்டுவரப்படலாம்.

குறிப்பிட்ட நாடுகளில் நின்ற வேளைகளில் நோய் தாக்கத்துக்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சைக்கு உள்ளாகியும் திரும்ப நாட்டுக்கு வந்திருக்கலாம்.

இத்தகையவர்கள் மூலம் மீண்டும் நாட்டில் மலேரியா நோயின் தாக்கம் எற்படக் கூடிய வாய்ப்புகள் காணப்படுவதுடன் ஏனையவர்களும் பாதிப்படையும் நிலைமையும் கூட ஏற்படலாம்.

இத்தகைய நாடுகளுக்குச் சென்று திரும்பியவாகள் சிலர் மலேரியா நோயின் தாக்கத்துக்கு உள்ளாகிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டும் உள்ளார்கள்.

ஆகையால் இத்தகைய நாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்தியதிகாரிகள் பணிமனைகளுடன் தொடாபு கொண்டு தம்மை பரிசோதித்துக் கொள்வது சிறந்தது என்றும் தெரிவித்துள்ளார். (ம-86)

## கொழும்பு பல்கலைக்கழகத்தில் 13 மாணவருக்கு டெங்கு

### ஏனையோரும் பாதிப்படையும் நிலை

கொழும்பு,பெப்.10

கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பதின்மூன்று பேர் கடந்த ஒரு மாதம் வரையான காலத்துள் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஆர்ண் கொழும்பு தேசிய மருத்துவமனை மற்றும் மருத்துவமனைகளில் சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர்

அந்தப் பல்கலைக்கழகத்தின் விடுதிகளிலுள்ள ஏனைய மாணவர்களுக்கும், டெங்குக் காய்ச்சல் பீடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பல்கலைக்கழகச் சூழல் மற்றும் மாணவர்கள் தங்கும் விடுதிகளின் ''கொன்கிறீற்'' கூரைகளில் மற்றும் கழிவு வாய்க்கால்களில் நுளம்புகள் பெருகும் இடங்கள் இருப்பது கொழும்பு மாநகர சபையின் பொது சுகாதாரப் பரிசோதகர்களால், கடந்த தினங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள சோதனைகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது பல்கலைக்கழகத்தின் சுகாதார சேவைகளுக்காகவே பிரத்தியேகமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ம-22)

## உயர் கல்வியைத் தொடர முடியாத மாணவருக்கு தொழில் நுட்பப் பயிற்சி

### கல்வி அமைச்சு விசேட திட்டம்

சுன்னாகம்,பெப் 10

கல்வி அமைச்சின் அறிவுள்ள சமுதாயத்துக்கான கல்வித் திட்டத்தின் கீழ் உயர் வகுப்புக் கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சிக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

தரம் 9,10,11 ஆகியவற்றில் படித்து விட்டு கல்வியைத் தொடர முடியாது பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு இந்தப் புலமைப் பரிசில்கள்வழங்கப்படவுள்ளன.

இவர்கள் தொழில் நுட்பப் பாடநெறிகளைக் கற்று உடனடித் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இந்தப் புலமைப்பரிசில் திட்டம் காணப்படுகிறது.

தொழில் நுட்பப் பயிற்சிகள் யாவும் இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தால் யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுவதுடன், இதற்கான கட்டணங்கள் கல்வியமைச்சால் பொறுப்பேற்கப்படும்.

24 நாள்கள் அல்லது 192 மணித்தியாலங்கள் கொண்ட குறுங் காலத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

பொது, வெல்டிங், இரும்புருக்கு வடிவமைத்தல், வீட்டு மின்னிணைப்பு, மரத்தளபாடத் தொழிநுட்பம், கட்டுமானத் தொழிநுட்பம், குழாய் பொருத்தும் தொழிநுட்பம் ஆகிய பயிற்சிகள் இதன் மூலம் வழங்கப்படவுள்ளன.இதற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-38)

## ஐ.ஐ.எஸ்ஸின் பரிசில்தினம்

யாழ்ப்பாணம்,பெப்.10

ஐ.ஐ.எஸ் சிற்றி பல்கலைக்கழகத்தின் 16 ஆவது ஆண்டு நிறுவன தின விழாவும், பட்டமளிப்பு நிகழ்வும் நாளை காலை 9 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி கு. விக்னேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் போது சிறப்புச் சித்திஎய்திய மாணவர்களுக்கு சிறப்பு விருதுகளும் மற்றும் அதி உயர் விருதாக அமரர் வைத்திலிங்கம் குலரட்ணம் ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக எடிக்சல் நிறுவனத்தின் இலங்கை, மாலை தீவுக்கான பிராந்திய பிரதிநிதிகள் பிரமிளா -போல்ராஜ், சூரியா பிவில ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-16)

## போட்டிப் பரீட்சை புள்ளிகளில் பாதிக்கப்பட்டோர் விவரம் கோரல்

இலங்கை அதிபர் சேவை தரம் 3, இலங்கை அதிபர் சேவை 2:II நியமனம் தொடர்பாக 2006 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் பாதிப்புக்கு உள்ளாகியவர்களிடம் இருந்து கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவர்கள் தமக்கு நேர்முகப் பரீட்சையில் வழங்கப்பட்ட புள்ளிகளில் தமக்கு திருப்தி இல்லை அல்லது அநீதி இழைக்கப்பட்டிருகின்றது எனக் கருதுவோர் அதற்கான ஆதாரங்களுடன் கூடிய சத்தியக் கூற்றுடன் கல்வி அமைச்சுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''உதவிச் செயலாளர், கல்வி அமைச்சு இசுருபாய, பத்தரமுல்ல'' என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்க வேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் எம்.குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கான போட்டிப் பரீட்சையில் 82 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள், தமது திருப்தி இன்மைக்கான காரணங்களுக்கான ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

தரம் 3 அதிபர் சேவைக்கு நேர் முகப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளியாக 100 புள்ளிகள் வழங்குவதற்கு வகுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மாகாண கல்வித் திணைக்களங்களின் மட்டத்தில் நடத்தப்பட்டிருந்தன.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II இற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 113 புள்ளிக்கும் 154 புள்ளிக்கும் இடையே பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அதிபர் சேவை 2:II இற்கு நேர்முகப் பரீட்சையில் 150 புள்ளிகள் வழங்குவதற்கு வகைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உயர் நீதிமன்றம் கடந்த மாதம் 24 ஆம், 26 ஆம் திகதிகளில் வழங்கிய தீர்ப்பின் மூலம் இலங்கை அதிபர் சேவை தரம் 3 இலங்கை அதிபர் சேவை தரம் 2:II நியமனங்களால் பாதிப்புக்கு உள்ளானவர்களின் தகவல்கள் 2 வாரகால இடைவெளியில் பொருத்தமான பகிரங்க விளம்பரங்கள் மூலம் திரட்டப்பட்டு பத்து வாரங்களுக்குள்ளே நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சுக்கு பணித்திருந்தது. (ம-11)

## நிகழ்வுகள் இன்று

### ஆண்டு நிறைவு

எல்.பி.பினான்ஸ் நிறுவனத்தின் சுன்னாகம் கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு, பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் கிளையில் நடைபெறவுள்ளது. (ம-16)

### கலந்துரையாடல்

யாழ். முகாமையாளர் சம்மேளனம் நடத்தும், 'நகர அபிவிருத்தி திட்டமிடல்' சம்பந்தமான கலந்துரையாடல் மாலை 5 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் சிறப்புப் பேச்சாளராக ஆஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்திருக்கும் கட்டடக்கலை நிபுணர் எ. சந்திரஹாஸன் கலந்து கொள்வார். இந்த நிகழ்வில் பொறியியலாளர்கள், முகாமையாளர்கள், கல்விச் சமூகத்தினர் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் தேவைகள் தொடர்பாக தமிழ் அரசியல்வாதிகள் பேசுவதில்லை

## குற்றம் சாட்டுகிறார் அத்துலளிய ரத்னதேரர்

தமிழ் அரசியல் வாதிகள் தமிழ் மக்களின் தேவைகள் பற்றி எதுவும் பேசுவதில்லை அவர்கள் தனியே உரிமை வேண்டும். நிலம் வேண்டும் என்று மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார்கள்

யாழ்ப்பாணம், பெப். 10

தமிழ் அரசியல் வாதிகள் தமிழ் மக்களின் விவசாயம் பற்றியோ, மின்சாரம் பற்றியோ, சுகாதாரம் பற்றியோ எதுவும் பேசுவதில்லை அவர்கள் தனியே உரிமை வேண்டும். நிலம் வேண்டும் என்று மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என இந்து பௌத்த கலாசார பேரவையின் தலைவரும் சிகல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துலலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

நேற்று இந்து பௌத்த கலாசார பேரவையின் கந்தர் மடக் கிளையில் வைத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

''நஞ்சு வகை மருந்துகளைப் பயன்படுத்தி விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதனை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் இல்லாவிடில் அனுராதபுரம், பொலநறுவை போன்ற இடங்களில் இவ்வாறான நஞ்சுப் பசளைகளைப் பயன்படுத்தியதால் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் இங்கும் இவ்வாறான பாதிப்பு ஏற்படாத வண்ணம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் இயற்கை பசளையை பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் சிங்கள மக்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் முகமாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ். மத்திய கல்லூரியும் கொழும்பு லலித் அத்துலத் கல்லூரியும் ஏப்ரல் முதல் வாரத்துக்குள் கிரிக்கெட் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன. இந்த நிகழ்வு தமிழ் சிங்கள இனங்களுக்கிடையே ஒரு பாலமாக அமையும். கிரிக்கெட் மூலம் முரளிதரனை சிங்கள மக்களும் ஆதரிப்பதுபோல இன்னும் புதியபுதிய துறைகளில் தமிழர்கள் வந்தால் அவர்களையும் சிங்கள மக்கள் ஆதரிப்பார்கள் - என்றார். (த-13-14)

# முல்லை. முகத்துவாரத்தில் இல்மனைற் தொழிற்சாலை

## இடத்தெரிவு முயற்சியில் நாமல்

கிளிநொச்சி, பெப்.10

முல்லைத்தீவு முகத்துவாரம் பகுதியில் இல்மனைற் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

முகத்துவாரம் பகுதியில் உள்ள மணலில் அதிகளவில் இல்மனைற் வளம் காணப்படுகின்றது. எனவே அதனைப்பிரித்தெடுக்கும்தொழிற்சாலையொன்றை முகத்துவாரத்தில் அமைக்கக் கனிய வள அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த தொழிற்சாலையை அமைப்பதற்கான இடமொன்றையும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவு செய்துள்ளார்- என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் முகத்துவாரம் பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வருகை தந்தார். இதன் போது அவர் இல்மனைற் தொழிற்சாலை நிறுவுவதற்குரிய இடமொன்றை தெரிவு செய்துள்ளார். எனினும் குறித்த காணியின் உரிமையாளரின் விருப்பத்தை பொறுத்தே அந்த இடத்தில் தொழிற்சாலை அமைப்பதற்கான இறுதி முடிவு எடுக்கப்படும். இந்தப் பகுதியில் இல்மனைற் தொழிற்சாலை அமைந்தால் ஏராளமான இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கலாம்.

முகத்துவாரம் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள தமிழ், சிங்கள மக்களையும் நாமல் ராஜபக்ஷ சந்தித்து அவர்களின் பிரச்சனை தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்- என்றார். (ந)



13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 'துன் ஹெல தேசிய இயக்கத்தின்' உறுப்பினர்கள் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னாள் நேற்று வியாழக்கிழமை துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர்.

# தம்பதியினரை வாளால் வெட்டி தங்கச் சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.10

கொள்ளையடிப்பதற்காக வீட்டுக்குள் காத்திருந்த கொள்ளையர்கள் வீட்டுக்குள் இருந்த கணவன் மற்றும் மனைவியை வாளால் சரமாரியாக வெட்டிவிட்டு மனைவியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்ற சம்பவம் பொலிகண்டி கிழக்கில் நேற்றுமுன்தினம் அதிகாலை 5.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

வடமராட்சி பொலிகண்டி கிழக்குப் பகுதியில் வீடொன்றில் கொள்ளையிடுவதற்காக கத்திகள், வாள்கள், பொல்லுகள் சகிதமாக உட்புகுந்த கொள்ளையர்கள் சமையலறையின் கதவு வாசலில் வைத்து வீட்டில் தங்கியிருந்த கணவனையும், மனைவியையும் வாளால் வெட்டிவிட்டு மனைவியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக்கொண்டு தப்பினார்கள்.

அதிகாலைவேளை வீட்டு உரிமையாளராகிய இருவரும் நித்திரைவிட்டு எழுந்துள்ளனர். மனைவி சமையலறைக்குச் சென்றுள்ளார். சமையலறையின் லைற்றை போட முனைந்த போது சமையலறைக்குள் பதுங்கியிருந்த கொள்ளையர்கள் குறித்த வயோதிபப் பெண் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மனைவியின் அலறல் சத்தம் கேட்டு அப்பகுதிக்கு ஓடிச்சென்ற கணவன் மீதும் மனைவி மீதும் கைகளில் வைத்திருந்த வாள்களால் கொள்ளையர்கள் சரமாரியாக வெட்டியதுடன் மனைவியின் கழுத்திலிருந்த சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பியுள்ளனர்.

இச்சம்பவத்தில் பொலிகண்டி கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி கோபாலசுந்தரம் (வயது-61), கோபாலசுந்தரம் வசந்தகுமாரி (வயது-57) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்கள் இருவரும் உடனடியாக வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதுதொடர்பான விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரும் இதேவீட்டில் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு கொள்ளையடித்தபணம் உட்பட பொருள்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (த-15-8)

# பச்சை 'ரீசேட்டா'? ஐயோ வேண்டாம்!

## பதவி போய்விடும் என்கிறார் கருணா

பச்சை 'ரீசேட்' அணிந்தால் தமது அமைச்சுப் பதவியை ஜனாதிபதி பறித்துவிடுவார் எனத் தெரிவித்திருக்கின்றார் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு நேற்று சைக்கிள்கள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பிரதியமைச்சர் முரளிதரனுக்கு மாவட்ட இளைஞர் சங்கம் பச்சை 'ரீசேட்' ஒன்றையும், தொப்பியொன்றையும் நினைவுச்சின்னமாக வழங்கியது. 'ரீசேட்'டின் நிறம் பச்சை என்பது குறிப்பிடத்தக்கது. இதனைப் பெற்றுக்கொண்ட பிரதியமைச்சர் சிரித்துக்கொண்டே ....'இதனை நான் அணிந்தால் சிலவேளை ஜனாதிபதி எனது அமைச்சுப்பதவியைப் பறித்துவிடக் கூடும்'' எனக் கூறியுள்ளார்.

# கடற்படையினரால் வீடுகள் கையளிப்பு

வடமராட்சி, பெப். 10.

பருத்தித்துறை முனைப் பகுதியில் கடற்படையினர் வசம் இருந்த இரு வீடுகள் உரிமையாளர்களிடம் நேற்று நண்பகல் கையளிக்கப்பட்டன.

வடமாகாண கடற்படைத்தளபதி றியல் அட்மிரல் ஆர்.சி.விஜய குணரத்னவின் பணிப்பின் பேரில் காங்கேசன்துறைக் கட்டளைத் தளபதி செ.டி. கமகே, வீடுகளின் உரிமையாளர்களான செல்வி அருள்நந்தி, எம். தர்மேந்திரன் ஆகியோரிடம் கையளித்தார். (ஒ-8)

# அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கைக்கு அழிவுகள்

## தமிழக விரிவுரையாளர் அருட்திரு.டேவிற் இராஜேந்திரன்

இயற்கையை அழிக்காத பொருளாதாரத்தை, மக்களைப் பிரிக்காத பொருளாதாரத்தை, வறுமையை மாற்றும் பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கு முதற்படியாக இந்த உற்பத்தி முயற்சிகள் வழிசமைக்கும்

அக்கராயன், பெப்.10

அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கை பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளது.

இவ்வாறு தமிழ் நாடு இறையியல் கல்லூரி விரிவுரையாளரான கலாநிதி அருட்திரு டேவிற் இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கோணாவில் கிராமத்தில் தும்புத் தொழிற்பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு மத்திய வங்கி வழங்கிவரும் ஆதரவு பாராட்டுக்குரியது.

இயற்கை தரும் பொருள்களில் இருந்து பொருள்களை உற்பத்தி செய்கின்றீர்கள். கழிவுப்பொருள்களைப் பயன்படுத்தி அதில் வருமானம் ஈட்டுவது என்பது மிகச்சிறப்பானதொன்று. ஏனென்றால் இன்று பொருளாதாரம், அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கை பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாக சூழலியலாளர்கள் கூறுகிறார்கள்.

இயற்கை அழிவுகள் அடிக்கடி ஏற்படக்கூடிய அளவுக்கு நிலைமை சென்றுகொண்டிருக்கிறது. இனி வரும்காலங்களில்புதியபொருளாதாரத்தை உருவாக்க நாம் முயற்சிக்க வேண்டும். இயற்கையை அழிக்காத பொருளாதாரத்தை, மக்களைப் பிரிக்காத பொருளாதாரத்தை, வறுமையை மாற்றும் பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கு முதற்படியாக இந்த உற்பத்தி முயற்சிகள் வழிசமைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க - 410)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மேலும் மூன்று பஸ்கள் சேவைக்கு

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பயணிகளின் வசதிகருதி, இலங்கை போக்குவரத்துச் சபையின் மேலுமொரு பஸ், தனியார் துறை பஸ் இரண்டும் போக்குவரத்தில் இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய அதிவேக மார்க்கத்தில் தற்போது போக்குவரத்தில் ஈடுபடும் இ.போ.ச மற்றும் தனியார் துறை பஸ்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டியொன்று புதிதாக ஈடுபடுத்தப்பட்டுள்ளமைக்கு அமைய, இ.போ.ச பஸ் வண்டிகளின் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது. இ.போ.சபைத் தலைவர் சசிவெல்கமவின் பணிப்புக்கு அமைய இந்த புதிய பஸ்கள் போக்குவரத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் மேலும் இரு பஸ்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தும் எதிர்பார்ப்பு நிலவுவதாகவும் கொழும்புப் பிரதேச தலைமை முகாமையாளரான திலக் பிரியந்த விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே கடந்த 4 ஆம் திகதி மேலும் இரண்டு தனியார்துறை பஸ்வண்டிகள் போக்குவரத்தில் ஈடுபடுத் தப்பட்டதையடுத்து, அதி வேக நெடுஞ்சாலையில் தனியார்துறை பஸ்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் முகாமையாளர் சந் திரசிறிவீரசேகர [illegible] அமைய இந்த பஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடப்பில் போடப்பட்டுள்ள சிறுவர் ஆஸ்பத்திரி விவகாரம்

## வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், பெப்.10
வடக்குக்கான நவீன சிறுவர் வைத்தியசாலை அமைக்கும் விவகாரம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. வடக்கில் சிறுவர் வைத்தியசாலை அமைக்க 120 மில்லியன் ரூபா ஒதுக்குமாறு கோரியிருந்தும் இது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

கடந்த 14.05.2009 இல் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு சுகாதார அமைச்சுக்கு தங்களால் தெரிவிக்கப்பட்டபோதும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஜனாதிபதிக்கு இந்த விட யம் தொடர்பாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோரிக்கை விடுத்து மூன்று வருடங்கள் கடந்த போதும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.**

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
நவீன சிறுவர் வைத்தியசாலை அமைப்புத் திட்ட முன்மொழிவு சமர்ப்பித்தும் நிதி ஒதுக்கீடு இல்லை.

கோரிக்கை விடுத்து மூன்று வருடங்கள் கடந்த போதும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

இந்த வைத்திய சாலைக்கு வடக்கு மாகாண அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் 5.10.2011 இல் கடிதம் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளார்.

ஏனெனில் சிறுவர் வைத்தியசாலை விடயம் என்பது விசேட வைத்தியசாலை எனவும் இது மத்திய அரசின் நேரடி நிதி ஒதுக்கீட்டின் கீழ் வருவது என்றும் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலும் சிறுவர் வைத்தியசாலை அமைக்க தாங்கள் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு முன்வைத்த திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

2012 வடக்கு அபிவிருத்தி ஆண்டென கூறப்படுகின்றது. இதற்காகப் பல மில்லியன் ரூபா செல விடப்படுகின்றது.

வடக்கு போருக்குப் பின்னர் மீளக்கட்டியமைக்கப்பட்டு வருகின்றது.

வடக்கில் 230 படுக்கையறைகளைக் கொண்டதும் நவீன மருத்துவ சாதனங்களுடன் கூடிய சிறுவர் வைத்தியசாலை தங்களது காலத்தில் அமைக்கப்பட வேண்டும்.

சிறுவர்களின் நலனில் தாங்கள் அதிகமான அக்கறை உள்ளவர் என்ற வகையில் கூடிய கவனம் எடுத்து இதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.- என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர், அரச அதிபர், பிரதம செயலாளர் (வடக்கு), செயலாளர், சுகாதார அமைச்சு (வடக்கு) ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம)

## தேங்காயுடன் வந்த லொறிக்குள் முதிரை மரக்குற்றிகள் மீட்பு



தேங்காய் ஏற்றிக்கொண்டு வந்த லொறியினுள் இருந்து முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன. மிருசுவில் பொலிஸ் சோதனை சாவடியில் வைத்துக் கடந்த வெள்ளிக்கிழமை இவை மீட்கப்பட்டுள்ளன.

இரவு நேரம் தேங்காய் ஏற்றிவந்த லொறியைச் சோதனையிட்டபோது அதனுள் பெருமளவு மரக்குற்றிகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

லொறிச் சாரதியைக் கைது செய்து லொறியையும் சாரதியையும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

லொறிச் சாரதி மீது வழக்குத் தாக்கல் செய்து சனிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் முன்பாக முன்னிலைப்படுத்தினர்.

இதேவேளை அனுமதிப் பத்திரமும் இலக்கத் தகடுமின்றி விறகு ஏற்றிவந்த வாகனத்தையும் மிருசு வில் சோதனை சாவடி பொலிஸார் பிடித்து கொடி காமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (ம-9)

## முளைத்த வெங்காயம் சந்தைக்கு

யாழ்.குடாநாட்டின்அனேகமான மரக்கறிச் சந்தைகளில் முளைத்த வெங்காயங்களே அதிகளவில் விற்கப்படுதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

கடந்தகால போகத்தின் போது அறுவடைசெய்த வெங்காயத்தை விவ சாயிகள் விற்பனைக்குப் பயன்படுத்தாது வைத்தனர். அந்த வெங்காயங்களே முளைவிட்டுள்ளன . அந்த வெங்காயங்களை சந்தைப்படுத்துவதில் தற்போது விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர். குறிப்பாக திருநெல்வேலி ,மருதனார்மடம்,சுன்னாகம் , கல்வியங்காடு போன்ற மரக்கறி சந்தைகளில் இவ் வாறான வெங்காயங்களே கூடுதலாக விற்கப்படுகின்றன.

வெங்காயங்களை கூடுதல் விலைக்கு விற்பதற்காகப் பெரும்பாலான விவசாயிகள் பாதுகாத்து வைத்திருந்தனர். அண்மையில் பெய்த மழை மற்றும் கடும் குளிர் காரணமாக அந்த வெங்காயங்கள் முளைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக கூடுதலான விவசாயிகள் பெரும் நஷ்ரமடைந்துள்ளனர்.(ந-17)

## கிராமிய வங்கிகளில் பெற்ற கடனை செலுத்தாதோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.10
நீண்டகாலமாக கிராமிய வங்கிகளின் மூலம் கடனைப் பெற்று அதனை மீளச் செலுத்தாதவர்களிடமிருந்து வழங்கப்பட்ட கடனை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கடனை அறவிடும் கிராமிய வங்கிப் பணியாளர்களுக்கு, எதிர்வரும் காலங்களில் கிராமிய வங்கிகளின் மூலம் பெறப்படும் வருமானத்தின் ஒருபகுதி ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படவுள்ளது.

அதே நேரம் நீண்டகாலமாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் பெற்று, அதனை மீளச் செலுத்தாதவர்கள் மீது, சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கெனக் கூட்டுறவுத் திணைக்களத்தால் தனிப்பிரிவு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சகல கூட்டுறவு நிலையங்களும் கடன் பெற்றவரது ஆவணங்கள், கோவைகள் என்பவற்றை சமர்ப்பித்தவுடன், இதற்கான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**சட்ட நடவடிக்கைகளின் மூலம் 200 மில்லியன் ரூபாவரை மீளப்பெற முடியும் என்று யாழ்.மாவட் டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவித்தார்.**

இந்தச் சட்ட நடவடிக்கைகளின் மூலம் 200 மில்லியன் ரூபா வரை மீளப்பெற முடியும் என்று யாழ்.மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக தவணை தப்பிய கடன்களை வைத்திருப்போர் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-16-13)

## உரிய நேரத்தில் அழைப்பு கிடைக்காமையே காரணமாம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிக் கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொள்ளாமைக்கு உரிய வேளையில் அழைப்புக் கிடைக்காமையே காரணம்.

இவ்வாறு நிக்கொட் திட்டப்பணிப்பாளர் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிக்கொட் செஞ்சிலுவை அதிகாரிகள் ஜனாதிபதியைப் புறக்கணித்தனர் என்றவாறாக உதயனில் வெளியாகியிருந்த செய்தி தொடர்பாக அவர்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை விடுதிக்கட்டட திறப்புவிழா நிகழ்வின் அழைப்பிதழ் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறவில்லை. அந்தக் காரணத்தாலேயே விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. ஜனாதிபதியைப் புறக்கணிக்க வேண்டுமென்ற எந்த நோக்கமும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணம் கச்சேரியில் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண் டேன் என்பதையும் குறிப் பிட விரும்புகிறேன்- என் றுள்ளது.

திட்டப் பணிப்பாளர் ந.ரஞ்சினி ஒப்பமிட்டு இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம)

## மடம் பாவனைக்கு

சுழிபுரம்,பெப்.10
சுழிபுரம் திருவடிநிலை கடற்கரையில் புதிதாகக் கட்டப்பட்ட சுடலை மடம் பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

சடலங்களைக் கொண்டு செல்பவர்கள் ஆறுதல் அடையவும் அந்தியேட்டிக் கருமங்கள் நிறைவாக்கவும் இந்த மடம் பயன்படவுள்ளது.

இந்த மண்டபம் பிரதேச சபையின் மேற்பார்வையில் கட்டப்பட்டது.

பல வசதிகள் நிறைந்த இடமாக இதனை மாற்றத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளது. (ம-28)

## குப்பைகளை ஏற்றிச் செல்லும் ரிராக்டர்களால் நெருக்கடி

யாழ்ப்பாணம், பெப் 10
யாழ். மாநகர சபையின் டிராக்டர்கள் பாடசாலை நேரங்களில் குப்பைகளை ஏற்றிச் செல்வதால் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.

காலைவேளையில் நெருக்கடி மிகுந்த நேரத்தில் திறந்த டிராக்டர்களில் தினமும் குப்பைகள் கொண்டு செல்லப்படுகின்றன.

இதனால் காற்றில் அள்ளுப்படும் குப்பைகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீதும் கொட்டப்படுகின்றன.


இதனால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பெரும்பாலும் அரசடி வீதியூடாகவே தினமும் இந்த டிராக்டர்கள் செல்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**காற்றில் அள்ளுப்படும் குப்பை கூளங்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மீது கொட்டப்படுகின்றன.**

குறித்த வீதியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றுடன் யாழ் இந்துக் கல்லூரி மாணவர் [illegible] உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ். போதனா வைத்தியசாலை தாதியர்களும் பணிப்புறக்கணிப்பு




யாழ்ப்பாணம், பெப் 10
யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள் தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறை வேற்றக் கோரி நேற்று ஒரு மணிநேர பணிப்புறக்கணிப்பை மேற் கொண்டனர்.

நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகிய இந்தப் புறக்கணிப்புப் போராட்டம் ஒரு மணிவரை இடம்பெற்றது.

இதன்போது, மருத்துவமனைத் தாதிய உத்தியோகத்தர்கள் தங்கள் கோரிக்கையைத் தாங்கிய பதாகைகளைத் தாங்கி அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொண்டனர்.

மருத்துவமனையில் சேவை பெற வரும் மக்களின் நலனைப் பாதிக்காத வகையில் முக்கியமான விடுதிகளில் சில தாதியர் பணிபுரிய இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் போன்றே அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தினர் நாடளாவிய ரீதியில் மருத்துவமனைகளில் ஒரு மணிநேர பணிப்புறக்கணிப்பை கடைபிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபையின் யாழ். அலுவலக ஒப்பந்த ஊழியருக்கு நியமனம்

### மின்சக்தி அமைச்சர் உறுதியளிப்பு

**இலங்கையில் ஏனைய பிரதேசங்களினதும் ஒப்பிடுகையில் வடபகுதி பின்னோக்கிச் செல்வதையே காணமுடிகிறது.**

யாழ்ப்பாணம், பெப்.10
மின்சாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் ஊழியர்களில் அனுபவம் உள்ளவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மின் சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க உறுதியளித்துள்ளார்.

மின்சார சபைக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்கியுள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் 60 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கந்தர்மடத்தில் அமைந்துள்ள ஈயூலங்கா போரம் நிறுவனத்தின் ஆண்டு நிறைவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒப்பந்த அடிப்படைகளில் ஐந்து வருடங்களாக பணியாற்றிய போதும் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை.

தற்போது ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே நியமனத் துக்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்.

ஊழியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதிக்கு ஏற்ப நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் பல இடங்களுக்குச் சென்றுள்ளோம். ஆனால் இலங்கையில் ஏனைய பிரதேசங்களினதும் ஒப்பிடுகையில் வடபகுதி பின்னோக்கிச் செல்கிறது. அபிவிருத்தியை நோக்கி செல்வதற்கு மென்மேலும் சிறந்த சேவையாற்ற வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் 8 வீதம் வளர்ச்சியடைகிறது. ஆனால் இலங்கையில் 20 வீதம் வளர்ச்சி அடைந்து வருகிறது. விடுபட்ட அபிவிருத்தியை மிகக் குறுகிய காலத்தில் அடைய வேண்டும்.

பொருளாதாரத்துக்கு நல்வழிகளை நாடவேண்டும். சுற்றாடலையும் பாதுகாத்துக் கொண்டு அபிவிருத்தியின் பாதையில் செல்ல வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் நிறுவன பணிப்பாளர் எம்.ரி.ராமச்சந்திரன், மின்சார சபை ஊழியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம- 13-16)

# சமரசமாகத் தீர்க்கப்பட்ட ஆயிரத்து ஒரு பிணக்குகள்

**பெண் உறுப்பினர்கள் எவரும் இந்தச் சபைக்கு நியமிக்கப்படவில்லை.**

வடமராட்சி,பெப்.10
கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபைக்கு கடந்த வருடம் பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆயிரத்து 312 பிணக்குகளில், 1001 பிணக்குகள் இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் சமரசமாகத் தீர்த்துவைக்கப்பட்டன.

75 பிணக்குகளின் விசாரணைக்கு இருதரப்பினரும் சமுகமளிக்காமையினால் அவை நிராகரிக்கப்பட்டன.

எஞ்சிய பிணக்குகளில் 105 பிணக்குகள் இன்னமும் தீர்க்கப்படமுடியாத நிலையில் உள்ளன. எஞ்சிய பிணக்குகள் யாவும் விசாரணையில் உள்ளன.

தீர்வுக்காக சமர்ப்பிக்கப்படும் பிணக்குகளில் காணி, பணம் கொடுக்கல் வாங்கல்கள், குடும்பப் பிரச்சினைகள், வங்கிக்கடன்கள் ஆகிய பிரச்சினைகள்கொண்ட பிணக்குகளே அதிகமாகும் என கோப்பாய் மத்தியஸ்தர் சபைத் தலைவர் இ.மயில்வாகனம் தெரிவித்தார்.

இந்த மத்தியஸ்தர்சபை விசாரணைகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுவருகின்றன. சபை உறுப்பினர்கள் குழுக்களாகப் பிரிந்து பிணக்குகளை விசாரணை செய்தால் பிணக்குகளை இலகுவில் தீர்க்கக்கூடியதாக இருக் கின்றது என்று கூறப்படுகிறது.

இந்தச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள 23 உறுப்பினர்களில் 17 உறுப்பினர்களே தற்போது பணிபுரிகின்றனர். எஞ்சிய 6 உறுப்பினர்களில் 2 உறுப்பினர்கள் இறந்துள்ளனர். 4 உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக உறுப்பினர் பதவிகளை இழந்துள்ளனர். பெண் உறுப்பினர்கள் எவரும் இந்தச் சபைக்கு நியமிக்கப்படவில்லை. (ம-8)

## பொலிஸாரைத் தாக்க முயன்றோர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,பெப்.10
மதுபோதையில் பொலிஸாரைத் தாக்க முற்பட்ட இரண்டு பேரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார்.

யாழ். நகர்ப் பகுதியில் மதுபோதையில் நின்ற இருவரும் அநாகரிகமாகச் செயற்பட முற்பட்டபோது, யாழ்.பொலிஸார் அதனைக் கண்டித்துள்ளனர்.

அதன்போதே இருவரும் பொலிஸாரைத் தாக்க முற்பட்டுள்ளனர் என்று பொலிஸார் யாழ். நீதிமன்றில் நீதிவானிடம் தெரிவித்தனர். (த-4)



வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, வத்திராயன் பகுதிகளைச் சேர்ந்த 105 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு பாசிக் நிறுவனம் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கிய கடற்றொழில் உபகரணங்களை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் வழங்குகிறார். (ம-8)

# நெடுந்தீவு துறைமுகத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை

### பிரதேச சபைத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப்.10
நெடுந்தீவுத் துறைமுகத்தில் படகுகள் உட்செல்வதில் இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை.

வடதாரகை துறைமுகத்தினுள் வந்து நிறுத்தக் கூடியதாக உள்ளது. நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஸியன் இவ்வாறு தெரிவித்தார்.

துறைமுகப் பகுதியில் தற்சமயம் ஆழமாக்கும் வேலைகள் இடம்பெற்றதை அடுத்து படகுகள் தரை தட்டும் நிலைமை இல்லை.

துறைமுகப் பகுதியில் மேலும் சில வேலைகள் மேற்கொள்வது துறைமுக அபிவிருத்திக்கு உகந்ததாக இருக்கும்.

துறைமுகத்தின் உட்பகுதியில் ஆழம் குறைவாக இருந்தமையால் படகுகள் துறைமுகத்தில் நுழைவதில் சிரமங்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் ஆழமாக்கப்பட வேண்டும் எனவும் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்து துறைமுகம் ஆழமாக்கும் பணிகள் இடம்பெற்று கடந்த மாதத்தில் பணிகள் யாவும் பூர்த்தியாகியிருந்தன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## சேதமடைந்த வீதி குறித்து கவனம் எடுப்போர் எவருமில்லை

புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் இருந்து நிலாவரைக்குச் செல்லும் வீதி சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம்வரை பொது மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு பழுதடைந்து குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

கடந்த கால யுத்தத்தைத் தொடர்ந்து சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக திருத்தப்படாது காணப்படும் இந்த வீதியில் இந்தப் பகுதியில் வாழும் பல நூற்றுக் கணக்கான மக்களும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகளும் நாளாந்தம் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட வீதியில் காணப்படும் பள்ளங்களில் மழை பெய்யும் காலத்தில் தேங்கும் நீரால் பல விபத்துகள் ஏற்படுவதுடன் வீதியால் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டும் வருகின்றனர்.

இந்த வீதி தொடர்பாக எவரும் கவனத்தில் எடுக்கவில்லை என்றும் உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் உரிய கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-86)

## பம்பாய் வெங்காயம் அமோக விளைச்சல்

யாழ்ப்பாணம், பெப்.10
அராலியில் பம்பாய் வெங்காயம் இம்முறை நல்ல விளைச்சல் கண்டுள்ளது.

தற்போது இந்தப் பம்பாய் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு சந்தைக்கு விற்பனைக்காக எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்த வெங்காயம் சந்தைகளில் போதியளவு வந்து சேர்வதால் அவற்றின் விலையும் திடீரென சரிந்து காணப்படுகின்றது.

அதன்னைவிட தெற்கே இருந்தும் அதிகளவில் பம்பாய் வெங்காயம் குடாநாட்டுக்கு எடுத்துவரப்படுகின்றது.

இந்த வெங்காய வருகையால் சந்தைகளில் அவற்றின் விலை கிலோ 40 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது. குடாநாட்டில் பம்பாய் வெங்காயச் செய்கைக்கு அராலி பிரதேசம் ஏற்றதாக இருக்கும் என்று பலதரப்பட்டோரும் கூறியுள்ளனர். (ம-17)

## சாவற்கட்டில் கௌரவிப்பு

நவாலி,பெப்.10
சாவற்கட்டு கிராமத்தில் புலமைப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள் ஆகியோருக்கான கௌரவிப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

நிலையத் தலைவர் கே.தர்மசிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பணிபுரிந்து இந்த வருடம் முதல் தெல்லிப்பழை பிரதேச செயலராக இடம்மாற்றலாகிச் சென்ற அன்ரன் யோகநாயகம் எழிலரசியின் பிரியாவிடை, சண்டிலிப்பாயின் தற்போதைய பிரதேச செயலர் எஸ்.முரளீதரனின் வரவேற்பு, கல்விகற்கும் மாணவர்களுக்கான உதவி [illegible] இடம்பெற்றன. (ம-100)

# கொலைச் சந்தேக நபருக்கு நிபந்தனையுடன் பிணை

யாழ்ப்பாணம், பெப்.10
கத்தியால் குத்தி ஒருவரைக் கொலை செய்ததோடு பிறிதொரு பெண்ணுக்குக் காயம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இளைஞர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பூநகரி முக்கொம்பன்பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில்நிலுவையில் உள்ளது.

சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்கக் கோரி யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்தப் பிணை விண்ணப்பம் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி பூநகரி முக்கொம்பன் பகுதியிலுள்ள வீடொன்றில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. அங்கு வைத்து பொன்னம்பலம் விஜயரத்தினம் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகவும் குடும்பப் பெண்ணான பரமேஸ்வரன் சுசீந்திரா என்பவருக்கே கத்தியால் காயம் விளைவித்ததாகவும் தெரிவித்து இதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் பூநகரிப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அவர் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு அது தொடர்பான விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்தச் சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்கக் கோரி இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ.எஸ். அற்புதராஜ் நீதிபதியிடம் பிணை விண்ணம் செய்திருந்தார்.

விண்ணப்பம் பற்றி ஆராய்ந்த நீதிபதி சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

சந்தேகநபர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார். பிணையாளிகள் தாம் வசிக்கும் கிராம அலுவலரிடமிருந்து அவரது பிரிவில், தாம் நிரந்தரமாக வசித்து வருவதையும் பிணைப்பணம் பறிமுதல் செய்யப்படும் பட்சத்தில் அதனை ஈடு செய்யக் கூடியதான உரிய பொருளாதார வசதியைக் கொண்டிருப்பதாகவும் உறுதிப்படுத்திய பத்திரத்தை மன்றில் சமர்ப்பிக்குமாறும் வசிப்பிட முகவரி மாறும் பட்சத்தில் அதுபற்றி மன்றுக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் கூறினார். ஒவ் வொரு மாதத்தினதும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பூநகரி பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் வெள்ள அபாயம்: முகாமிலுள்ள மக்கள் அவதி

மட்டக்களப்பு,பெப்.10

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாகப் பல இடங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மீளக்குடியேற்றம் செய்யப்படாமல் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சம்பூர் மக்கள் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பும் கடலரிப்பும் ஏற்பட்டுள்ளமையால் மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பரவலாக நடைபெற்றுவந்த நெல் அறுவடை வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த மழையால் தூர இடங்களிலிருந்து பாடசாலைகளுக்கு வரும் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

**மழை தொடர்ந்து நீடிக்குமானால் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.**

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இரண்டு மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வருகையும் நேற்றுமுன்தினம் குறைவடைந்திருந்தது.

பல இடங்களில் உள்ள வீடுகளினுள் வெள்ளம் புகுந்துள்ளமையால் அங்கு வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு தொடர்ந்து மழை நீடிக்குமானால் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயரக்கூடிய வாய்ப்பு இருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

விளைந்த வேளாண்மைகள் இந்த மழையால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர். கடலில் காற்றுடன் கூடிய கொந்தளிப்பு காணப்படுகின்றது. மீனவர்கள் தொழிலுக்குச் செல்லமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். மீன்களின் விலையும் அதிகரித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பகுதிகளில் அதிகமான வேளாண்மைகள் நீரில் மூழ்கியுள்ளன. அறுவடைக்குத் தயாரான நிலையிலேயே மழைப் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-31)

## மலையகத்தின் சீரழிவு

# ஓட்டோவிலும் போதைப்பொருள்

நுவரெலியா, பெப்.10

நகரப்புறங்களில் காளான்களைப் போல முளைத்துள்ள மதுபானசாலைகளால் பல குடும்பங்கள் சீரழிந்துள்ளன. ஒரு சில குடும்பத்தினர் போதைக்கு அடிமையாகித் தங்களையே அற்ப ஆயுளில் அழித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

இரவு நேரங்களில் திறக்கப்பட்ட உணவகங்கள் மூலம் பயணிகளும், பொதுமக்களும், தோட்ட மக்களும் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர்; பெண்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

உணவகங்களில் பணிபுரியும் வேலையாள்கள் மூலம் பல இன்னல்களும் நிகழ்கின்றன. முறையாகவும் பாதுகாப்பாகவும் உணவுகள் தயாரிக்கப்படுவதில்லை.

இரவு நேரங்களில் உணவகங்களுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஓட்டோக்களில் திருட்டுத்தனமாக போதைப் பொருள்கள் விற்கப்படுகின்றன. இரவு நேரங்களில் உணவகங்களை திறப்பதாயின், அவற்றுக்கான உரிய பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தை நகரசபையில் பெற்றிருக்க வேண்டும் - என்று தெரிவித்துள்ளது.

(ச)

# சந்தேக நபர்களுக்கு மீண்டும் விளக்கமறியல்

நுவரெலியா,பெப்.10

மாணிக்கக்கல் வியாபாரியொருவரிடமிருந்து மாணிக்கக் கற்களை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 11 பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாவனெல்லை நீதிவான் ஸ்ரீனித் விஜேசேகர முன்னிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)


# பஸ் விபத்தில் 15 பேர் காயம்

**பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.**

மட்டக்களப்பு,பெப்.10

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்று விபத்திற்குள்ளானதில் 15 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலநறுவை மாவட்டத்தின் வெலிக்கந்தை எல்லைப்பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்த விபத்து இடம்பெற்றதாகவும், இந்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியை விட்டு விலகிச்சென்று குடை சாய்ந்து விபத்திற்குள்ளானதாக வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்தனர். (ச)



மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதனை மஞ்சந்தொடுவாய் விளையாட்டு மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தப் பொலிஸ் பரிசோதனைணை மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜந்த சமரகோன், காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன ஆகியோர் பார்வையிட்டனர்.

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குக!

மலையகப் பகுதிகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவை சந்தித்த மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் மலையகத்தில் தொடர்ச்சியாக நிலவிவரும் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காலதாமதமின்றி நிவர்த்திக்கப்படவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ச)

# ஹெரோயின் வைத்திருந்தவர் கைது

அம்பாறை,பெப்.10

அம்பாறை, அட்டாலஅரந்தலாவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் (வயது-44) சிவனொளிபாதமலைக்கு யாத்திரைக்காக வந்த சமயம் மஸ்கெலியா நகரில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார்.

மஸ்கெலியா விசேட அதிரடிப் படையினர் சந்தேகநபரை கைதுசெய்து சோதனையிட்டபோது, அவர் 90 கிராம் ஹெரோயின் வைத்திருந்தமை தெரிய வந்தது.

அத்துடன், அந்த போதைப் பொருளை சிவனொளிபாத மலையில் விற்பனை செய்ய கொண்டு வந்தார் எனக் கூறியதையடுத்து அவரை மஸ்கெலிய பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

(ச)

# அறுவடை இயந்திரம் இயக்க சாரதி இல்லை

## விவசாயிகள் கவலை

மட்டக்களப்பு,பெப்.10

கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை அறுவடைக்குரிய நவீன ரக இயந்திரத்தை செலுத்துவதற்கு பயிற்சி அனுபவமற்ற சாரதிகள் போதியளவு இல்லாத காரணத்தினால் தாம் இந்தியாவிலிருந்து சாரதிகளை வரவழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாய செய்கைக்காக பயன்படுத்தப்படும் நவீன ரக இயந்திரங்களை செலுத்துவதற்கு சாரதிகள் உள்ளூரில் இருந்தாலும் அவர்களுக்கு பயிற்சியும் தொழில்நுட்ப அனுபவமும் போதியளவு இல்லாத காரணத்தினாலே இந்தியாவிலிருந்து சாரதிகளைதாம் வரவழைக்க வேண்டியிருப்பதாக விவசாயிகளும் இயந்திர உரிமையாளர்களும் தெரிவிக்கின்றனர்.

இந்திய சாரதிகள் முகவர்கள் ஊடாக அழைத்து வரப்பட்டாலும் சுற்றுலாப் பயணிகள் விசாவில் நாட்டிற்குள் நுழைவதால் சட்ட ரீதியான பிரச்சினைக்கு இப்போது முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்தவாரம் 6 பேர் மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேசத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் குற்றப் பணம் அறவிடப்பட்டு எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**இந்திய சாரதிகள் சுற்றுலாப் பயணிகள் விசாவில் நாட்டுக்குள் நுழைவதால் சட்ட ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.**

இந்தியாவிலிருந்து இலங்கைவரும் இத்தகைய சாரதிகள் சுற்றுலாப் பயணிகள் விசாவில் வராமல் வேலை அனுமதிப்பத்திரம் பெற்று வந்தால் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க [illegible] கின்றனர். (ச)

# அரச உத்தியோகத்தர் சங்கம் பாதுகாக்கப்பட வேண்டியது

## அரியநேத்திரன் எம்.பி.கூறுகிறார்

மண்டூர், பெப். 09

வடக்கு,கிழக்கில் இணைப்பாக இருக்கக்கூடிய முன்மாதிரியான சங்கம் வடக்கு, கிழக்கு அரச உத்தியோகத்தர் சங்கம் மட்டுமே. இது தொடர்ச்சியாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற வடக்கு, கிழக்கு அரச உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகசபை உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் வடக்கு, கிழக்கு அரச உத்தியோகத்தர் சங்கத்தின் ஒழுங்கில்தான் கடந்த மேதினக் கூட்டம் இடம்பெற்றது. அவர்கள் கூறிய பல பிரச்சினைகளில் கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதற்குப் [illegible] மாகாணத்திலே இருந்த பல ஊழியர்களை ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்திற்குள் இடமாற்றம் செய்வோம் என்று கூறி யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்திருக்கின்றார்கள்.

அதனால் அவர்களுக்கு உளரீதியான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. மனைவி, பிள்ளைகள் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பல இடங்களில் பணிபுரிகின்றார்கள். இவர்கள் எந்த இடமாற்றம் கேட்டாலும் தட்டிக்கழிக்கின்ற மனோபாவம் இருந்துகொண்டேயிருக்கின்றது.

வட மாகாண நிர்வாகம் என்பது ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பில் இருப்பதனால் அவர் அதை விடுப்பதற்கு பல சாட்டுப்போக்குகளை சொல்லிக்கொண்டிருக்கின்றார். கிழக்கு மாகாண சபையும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கூட ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை.

ஏனென்றால், கிழக்கு மாகாண சபை அந்த வெற்றிடங்களுக்குப் புதிதாக அவர்களது உறவினர்களை அல்லது ஏனையோரை நியமனம் செய்துகொண்டால் அவர்களுக்கு அரசியல் ரீதியாக சில நன்மைகள் கிடைக்கும் என்ற காரணத்தினால் அந்த விடயம் பூதாகரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

வடக்கு, கிழக்குச் சங்கம் என்பது ஒன்றாக இருக்கின்ற காரணத்தால் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கிலும் இருக்கின்றார்கள்; கிழக்கிலும் இருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் ஒன்றிணைந்து ஒரு தேசியப் பிரச்சினையாக இந்தப் பிரச்சினையை எடுத்து இடமாற்றம் தொடர்பாக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்கனவே இந்தச் சங்கத்தில் முன்வைத்திருக்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கு ஆசிரியர் சங்கத்தைத் தொடர்ந்து பேணவேண்டியது மிக அவசியமானது- என்றார்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் சுகந்தன்



மீசாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சுகந்தன் 08.02.2012 புதன்கிழமை அகால மரணமானார்

அன்னார் விமிலியின் அன்புக் கணவரும், அபிநயாவின் தந்தையும், பாலசுப்பிமணியம் - தில்லைநாயகம் தம்பதியரின் மூத்த மகனும், சுந்தரம் - பாக்கியலீலா தம்பதியரின் மருமகனும், சுதன், சுஜிதன், சுவர்ணா ஆகியோரின் சகோதரனும், ஜாலினி, சங்கீதா, சிந்துகா, சுஜிவன், விஜிதன், சுபாஸினி, கல்யாணி, சுரேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(C\8885) (6,7,10)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



மாதகலைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது நவீல்ட் செவிப் புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர்

**அமரர் செல்வன் இராசேந்திரம் கார்த்திக்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றோம்.

இவரது மறைவையொட்டி எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
பழைய மாணவர்கள்,
தலைவர், செயலாளர், பொருளாளர்,
அங்கத்தவர்கள்.

கைதடி.

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேர்மன்செப்பேட் அல்சேசன் ஆண், பெண்நாயும், ரொட்விலர் ஆண்நாயும் 6 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண்,பெண் நாயும் 3 மாதம் பூர்த்தியான அல்சேசன் பெண்குட்டியும்,45 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண்,பெண் குட்டிகளும் ஒரு வயது நிரம்பிய பசுக்கன்றும் விற்பனைக்கு

தொடர்பு:-வீ.மயூரன் இல. 209, பலாலி றோட்
ராஜாபிளாசா முன்பாக கோண்டாவில்

## வீடு வாடகைக்கு

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு - 021-222 3171 (C8887)

## தவறிவிட்டது

NPGO 6438 எனும் இலக்கமுடைய மோட்டார் [illegible] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible] தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே.077 666 0523
(14320) (-45)

## விற்பனைக்கு

தரமானநிலையிலுள்ள (ISUZU 350) வாகனத்தின்தட்டு (OPEN BODY-ORIGINAL) விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 9357523
(14321)(6-7-8)


அபிவிருத்திக்கு
உந்துசக்தி அளிப்பதற்காக
யாழ்ப்பாணத்தில்
சொவ்ட்லொஜிக் ஃபினான்ஸ் தனது நவீன நிதிச் சேவைகள் மூலம் யாழ் மக்களின் வாழ்வுக்கு வளமூட்ட இருக்கிறது.



BrainWorks
softlogic Finance
இல. 55/57/59, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2219444, 021-2219555, தொலைநகல்: 021-2219666
குத்தகை வாடகைக் கொள்வனவு வியாபாரக் கடன்கள் தனிப்பட்ட கடன் தங்கக் கடன் சேமிப்புக்கள் நிலையான வைப்புக்கள்

LANKATILES
மாபெரும்
மலிவு விற்பனை
ஃபுளோர் மற்றும் வோல் டைல்கள், ஸ்வீஸ்டெக் டைல் மோட்டார், கிறவுட் என்பன.
பெப்ரவரி
13 - 19
மு.ப.9 - பி.ப.5
வரையிலான தள்ளுபடி 50%
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானம்
(சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்னால்)

## மரண அறிவித்தல்



**தெய்வபூசணி பஞ்சாட்சரம்**

அனலைதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு (றொறிங்ரனை) வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வபூசணி பஞ்சாட்சரம் 07.02.2012 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பஞ்சாட்சரத்தின் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் நில அளவைத் திணைக்களம், கொழும்பு) அன்பு மனைவியும், சுதாகரன் (லண்டன்), சுபாசினி (லண்டன்), கோபிகா (Lanken Ceylon PLC) ஆகியோரின் அன்புத் தாயும், காந்தமலர் (லண்டன்), விக்கினராசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், கோபாலசுந்தரம், இன்பசுந்தரம், யோகேஸ்வரி (கனடா), பரராசசுந்தரம், புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமசிவம், சரஸ்வதி, ருக்குமணிதேவி, குலேந்திராதேவி, குமாரசாமி (கனடா), சிவசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிகிலேஷ், சஞ்சிதா ஆகியோரின் அப்பம்மாவும், கிரிஜன், யதுசன், பார்கவி ஆகியோரின் அம்மம்மாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல், அஞ்சலிக்காக நாளை (11.02.2012) சனிக்கிழமை காலை பொறளை ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பின்னர் 12.02.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிமுதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

A3, றொறிங்டன் மாடிவீடு,
றொறிங்டன் மாவத்தை,
கொழும்பு - 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிவாங்க மாட்டோம்

## உறுதியளித்தார் மாலைதீவின் புதிய ஜனாதிபதி



ஆட்சி மாறினாலும் மாலைதீவின் காட்சி மாறவில்லை. தொடரும் ஆர்ப்பாட்டங்களால் இன்னமும் குழப்ப நிலையே நீடிக்கிறது.

மாலே, பெப்.10

''பதவியிலிருந்து விலகியுள்ள முன்னாள் அதிபர் முகமது நஷீட் மீதும் அவரது ஆதரவாளர்கள் மீதும் பழிவாங்கும் போக்கை கடைப்பிடிக்கமாட்டோம்'' என மாலைதீவின் புதிய அதிபர் வாகீத் ஹூசைன் தெரிவித்துள்ளார்.

மாலைதீவில் கடந்த, 2009ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், முகமது நஷீட் அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அண்மையில் அரசுக்கெதிராகத் தொலைக்காட்சி ஒன்றில் கருத்துத் தெரிவித்த ஜமீல் அகமது என்பவர் கைது செய்யப்பட்டார். எனினும் 'உரிய நீதிமன்றக் கட்டளை ஏதும் இல்லாமல் ஜமீலைச் சிறையில் அடைத்தது தவறானது' என்று நீதிபதி அப்துல்லா முகமது தீர்ப்பு கூறினார். இதனால், கோபமடைந்த நஷீட், அந்த நீதிபதி மீது லஞ்ச வழக்குப் பதிவு செய்து, அவரைக் கைது செய்யுமாறு இராணுவத்துக்கு உத்தரவிட்டார்.

இதனால் மாலைதீவு மக்கள் போராட்டத்தில் குதித்தனர். கடந்த மூன்று வாரங்களாக, நஷீட்டுக்கு எதிராகப் பரந்தளவில் போராட்டம் நடைபெற்றது.

எனினும் இந்தப் போராட்டத்தின் திருப்பு முனையாகத் திடீரென பொலிஸார் அரசுக்கு எதிராகத் திரும்பினர். அவர்களும் கிளர்ச்சிக்காரர் களோடு இணைந்து கொண்டனர். தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களையும் பொலிஸார் கைப்பற்றினர். பொலிஸை ஒடுக்க இராணுவம் களம் இறங்கி யது. எனினும் நிலைமை மோசமானது.

**''நஷீட்டை பழிவாங்கும் எந்தவொரு நடவடிக்கையி லும் புதிய அரசு ஈடுபடக் கூடாது'' என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரி யுள்ளது.**

இதனைச் சமாளிக்கும் பொருட்டு அதிபர் பதவியை, நஷீட் கடந்த செவ்வாய்க் கிழமை ராஜினாமா செய்தார். இதையடுத்து, துணை அதிபர் வாஹிட் ஹசன் புதிய அதிபராகப் பொறுப்பேற்றார்.

பதவி விலகிய நஷீத் அடையாளம் தெரியாத இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மாலைதீவுச் சட்டப்படி ஹோட்டல் மற்றும் விடுதிக்கு வெளியே மது அருந்துவது குற்றமாகும். நஷீட் வீட்டுக்கு வெளியே நூற்றுக் கணக் கான மதுப்போத்தல்கள் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதைக் காரணம் காட்டி அவர் மீது வழக்குப் பதிவு செய்யலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்த வழக்கின் கீழ் அவருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை வழங்க முடியும். இந்த நிலையில் நஷீட் ஆதரவாளர்கள் மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

''நஷீட்டை பழிவாங்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் புதிய அரசு ஈடுபடக் கூடாது'' என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இது குறித்து புதிய அதிபர் வாஹிட் ஹூசைன் செய்தியார்களிடம் தெரிவித்ததாவது; ''நஷீட்டை பழிவாங்கும் நடவடிக்கையில் ஒரு போதும் ஈடுபட மாட்டேன். அவர் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்படுவார். ஆனால், நஷீட் மீது இராணுவமோ, நீதிமன்றமோ எடுக்கும் நடவடிக்கையில் நான் தலையிட முடியாது'' என்றார்.

எனினும் ''நஷீட் வீட்டுக் காவலில் வைக்கப்படவில்லை. அவருக்கு எதிர்ப்பாளர்கள் மூலம் ஆபத்து ஏற்படும் என்பதால், இரகசிய இடத்தில் வைத்து அவரைப் பாதுகாத்து வருகிறோம்'' என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை மொஹமட் நஷீட்டை ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேற்றியமைக்கு எதிராக மாலைதீவு ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர் தலைநகர் மாலேயில் நேற்று முன்தினம் முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது பொலிஸார் குண்டாந்தடி மற்றும் கண்ணீர் ப் புகை பிரயோகம் மேற்கொண்டதால் பலர் காயமடைந்துள்ளனர். (ங)


## *மிரட்டினார்கள் விலகிவிட்டேன்*



*''பொலிஸாரினாலும் இராணுவத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட புரட்சியின் போது ஜனாதிபதி பதவியிலிருந்து ராஜினாமா செய்வதற்கு நான் துப்பாக்கி முனையில் நிர்ப்பந்திக்கப்பட்டேன். வேறு வழியின்றி பதவி விலகும் துரதிர்ஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டேன்.'' என்று மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.*

*பொலிஸாரினதும் படையினரதும் இந்த நடவடிக்கையை நஷீட்டின் கீழ் உப ஜனாதிபதியாக இருந்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான மொஹமட் வாஹீட் ஹசன் அறிந்திருந்தார் எனவும் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் கூறியுள்ளார். எனினும் இதை ஜனாதிபதி மொஹமட் வாஹீட் ஹசன் மறுத்துள்ளார்.*

# ஆர்ப்பாட்ட எதிரொலி எகிப்தில் தேர்தல்



எகிப்தில் ஏப்ரல் மாத நடுப் பகுதியில் தேர்தல் நடத்தப் போவதாக அறிவித்திருந்த இராணுவம் தற்போது மக்களின் ஆர்ப்பாட்டத்துக்குப் பணிந்து அந்தத் தேர்தலை மார்ச் மாதத்தில் நடத்த முடிவு செய்துள்ளது.

முபாரக்கின் ஆட்சி எகிப்து நாட்டில் வீழ்த்தப்பட்ட பின்பு அதன் நிர்வாகப் பொறுப்பை இராணுவம் ஏற்றுக்கொண்டு நடத்தி வருகிறது. எனினும் இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

ஆயிரக்கணக்கானோர் தலைநகர் கெய்ரோவிலும், வேறு சில நகரங்களிலும் திரண்டு ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டு வருகின்றனர். வெகு விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி ஆட்சிப் பொறுப்பை பொது மக்களின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தநிலையில் இராணுவ ஆட்சியாளர்களின் உயர்நிலைக் குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் எகிப்திய ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி மனுத் தாக்கல் செய்வதுடன் ஆரம்பிக் கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

முபாரக்கின் ஆட்சி அகற்றப்பட்ட போதும் இன்னமும் தம்மீதான சுமைகள் நீக்கப்படவில்லையெனவும் தொடர்ந்தும் தாம் சர்வதிகார ஆட்சியையே உணர்வதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். ஆட்சி மாறிய பின்பும் தமக்கு விமோசனம் கிடைக்காத நிலையில் போராட்டம் ஒன்றே விடிவைப் பெற்றுத் தரும் என்று அவர்கள் நம்புகின்றனர். அந்தப் போராட்டத்தின் விளைவாகவே அதற்குப் பணிந்து இராணுவம் தேர்தலை ஏற்கனவே அறிவித்த திகதிக்கு முன்னதாக நடத்த முன்வந்துள்ளது. (ங)

# 'யாகூ'வுக்கு அடுத்த இழப்பு



கூகுள் மற்றும் பேஸ்புக் நிறுவனங்களுக்கிடையேயான போட்டியின் காரணமாக, தனது பதவியை ராஜிநாமா செய்வதாக யாகூ நிறுவனத் தலைவர் ரோய் போஸ்டோக் தெரிவித்துள்ளார்.

இணையத்தள சேவைகளை வழங்குவதில், கூகுள், பேஸ்புக் நிறுவனங் களிடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இந்தப் போட்டிக் களத்தில், யாகூவும் உள்ளது. எனினும், கூகுள் மற்றும் பேஸ்புக் நிறுவனங் களுக்கிடையேயான போட்டியில், தங்களால் சிறப்புறச் செயற்பட முடியவில்லை என்று யாகூ நிறுவன தலைவர் ரோய் போஸ்டோக் பதவி விலகியுள்ளார். புதிய தலை மைத்துவத்தின் கீழ் யாகூ நிறுவனம் புத்துணர்ச்சியோடு செயற்பட தனது பதவி விலகல் உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, ஏற்கனவே யாகூ நிறுவனத்தின் இயக்குநர்களான யோமேஷ் ஜோஷி, ஆர்தர் கெர்ன் மற்றும் கேரி வில்சன் ஆகியோர் பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங)



*பாகிஸ்தானில் லாகூர் நகரில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வாயுக் கசிவால் கட்டடத் தொகுதி ஒன்று இடிந்து விழுந்ததில் அதனுள் சிக்குண்டிருந்த பெண் பணியாளர் ஒருவர் 32 மணித்தியாலத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். (ங)*

# சிரியாவில் 47 பேர் சாவு

பெய்ரூட், பெப்.10

சிரியாவில் அரச எதிர்ப்பாளர்கள் மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் 47 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவின் ஹோம்ஸ் நகரில் எதிர்ப்பாளர்கள் மீது இராணுவத்தினர் நேற்று முன்தினமும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் அந்த நகரில் உள்ள பல கட்டடங்கள் தரைமட்டமாகின. அங்குள்ள மக்களுக்கான அடிப்படை வசதிக் கட்டுமானங்கள் சிதைக்கப்பட்டு விட்டதால் அவர்கள் சிரமப்படுவதாக சிரியாவுக்கான மனித உரிமைப் பார்வையாளர் குழு தெரிவித்துள்ளது.

இந்தத்தாக்குதலில் 47 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது 3 குடும்பங்களைச் சேர்ந்த ஒட்டு



**மக்களுக்கான மருத்துவ வசதிகள் இன்மையால் உயிரிழப்புகள் இன்னும் அதிகரிக்கலாம்.**

மொத்த உறுப்பினர்களும் இறந்துவிட்டதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

மருத்துவ வசதிகள் முற்றாகத் தடைபட்டிருப்பதால் தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நகரைச் சுற்றி வளைத்துள்ள படையினர், மோட்டர் குண்டுகள், இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் கடுமையாகத் தொடர்ந்தும் தாக்குதல் தொடுத்து வருகின்றனர்.

இதுவரை இராணுவத்தின் தாக்குதல்களில் சிக்கி 6 ஆயிரத்துக்கும் மேற் பட்டோர் உயிரிழந்திருப்ப தாக மனித உரிமை பார்வை யாளர் குழு தெரிவித்துள்ளது. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பிரதமர் கிலானி மேன் முறையீடு

இஸ்லாமாபாத், பெப்.10

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் தன் மீது பிறப்பித்திருந்த அழைப்பாணையை நிராகரிக்கக் கோரி பிரதமர் யூசுப் ரசா கிலானி மேன்முறையீடு செய்துள்ளார்.

இதையடுத்து இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகவும், 8 நீதிபதிகள் கொண்ட புதிய அமர்வு விசாரணையை மேற்கொள்ளும் என்றும் தலைமை நீதிபதி இப்திகார் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டு மனுவில் இந்தியா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளின் உச்ச நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளை மேற்கோள் காட்டியுள்ளதாக கிலானியின் வழக்கறிஞர் அய்த்ஸாஸ் ஆஷான் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு அப்போதைய அதிபர் பர்வேஸ் முஷாரப் தனது ஆட்சிக் காலத்தில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழல் வழக்குகளை நிராகரிக்க உத்தரவிட்டிருந்தார். அவற்றில் இப்போதைய அதிபர் ஆசிப் அலி சர்தாரிக்கு எதிரான வழக்கும் ஒன்று.

முஷாரப் பதவி விலகியதும் சர்தாரி அதிபராகப் பொறுப்பேற்றார். அப்போது உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு ஒன்றின் அடிப்படையில், முஷாரப்பின் ஆட்சிக்காலத்தில் கைவிடப்பட்ட ஊழல் வழக்குகளைத் திரும்ப விசாரிக்கும்படி உத்தரவானது. குறிப்பாக அதிபர் சர்தாரியின் மீதான ஊழல் வழக்குகளை விசாரிக்க உத்தரவானது.



சர்தாரி அதிபர் என்பதால் அரசியலமைப்புச் சட்டப்படி அவருக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்க முடியாது என்று பிரதமர் கிலானி தெரிவித்து விட்டார். இது நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் செயல் என்று கருதிய உச்ச நீதிமன்றம், எதிர்வரும் பெப்ரவரி 13ஆம் திகதி கிலானியை முன்னிலையாகுமாறு உத்தரவிட்டது. இந்த வழக்குத் தொடர்பாகவே மேன்முறையீடு செய்யப்பட்டது.

கிலானி தரப்பை நேரிடையாக விவரிக்க வாய்ப்பு அளிக்கப்படாததால் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டை தள்ளி வைக்க வேண்டும். அதிபருக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து மறு விசாரணைக்கு உத்தரவிடாததன் மூலம் கிலானி அரசியலமைப்புச் சட்டத்தை மீறவில்லை என்பதற்கு ஏனைய நாட்டு வழக்குகளின் அடிப்படையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்கிறார் கிலானி தரப்பு சட்டத்தரணி.

மேன்முறையீட்டுக்கு விண்ணப்பித்துள்ளதால் நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் அடிப்படையில், புதிய நீதிபதிகள் கொண்ட அமர்வு அமைக்கப்படும் வரை கிலானி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டியதில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ந)

## சுவிஸ் அரசு அமைக்கும் நாக மணிமண்டபம்

பிரபல ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி லண்டனில் நடைபெற உள்ளதால் அங்கு ஒரு நாக மணி மண்டபத்தை அமைக்க சுவிஸ் அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த மணிமண்டபத்தை அமைக்கும் பணி பேஸெல் நகரத்தில் உள்ள ஹெரோஜ் மற்றும் டெ மியூரோன் என்ற கட்டடக்கலைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடக் கலை உலகின் மிகவும் தலைசிறந்த படைப்பாகக் கருதப்படும்.

2008 ஆம் ஆண்டு பீஜிங் நகரத்தில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது, சீனக் கலைஞர் ஏய் வேய் என்பவருடன், சுவிஸ் கலைஞர்கள் இணைந்து ஒரு நாகமணி மண்டபத்தை சிறப்பாக உருவாக்கியிருந்தனர்.

அதே கலைவடிவத் துடன் லண்டனில் மீண்டும் உருவாக்கப்படும் இந்த மண்டபம் ஜூன் மாதம் கட்டி முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் ஒரு பண்பாட்டுத் திட்டமாக விளங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரங்கம் போல உருவாகும் இந்த மண்டபம் பன்னிரண்டாவது அரங்கம் ஆகும். இதற்கு முன்பு பலர் இது போன்ற மண்டபங்களை உருவாக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## கணவனுக்கு நீண்ட ஆயுள் வேண்டி...




நேபாளத்தின் காத்மாண்டுவில் மகாதேவ் நாராயணன் திருவிழா நடக்கிறது. விழாவில், கணவருக்கு நீண்ட ஆயுள் வேண்டி ஒரு வேளை உணவு உண்டு, ஒரு மாதம் விரதம் இருந்து பெண்கள் அனுமந்த் ஆற்றில் புனித நீராடி சுவாஸ்தானி அம்மனை வழிபடுகின்றனர்.

## பிரிட்டன் வங்கிக் கணக்கு விவரங்கள் ரஷ்யாவில் விற்பனை

ரஷ்ய இணையத்தளங்களில் பிரிட்டன் வங்கி கணக்கின் இரகசிய எண்கள், வங்கி கணக்கு எண்கள் மற்றும் விவரங்கள் விற்பனைக்கு வந்திருக்கின்றன. இவற்றின் விலை 19 டொலர் என இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது; பிரிட்டனில் போலி கடனட்டை மற்றும் முறைகேடுகள் மூலம் ஆண்டுக்கு 308 கோடி டொலருக்கு மேல் மோசடி நடக்கிறது.வங்கிக் கணக்கு விவரத்தை குறிப்பிட்ட சில கும்பலைச் சேர்ந்தவர்கள் திருடி ரஷ்ய இணையத்தளத்தில் விற்பனை என்ற பெயரில் வெளியிட்டு இருக்கிறார்கள். ஸ்கிம்மர் என்ற சிறிய கருவியை கடனட்டை எந்திரத்தில் இணைத்து, நடைபெறும் பணப் பரிமாற்றம், அதில் பணம் எடுக்கப்பட்ட வங்கிக் கணக்கு எண்கள், இரகசிய குறியீட்டு எண்கள் போன்றவற்றைத் திருடி விற்கிறார்கள். தற்போது இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பிரிட்டன் பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறார்கள் - என்றார். (ந)

# மரண அறிவித்தல்



## இப்ராஹிம் பஸீர்

மத்தீஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இப்ராஹிம் பஸீர் 05.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இப்ராஹிம் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - இந்திராணி தம்பதியரின் மருமகனும், அன்னரத்தினத்தின் (குஞ்சு) அன்புக் கணவரும், உதயகுமார் (பிரான்ஸ்), வசந்தகுமார், சந்திரகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் சாந்தகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாசில்லா (பிரான்ஸ்), காலஞ் சென்றவர்களான சந்திரா, யூசுப் மற்றும் ராகிலா, நமீன் (தனு எலக்ரிக்கல் ஹாட்வெயார் உரிமையாளர், கட்டட ஒப்பந்த காரர்), சுபைர் (பொலநறுவை), ரகூப், காலஞ்சென்ற பஸீர் மற்றும் லைலா (டோகா), அச்சா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுஜாதா (பிரான்ஸ்), வனஜா, ரமேஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், மணியம் மற்றும் பானுமதி (இந்தியா), காலஞ்சென்ற டேவிற் அல்வின் மற்றும் அமலநாயகி (கமலா), ஆயிசா (பொலநறுவை), ஹெலன் தங்கமலர் (ராதா), சிறி, யோகேஸ், தவராசா, மகேந்திரன், லீலா, கீதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாரதா, உஷா, ரவி, ராசன் ஆகியோரின் சகலனுமாவார்.

இன்று (10.02.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/2, ஆனந்தன் வடலி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(14308)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றின் முன்னால் மாறன் சகோதரர்களும்

டில்லி, பெப்.10

2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் தயாநிதிமாறன், அவரது சகோதரர் கலாநிதிமாறன் ஆகியோர் மீது அமுலாக்கப் பிரிவினர் முறைகேடான பணப்பரிவர்த்தனையைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



அலைக்கற்றை ஒதுக்கீடு சர்ச்சையில் இவர்களின் பெயர்களும் அடிபட்டதை அடுத்து, கடந்த ஆண்டு, ஜவுளித்துறை அமைச்சர் பதவியில் இருந்து தயாநிதி மாறன் ராஜிநாமா செய்தார்.

அவர் ஏற்கெனவே, தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்தபோது, மலேசியாவைச் சேர்ந்த அவரது நண்பர் அனந்த கிருஷ்ணனின் நிறுவனமான மேக்ஸிஸ் தொடர்பு சாதனத்துக்குச் சாதகமாக அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியிருக்கிறார் என்பது அவர் மீது உள்ள குற்றச்சாட்டு.

சிவசங்கரன்தலைமையில் இருந்த ஏர்செல் தொலைத் தொடர்பு சேவை நிறுவனம், தனது சேவையை விரிவாக்க உரிமம் கோரியபோது, அதைக்கொடுக்காமல் மாறன் வேண்டுமென்றே தாமதித்ததாகப் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஏர்செல் நிறுவனத்தை மேக்ஸிஸ் நிறுவனத்துக்கு விற்குமாறு தயாநிதி நிர்ப்பந்தப்படுத்திய தாகவும் சிவசங்கரன் மத்தியப் புலனாய்வுத்துறையிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

தயாநிதியின் வற்புறுத்தலை அடுத்து, ஏர்செல் நிறுவன பங்குகளை மேக்ஸிஸ் நிறுவனத்துக்கு விற்ற பின்னரே அதற்கான உரிமங்கள் வழங்கப்பட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குக் கைமாறாக, மலேசிய நிறுவனம், கலாநிதி மாறன் மூலம் 550 கோடி ரூபா கொடுத்திருப்பதாகவும், சன் தொலைக்காட்சியின் கேபிள் சேவை நிறுவனத்தில் பங்கு முதலீடு என்ற பெயரில் சட்டவிரோதமாக அந்தப் பணப்பரிவர்த்தனை நடந்திருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, தயாநிதி மாறனிடம் சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கப் பிரிவினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டிருக்கிறார்கள். மாறன் சகோதரர்கள் மீதான விசாரணை ஆமை வேகத்தில் நடப்பதாக சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கப் பிரிவை உச்சநீதிமன்றம் ஏற்கெனவே கடிந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# இந்தியா–ஈராக் விமானசேவை மீண்டும்

இந்தியாவிலிருந்து ஈராக்கிற்கு விமானப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக ஈராக் நாட்டுடனான நேரடி விமான சேவையை இந்தியா மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ஈராக் நாட்டுடனான நேரடி விமான சேவையை இந்தியா மீண்டும் ஆரம்பிக்க உள்ளது குறித்து விமானப் போக்குவரத்துத் துறை இயக்குனர் பரத் பூஷன் தெரிவித்ததாவது:

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் வளைகுடா போர் நடந்த நேரத்தில் ஈராக் நாட்டுக்கான போக்குவரத்து ரத்து செய்யப்பட்டது.

த்ற்போது ஈராக் நாட்டில் அமைதிக்கான சூழ்நிலை நிலவுவதால் மீண்டும் போக்குவரத்தை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக இருநாட்டு விமான நிறுவனங்களும் பேச்சு நடத்தியுள்ளது. இதனடிப்படையில் வாரத்திற்கு நான்கு விமானங்கள் இயக்கப்பட உள்ளன.

முதல்விமானம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை புறப்பட உள்ளது என்றார். (வ)

# 29 பேரின் உயிருக்கு எமனான கள்ளச் சாராயம்

ஒரிசா மாநிலத்தில் கள்ளச்சாராயம் குடித்த 29 பேர் அடுத்தடுத்து பரிதாபமாக உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



கட்டக் மாவட்டத்திலுள்ள மஹிந்தர் வாடா பகுதியில், கடந்ததிங்கட்கிழமை இரவு சிலர் இருமல் மருந்து கலந்த கள்ளச் சாராயத்தைக் குடித்துள்ளனர். இவர்களுக்கு நெஞ்சு வலியும், கண் எரிச்சலும் ஏற்படவே, மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் 13 பேர் கடந்த செவ்வாய்க்கிழமையும், 16 பேர் நேற்று முன்தினம் புதன்கிழமையும் உயிரிழந்தனர். இன்னமும் 19 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில், மஹிந்தர்பாடா மற்றும் பலியந்தா சுற்றுவட்டாரப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பலர் அடங்குவர். இந்தக் கள்ளச்சாராயத்தில் கலக்கப்பட்ட இருமல் மருந்து புவனேஸ்வரம் அருகே ரசூல்கர் பகுதியில் அமைந்துள்ள மருந்து நிறுவனமொன்றிடமிருந்து வாங்கப்பட்டுள்ளது. இதையடுத்து அந்த மருந்து நிறுவனத்துக்கு நேரடியாகச் சென்று சோதனை நடத்திய அதிகாரிகள் அந்தநிறுவனத்தை மூடி சீல் வைத்தனர். புவனேஸ்வரில் மேலும் ஒரு மருந்து நிறுவனத்துக்கும் தாம் சீல் வைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய, கள்ளச் சாராயத்தை விற்பனை செய்த பிந்தர் பாய் என்பவரின் மகன் மற்றும் மருமகள் உட்பட 10 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பிந்தர் பாயும் அதனைக் குடித்ததால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)



இந்தியாவுக்கு வருகை தந்த பிரேசில் ராணுவ அமைச்சர் செல்ஸோ அமோரிம், புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசினார்.

# அமைச்சர்களைப் பிடித்து சிறையில் அடையுங்கள்

## ஹசாரே தெரிவிப்பு

நாடாளுமன்றத்தை அழுக்காக்கும் அமைச்சர்களை சிறைக்கு அனுப்புங்கள் என்று சமூக ஆர்வலர் அன்னா ஹசாரேவேண்டுகோள் விடுத்துள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவையில் விவாதம் நடந்து கொண்டிருந்தபோது, அமைச்சர்கள் 3 பேர் செல்போனில் ஆபாசப் படம் பார்த்ததாக செய்தி வெளியாகியது.

இதைத் தொடர்ந்து, அவர்கள் மூவரும் தங்கள் அமைச்சர் பதவியை ராஜிநாமாச் செய்தனர். இந்த நிலையில், இது குறித்து கருத்து வெளியிட்ட அன்னா




ஹசாரே, அவர்கள் மூவரையும் பதவிநீக்கம் செய்து, சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று ஆவேசமுடன் தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

அரசியல் கட்சிகள் இது போன்ற மோசமான மனிதர்களால் நிறைந்துள்ளது. இந்தத் தலைவர்கள் நமது புனிதம் நிறைந்த நாடாளுமன்றத்தையும் சட்டமன்றங்களையும் அழுக்காக்கி வருகின்றனர். இவர்களின் கைகளில் எமது நாட்டின் எதிர்காலம் பாதுகாப்பானதாக இருக்காது - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# குஜராத் உயர்நீதிமன்றம் மோடிக்கு கண்டனம்

கோத்ரா கலவரம் தொடர்பாக குஜராத் உச்சநீதிமன்றம் நரேந்திரமோடி அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.



2002 ஆம் ஆண்டு கோத்ராவில் இடம்பெற்ற கலவரத்துக்குப் பின்னர் நரேந்திர மோடி அரசு அலட்சியமாக செயற்பட்டதாக கூறி உள்ளது. மேலும் அரசும் பொலி ஸும் கலவரத்தை அடக்க தவறிவிட்டதாகக் குற்றம்சாட்டியது. அதுபோல் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்தும் உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. கலவரம் தொடர்பாக சேதபடுத்தப்பட்ட மதக் கட்டமைப்புகளுக்கு இழப்பீடு வழங்க உத்தரவிட்டது. (வ)

# கச்சதீவை மீட்பதால் மீனவருக்கு பயனில்லை

## காங்.குழுத் தலைவர் கருத்து

கச்சதீவை மீட்க வேண்டும் என்றகோரிக்கையால் மீனவர்களுக்கு எந்த பயனுமில்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுத்தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.

நிருபர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

கச்சதீவை மீட்க வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சிக்கு கருத்து மாறுபாடு இல்லை. ஆனால், கச்சதீவை திரும்பப் பெறுவதால் எந்தப் பயனும் இல்லை. கச்சத்தீவை சுற்றி மீன்வளம் இல்லை. இருப்பினும் இலங்கைக்கு அருகில் இருந்த தீவு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி அந்தத் தீவை இலங்கைக்குக் கொடுக்கவில்லை என்றார் அவர். (வ)

# அணையைக் கண்காணிக்க விரைவில் நவீன கமரா

திருவனந்தபுரம், பெப்.10

முல்லைப் பெரியாறு அணையை 24 மணி நேரமும் கண்காணிக்க கேரள அரசு அதி நவீன கமராக்களைப் பொருத்துகிறது. முல்லைப் பெரியாறு அணை மிகவும் பலவீனமடைந்து விட்டதாகவும், எப்போது வேண்டுமானாலும் அது உடையும் அபாயம் இருப்பதாகவும் கேரள அரசு பொய்த் தகவலை பரப்பி வருகிறது. அணை உடைந்தால் எந்தெந்த பகுதிகளில் பாதிப்பு ஏற்படும், எத்தனை பேர் பாதிக்கப்படுவர் என்பது குறித்தும் ஆய்வு செய்து வருகிறது.

**மேஸ்நெட் எனப்படும் நவீன கண்காணிப்பு முறையை அணைப் பகுதியில் ஜூன் 30ம் திகதிக்குள் செயற்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.**

இந்த நிலையில், அதி நவீன கமராக்களைப் பொருத்தி அணையை 24 மணி நேரமும் கண்காணிக்க கேரள அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் கீழ் செயற்படும் பார் ஜியோஸ்பேஷியல் அப்ளிகேஷன் (எம்ஜிஏ) நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் மூலம், மேஸ்நெட் எனப்படும் நவீன கண்காணிப்பு முறையை அணைப் பகுதியில் ஜூன் 30ம் திகதிக்குள் செயற்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. (வ)

# ஆபாசத்தின் எதிரொலி: தமிழக சட்டசபையில் தொலைபேசிக்குத் தடை

சென்னை,பெப்.10

கர்நாடக சட்டசபையில் பா.ஜ.க. அமைச்சர்கள் 3 பேர் கைபேசியில் ஆபாசப் படம் பார்த்ததன் எதிரொலியாக தமிழக சட்ட சபையில் கைபேசிக்குத் தடை விதிக்கப்பட உள்ளது.

கர்நாடக சட்டசபை கூட்டம் நடந்து கொண்டிருக்கையில் அமைச்சர்கள் 3 பேர் ஆபாசப் படம் பார்த்த விவகாரத்தில் தமது பதவிகளை ராஜிநாமாச் செய்துள்ளனர்.


இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக சட்டசபையில் கைபேசிக்குத் தடை விதிக்க நேற்று முன்தினம் இடம் பெற்ற அவைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முடிவின்படி சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஏதாவது அவசரமாக தொலைபேசியில் பேச வேண்டுமென்றால் அவர்களின் வசதிக்காக லாபியில் 10 இற்கும் மேற்பட்ட பொதுத் தொலைபேசிகள் வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
10/02/2012

# ரகசியமாக ஒரு செய்தி




ரகசியமாக செய்திகளை அனுப்புவதற்கு பர்ன் நோட் என்ற இணையத் தளம் உதவி புரிகிறது. நீங்கள் யாருக்கு செய்தி அனுப்பி வைக்கிறீர்களோ அவர் மட்டுமே அந்த செய்தியைப் படிக்கக் கூடிய அளவுக்கு பாதுகாப்பாக செய்திகளை அனுப்புகிறது. முகப்பு பக்கத்தில் உள்ள பகுதியில் செய்தியை டைப் செய்தவுடன் அதற்குறிய இணைப்பு முகவரி ஒன்றைத் தருகிறது. இந்த முகவரியை யாருக்கு அனுப்பி வைக்கிறோமோ அவர்கள் மட்டும் தான் அதனை படிக்க முடியும். அவர்களும் கூட குறிப்பிட்ட நேரம் வரை தான் படிக்க முடியும் அதன்பிறகு அந்தசெய்திஇணைய வெளியில் மறைந்து விடும்.

செய்தியை எத்தனை நொடிகள் பார்க்கலாம் என்பதையும் அதற்கு கடவுச்சொல் தேவையா என்பதையும் கூட அனுப்புகின்றவரே தெரிவு செய்து கொள்ளலாம். கடவுச்சொல் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கு மட்டும் தான். ஆனால் செய்தி அனுப்ப உறுப்பினராக வேண்டும் என்ற நிபந்தனையில்லை. எந்த செய்தியும் ஒரே ஒரு முறை மட்டுமே படிக்க முடியும். உறுப்பினராக இருந்தால் செய்தி படிக்கப்பட்டு விட்டதா என்னும் பதிலைத் தெரிந்து கொள்ளும் வசதியும் உண்டு.

ரகசியச் செய்திகளை யாரும் பிரதியெடுக்கவோ அல்லது அந்த இணையப் பக்கத்தையோ மொத்தமாக ஸ்கிரின்ஷாட் போல சேமிப்பதோ சாத்தியமில்லை என்றும் இந்தத் தளம் உறுதி அளிக்கிறது. இந்த செய்திக்கான பக்கத்தை பார்த்துக் கொண்டிருக்கும்போதே வேறு ஒரு தளத்துக்குச் சென்று விட்டு திரும்பி வந் தாலும் அந்தப் பக்கம் காலியாக தான் இருக்கும். யாருக்கு அனுப்பட்டதோ அவரால் செய்தி பார்க்கப்படவில்லை என்றாலும் 72 மணி நேரத்தில் செய்தி தானாக மறைந்து விடும்.

இணையத்தள முகவரி:
https://burnnote.com

# 3D வசதியுடன் பயர்பொக்ஸ்



தகவல்களைத் தேட உதவும் தேடல் வசதியிலும் புதிய புதிய தொழில் நுட்பங்கள் வந்து கொண்டு தான் இருக்கின்றன.


தேடல் வசதியில் மிகச்சிறந்த முடிவைப் பயர்பொக்ஸ் உலாவி மூலம் பெறலாம். பல்வேறு வசதிகளை உள்ளடக்கி புதிய பதிப்புகள் வந்து கொண்டே இருக்கின்றன. தற்பொழுது பயர் பொக்சின் பதிப்பான 10 உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் 3டி கிராபிக்ஸ் வசதி உள்ளது. இதற்கு முன்பு இருந்த பதிப்பு 9இல் அதிக டூல்பார் வசதி வந்தது. இதில் கூடுதலாக Java Script தொழில்நுட்பத்தைப் பெற முடிந்தது. ஆனால் தற்பொழுது வெளியான இந்த பதிப்பில் கூடுதல் வசதிகள் உள்ளடங்கியுள்ளது.

இந்த பதிப்பு கடந்த 27 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இந்த பதிப்பை விண்டோஸ், மேக் மற்றும் லினக்ஸ் இயங்குதளங்களில் தரவிறக்கி உபயோகப்படுத்தலாம்.

இதற்கு முன்பு இருந்த பதிப்பு 9இல் அதிக டூல்பார் வசதி வந்தது. இதில் கூடு தலாக Java Script தொழில் நுட்பத்தைப் பெறமுடிந்தது.

# செல்போன்களுக்கு காலால் 'சார்ஜ்'



தற்பொழுது வலுப்பொதிகளை பயன்படுத்தி சார்ஜ் செய்யப்படும் செல்போன்களை இனிவருங்காலங்களில் காலின் கீழ்வைத்து பயன்படுத்தும் வலுப்பெட்டிகளைக் கொண்டு சார்ஜ் செய்ய முடியும். இதற்காக K&TOR எனப்படும் கருவி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தக் கருவியில் இயக்கசக்தியானது மின்சக்தியாக மாற்றப்படுகின்றது. 1.8 கிலோ கிராம் நிறையை உடைய கருவி 11.4 x 11.4 x 22.2 cm கனவளவை உடையது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக்கருவியை காலால் சுற்றும்போது 21.7 கிலோ மீற்றர் பயணம் செய்த தூரத்திற்கு சமனாக இருக்குமாயின் 500 கலோரி சக்தி உருவாக்கப்படுகின்றது. இதன்மூலம் 20 வாற்ஸ் வரை யான மின்னை பெறமுடியும் என்பதுடன் ஆரம்ப சந்தைவிலையாக 150 அமெரிக்க டொலர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது


# பங்குச் சந்தைக்குள் கால் பதிக்கிறது 'பேஸ்புக்'

அசுர வளர்ச்சி கண்டுள்ள பேஸ்புக் சமூக வலைத்தளம் பங்குச் சந்தையில் நுழைய முடிவுசெய்துள் ளது. தனது பங்குகளை விற்பதன் மூலம் இன்னும் 5 பில்லியன் டொலர்களை ஈட்ட முடிவுசெய்துள்ளது. கூகுள் நிறுவனத்திற்குப் பின்னர் பங்குச் சந்தையில் நுழையும் இரண்டாவது பெரிய தொழில்நுட்ப நிறுவனம் இதுவாகும்.

பேஸ்புக்கின் மொத்த சொத்து மதிப்பில் சிறிதளவே முதலீட்டாளர்களுக்கு விற்கப்படுகின்றது.அதே சமயம் அதன் பங்குகள் விலை அறிவிக்கப்படவில்லை. சொத்துமதிப்பு 75 -100 பில்லியன் டொலர் வரை இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

பேஸ்புக்கின் ஆண்டு வருமானம் 3.7 பில்லியன் டொலர்கள். இதில் லாபம் மட்டும் 1 பில்லியன் டொலர் (100 கோடி டொலர்).

8 ஆண்டுகளுக்கு முன் 27 வயது மாணவரால் உருவாக்கப்பட்ட பேஸ்புக்கை, மாதத்திற்கு 85 கோடி பேர் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது.




# பென்ரைவில் வைரஸா?


தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்கும், தகவல்களை இலகுவாக எடுத்துச் செல்வதற்கும் பென்டிரைவ்கள் (USB) பயன்படுத்தப்படுகின்றன. இருந்தும் அந்தத்தகவல்களை கணினி வைரஸ்களிடமிருந்து பாதுகாப்பது மிகவும் கடினமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

இந்தத்தொல்லையிலிருந்து விடுபடுவதற்கு USB Write Protecter என்ற ஒரு மென்பொருள் பயன்டுகின்றது.


1. குறித்த பென்ரைவை கணினியுடன் இணைக்கவும்
2. தரவிறக்க சுட்டிக்குச் சென்று மென்பொருளை தரவிறக்கம் செய்யவும்
3. பின்னர் அந்தமென்பொருளை இயக்கவும். அவ்வாறு இயக்கும் போது ஒரு Page தோன்றும்
4. அதில் USB write protection ON என்பதைத் தெரிவு செய்யவும்

இப்பொழுது குறித்த பென்டிரைவில் (USB) காணப்படும் கோப்புக்களை அழிக்கவோ அல்லது பிரதிசெய்யவோ (Copy) முடியாது.

அவ்வாறு செய்ய வேண்டுமெனில் மீண்டும் மென்பொருளை இயக்கி USB Write Protection OFF என்பதைத் தெரிவு செய்ய வேண்டும்.



# விரைவான தகவல் பரிமாற்றத்தில் கூகுள்




விரைவான தகவல் பரிமாற்றத்திற்கு இன்றைய உலகில் பயன்படுத்தப் பட்டுவரும் மின்னஞ்சல் சேவைகளை கூகுள், யாகூ, கொட்மெயில் போன்ற பல நிறுவனங் கள் வழங்கிவந்த போதிலும் கூகுள் தான் முன்னிலையில் நிற்கின்றது.

இதற்குக் காரணம் ஏனையவற்றை விட வேகம் அதிகமாக இருப்பதுடன் அதில் பல சிறப்பம்சங்களும் காணப்படுவதேயாகும்.

இதில் பலவகையான அம்சங்கள் மறைமுகமாகவும் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் படங்களை உட்புகுத்தும் வசதி.


நேரடியாகத் தரப்பட்டுள்ள போர்மர்ட் டூல்களைப் பயன்படுத்தி நாம் இதனை மேற்கொள்ள முடியாது. எனினும் மறைமுகமாக காணப்படும் இந்த வசதியை வெளிக்கொணர வேண்டும்.


அதற்கு பின்வரும் முறைகளை பின்பற்றுக.

1. உங்களுடைய மின்னஞ்சல் முகவரிக்கு Login ஆகி கீழே படத்தில் காட்டியவாறு Mail setting என்பதைத் தெரிவு செய்யவும்.

2. தோன்றும் சாளரத்தில் Labs என்பதைத் தெரிவு செய்யவும்.

3. தொடர்ந்து வரும் சாளரத்தில் Insert Image என்பதற்கு நேரே உள்ள Enable என்பதைத் தெரிவு செய்யவும்.




4. அதன் பின் கீழே உள்ள Save Changes என்பதை அழுத்தி மாற்றங்களைச் சேமிக்கவும்.

5. தொடர்ந்து Compose Email என்ற பகு திக்கு சென்றதும் அங்கு படத்தை உட்புகுத்துவதற்கான பிரத்தியேகமான அம்சம் காணப்படும். அதில் அழுத்துவதன் மூலம் உங்கள் கணினியிலிருந்து புதிய படத்தினை மெயில் பகுதியில் உட் செலுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் வயது 50 ஆயிரம் ஆண்டுகள்

ஒரு மொழி அழிந்தால் போதும் அந்த தேசிய இனமும் அழிந்துவிடும். ஓர் இனத்தின் உயிர்நாடியே தாய்மொழி தான். ஓர் இனத்தை அழிக்க வேண்டும் என்றால் தாய் மொழியை அழித்துவிடு என்று சொல்வார்கள். மொழி என்பது ஒரு கருவி மட்டும் தான் என்ற கருத்து இருக்கிறது. அது முற்றிலும் தவறானது. மனிதர்களின் உயிரோடும் உணர்வோடும் பல்லாயிரம் ஆண்டு களாக இருந்து வருகிற உயிர்மூச்சு, மொழி. ஒரு தொடர்பு கொள்ளும் கருவி என்பதைப் போல தாய் என்பவள் பிள்ளை பெற்றுத் தருகிற கருவி என்று சொல்ல முடியுமா? அதுவல்ல தாய். அதையும் தாண்டி மேலானவள். அப்படித்தான் தாய்மொழியும். ஆனால் மெல்ல தமிழ் மொழி அழிந்து மிகப்பெரிய அளவில் சுருங்கி தேய்ந்து கொண்டிருப்பது உண்மை.

சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா முழுவதும் தமிழ் மொழி இருந்தது என சட்டமேதை அம்பேத்கர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இன்றைய நிலைமை கவலைக் கிடமானது. கீழை ஆரிய மொழியான சமஸ்கிருதம் கலந்து தமிழை அழித்ததைப் போல, மேலை ஆரிய மொழியான ஆங்கிலம் கலந்து தமிழ் சிதைந்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 600 ஆண்டுகளுக்கு முன்பு உருவான மொழி மலையாளம். சேர நாடாக இருந்தது. சேரன் செங்குட்டுவன் கல் சுமந்து கண்ணகி கோயில் கட்டினான். சிலப்பதிகாரம் குறிப்பிடும் வளம் நிறைந்த நாடு. தமிழ்தான் சமஸ்கிருதம் கலந்து மலையாளமாக மாறிப்போனது.

இதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டாமா? ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பிறமொழி கலந்தால் கண்டிப்பாக தமிழ் அழியும். தஜுகிஸ்தானைச் சேர்ந்த பிரபல கவிஞன் ரசூல் கம்ஸதோவ் பேசிய மொழி அவார். அதுதான் அவனுடைய தாய்மொழி. இறக்குமானால், நான் இன்றே இறந்துவிட விரும்புகிறேன்'' என்று சொன்னான். தன் தாய்மொழியை எந்த அளவுக்கு அவன் மதிக்கிறான் என்பதற்கு இதைவிட வேறொரு கருத்தைச் சொல்ல முடியாது. நாம் அதை நினைத்துப் பார்க்க வேண்டும். எமக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது.

ஆங்கிலக் கலப்பு அதிகரித்துக் கொண்டே போனால் மிகக் குறுகிய காலத்திலேயே தமிங்கிலர் என்ற புதிய தேசிய இனமாக நாம் மாறிவிடுவோம். புதிய மொழியும் புதிய இனமும் உலகில் அறிமுகமாகும். நூறு ஆண்டுகளுக்குள் இந்த மாற்றம் நடந்துவிடும். தமிழின் வயது இற்றைக்கு 50 ஆயிரம் ஆண்டுகள் என்று பாவாணர் சொல்லியிருக்கிறார். இக் கருத்தை மொழியியல் அறிஞர் லெவிட் ஒப்புக் கொள்கிறார். 50 ஆயிரம் ஆண்டுகளாக காப்பாற்றி வந்த ஒரு மொழியை இழந்து கொண்டிருக்கிறோம் என்று நினைத்துப் பாருங்கள். உங்களுக்குக் கவலையாக இல்லையா? தொன்மையான ஒரு மொழியை இழக்கலாமா? உலகம் முழுவதும் இன்றும் பழம் பொருளை பத்திரமாகப் பாதுகாக்கும் பழக்கம் இருக்கிறது. நாம் பயன்படுத்தும் மிக அழகான ஒரு பேனாவைக்கூட பாதுகாத்து நினைவாக வைத்திருக்கிறோம். அந்த உணர்வு மொழியைப் பாதுகாப்பதில் உனக்கு இருக்க வேண்டும்.

ஆங்கில மொழி லத்தீன், பிரெஞ்சு, கிரேக்க வார்த்தைகளைக் கொண்டுதானே உருவாகியிருக்கிறது. அப்படி ஏன் பிறமொழி வார்த்தைகளை நீங்கள் ஏற்றுக் கொள்வதில்லை? என்று கேட்கிறார்கள். அது சொற்கள் தட்டுப்பாடுள்ள மொழி. பிற மொழிகளை ஏற்றுக் கொண்டால் அம்மொழிக்கு வரவு. ஆனால் தமிழில் ஒவ்வொரு புதுச்சொல் நுழையும் போதும் நம்மிடம் இருக்கிற ஒரு பழஞ்சொல் வழக்கொழிந்துவிடும். இது நமக்கு இழப்பு. அவனுக்கு வரவு. ப்ளவர் என்கிற சொல்லை நாம் ஏற்றுக் கொண்டால் மலர், பூ என்கிற சொற்கள் காணாமல்போய்விடும். அது மொழியின் அழிவு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பிறமொழி அறிவியல் சொற்களுக்கு இணையாக மொழியாக்கம் செய்கிற அளவுக்கு தமிழில் சொற்கள் இருக்கின்றன. சில புதிய சொற்களையும் உருவாக்க முடியும்.

சிலர் வெட்கங்கெட்ட முறையில் ஆங்கிலச் சொற்கள் கலப்பதை தவிர்க்கமுடியாது. தமிழில் பேசுவது இயல்பாக இல்லை என்று சொல்கிறார்கள். தமிழில் பேசுவது உனக்கு வெட்கமாக இருக்கிறதா. ஆங்கிலத்தை முழுமையாகப் பேசு. ஆங்கிலமும் வளரும், தமிழும் வளரும். வெளிநாட்டுக்குப் போனால் என்ன செய்வது? என்று கேட்கிறார்கள். இதுவரையில் ஈழத்திலிருந்து 17 லட்சம் தமிழர்கள் வெளிநாடுகளுக்குப் போய் வாழ்ந்து வருகிறார்கள். எல்லா மொழிகளிலும் பேசுகிறார்கள்.

கவிஞர்-காசிஆனந்தன்

# மாணவரின் எழுத்தாற்றலை ஊக்குவிக்க வேண்டும்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், பெப்.10

மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்க பத்திரிகை, நூல் போன்றவற்றுக்கு ஆக்கங்களை எழுதுவதற்கு அவர்களுக்கு வழி காட்ட வேண்டும்.

இதன் மூலம் அவர்களின் அறிவுசார் திறன்களை வளப்படுத்த முடியும் என வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தெரிவித்தார்.

கோட்டக் கல்வி நிறுவுனர் தினமும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் இங்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே சுந்தரசிவம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்; மாணவர்கள் தமது எழுத்தாற்றல் அறிவினை ஊக்குவிக்க வேண்டும். இதற்கு பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு தமது முயற்சியால் உருவாக்கப்பட்ட ஆக்கங்களை பிரசுரிப்பதற்கு அனுப்பி வைக்க வேண்டும். தற்போது மாணவர்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பது குறைவு. கணினி மூலமே தமக்குத் தேவையான அறிவினைப் பெற்றுக் கொள்கிறார்கள். இதனால் மேலதிகமாக தமது அறிவுக்கெட்டிய தகவல்களை வெளிக்கொணர முடியாமல் முடக்கப்பட்டுள்ளார்கள்.

வாசிப்பு, எழுத்தாற்றல் இவை இரண்டும் தான் மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும். மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாகத் திகழ்வதற்கு இத்தகைய செயற்பாடுகள் கைகொடுக்கும்.

எனவே மாணவர்கள் பாடசாலைக் காலத்திலேயே, தமது எழுத்தறிவை வளர்த்துக் கொள்ள முன்வர வேண்டும். இதற்கு பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், சக மாணவர்கள், கற்றுத் தேர்ந்த எழுத்தாளர்கள் போன்றோரை வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் சிறந்த ஒரு எழுத்தாளர்களாக உருவாக முடியும் என்றார். (எ - 14, 28)

# யாழ்.இந்து மாணவன் முதலாமிடம்



யாழ்ப்பாணம், பெப்.10

இயற்கை, பண்பாடு, மரவளப் பாதுகாப்பு மையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சைப் போட்டியில் வடமாகாணத்தில் யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் செங்கதிர்ச்செல்வன் சேந்தன் முதலாமிடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கம் பெற்றுக்கொண்டுள்ளார்.

அத்துடன் இந்தப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரியில் இருந்து பங்குபற்றிய 20 மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் 13 மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ-14)

# தெற்கே எடுத்துச் செல்லப்படும் தமிழர்களின் வளங்கள்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.10

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் இயற்கை வளங்கள் அழிவடைந்துள்ள நிலையிலும் தற்போது நூற்றுக்கணக்கான மரங்கள் வெட்டி எடுக்கப்பட்டு தென் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இயற்கை, பண்பாடு, மரவளப் பாதுகாப்பு மையத்தால் நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பசுமை அமைதி விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கும் நிகழ்வும், நங்கூரம் சமூக அறிவியல் ஏடு வெளியீடும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள காடுகளில் மரங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. அனைத்தும் தென் பகுதிக்கே எடுத்துச் செல்லப்படுகின்றன.

இது எதிர்காலத்தில் சூழலில் பெரிய மாற்றத்தைக் கொண்டுவர வழியமைக்கக் காரணமாக இருக்கப் போகிறது.

ஆகவே சுற்றுச் சூழலை பசுமையாக மாற்றுவதற்கு ஏதாவது மாற்று வழியை மேற்கொள்ள வேண்டும். சுற்றுச் சூழல் என்பது காடு சம்பந்தப்பட்டதல்ல. நாடு சார்ந்ததாகும்.

சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு மொழி, மதம், வேறுபாடு இன்றி அனைவரும் ஒத்துழைக்க முன்வரவேண்டும். இன்று அனேகமான பிரதேசங்கள் பொலித்தீன்களால் பல்கிப்பெருகிக் காணப்படுகிறது.

இது என்றுமே அழிக்கப்படாத ஒரு வளமாகும். தமிழர்களின் மரபுகள், பண்பாடுகள் காப்பாற்றப்பட வேண்டுமாயின் பாதுகாப்பான, செழிப்பான மரங்களை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்- என்றார்.

(எ-13-16)

# செந்தமிழ் இசை அமுதம்



யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்.திருமறைக் கலாமன்றமும், இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து நடத்திய செந்தமிழ் இசை அமுதம் இசைக்கச்சேரி நிகழ்வு அண்மையில் யாழ்.திருமறைக் கலாமன்றக் கலைத்தூது கலையகத்தில் நடை பெற்றது.

தென்னிந்தியத் திருச்சபை ஆயர் தவநாதன் றொபேட், திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் தவநாதன் றோபேட் குழுவினரின் செந்தமிழ் இசை அமுத சங்கீதக் கச்சேரி இடம் பெற்றது. இதில் தில்லானா, மங்களம் உட்பட 9 பாடல்கள் அடங்கிய கச்சேரி இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்கள் உட்பட கலைஆர்வலர்கள்பலர்கலந்துகொண்ட இந்த இசைக்கச்சேரியில் செந்தமிழ் மொழியிலான இனிய பாடல்கள் இசைக்கப்பட்டன. (எ-14)

# புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு

யாழ்ப்பாணம் பெப்.10

அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் நிலையத்தின் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களின் விவரம் வருமாறு-

காப்பாளர்-எஸ்.நவநேசராஜா, தலைவர்-கே.ஜெயராஜ சிங்கம், உப தலைவர்- வி.சிவகுமாரன், செயலாளர்-எ.சுபாகரன், உப செயலாளர்-எ.தாரங்கன், பொருளாளர்-பி.பிறேம்லால், கல்விக்குழு- கே.நந்தபாலா, எஸ்.கோகுலன் கே.சிறிகிருஷ்ணராஜரட்ணம், கே.தேவதீசன்.

விளையாட்டுக்குழு- எ.தாரங்கன், எம்-தினேஷ், எஸ்-தனுஷன், கே.விஞோதகணேசன், எம். பிரசாந்.,

கலைக்குழு- வி.சிவகுமாரன், கே.சந்திரராஜா, கே.சத்தியகுமார், கணக்காய்வாளர்-பி.ஜெயகுமாரன்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377,
021-2262395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0755732271, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## கறிக்குதவா ஏட்டுச் சுரைக்காய்கள்

ஜனவரி மாத இறுதிப் பகுதியில் கொழும்பு வந்த இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மும்மொழி [தமிழ், சிங்களம், ஆங்கிலம்] திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதாக அறிவித்துள்ள அரசு, 2012ஆம் ஆண்டை மும்மொழிகள் ஆண்டாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்றும் மொழி, மத, பொருளாதாரப் புறக்கணிப்புக்களால் பாதிக்கப்பட்டவர்களின் கிளர்ச்சி மட்டுமே உண்டு என்றும் உலக நாடுகளை நம்ப வைக்க மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முயற்சிக்கிறது. வடக்கு – கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்கள், மும்மொழிக் கொள்கை, மொத்த நாட்டுக்குமான பொருளாதார அபிவிருத்தி என்பவற்றின் மூலம் இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்பது போலவும் உலகத்தை – அதிகார பலம் மிக்க நாடுகளை – நம்பவைக்கவும் கொழும்பு முயற்சிக்கிறது.

தனிச் சிங்களச் சட்டம், பல்கலைக்கழக தரப்படுத்தல் கொள்கை, பொருளாதார அபிவிருத்தியில் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டமை எல்லாம் இனப்பிரச்சினையைக் கூர்மைப்படுத்தி ஆயுத வன்முறை நோக்கி அதனை நகர்த்திச் சென்ற காரணிகளே தவிர, இனப்பிரச்சினைக்கே அவைதான் மூல காரணங்கள் என்றில்லை. ஏற்கனவே இருந்த இனப் பிரச்சினைத் தீ நாக்குகளுக்கு எண்ணெய் ஊற்றி, கொழுந்து விட்டெரிய வைத்து, இளைஞர்களின் கைகளில் ஆயுதங்களைத் திணித்த காரணிகளே அவை.

இந்த உண்மையைப் புறந்தள்ளி பொருளாதார அபிவிருத்தி, மும்மொழிக் கொள்கை என்பவற்றின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடமுடியும் என்று இலங்கை அரசு நம்புகிறது; முயற்சிக்கிறது. ஏடுகளில் எழுதி வைத்த இத்தகைய கொள்கைகளுக்கும் நடைமுறைக்கும் இடையில் காணப்படும் வெளியே அரசுக்கான உண்மையான எதிரி.

கொள்ளைச் சந்தேகநபர் மீதான முறைப்பாட்டு அறிக்கை முறைப்பாட்டாளரின் மொழியில் [தமிழ்] சமர்ப்பிக்கப்படாமை காரணமாக யாழ். நீதிமன்றில் இந்த வாரம் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை இந்த இடைவெளியை உணர்வதற்குப் போதுமானது.

இலங்கை அரசமைப்பில் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டு மூன்று தசாப்தங்களாகின்ற போதும் நடைமுறையில் அது வழங்கப்படவில்லை என்பதை நீதிமன்றச் சம்பவம் உணர்த்துகிறது. இத்தனைக்கும் தமிழ்மொழிக்குரிய இடத்தை வழங்க தான் கடுமையாக நடவடிக்கை எடுக்கிறார் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறி வருகையிலேயே நீதிமன்றங்களில் தமிழில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கப் பொலிஸார் பின்னடிக்கிறார்கள். கடந்த காலங்களிலும் இதுவே நடந்தது.

போர்முடிந்து 3 ஆண்டுகளாகிவிட்டபோதும், பொலிஸ் நிலையங்களில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொலிஸாரை இணைத்துக் கொண்டதாக அரசு அறிவித்த பின்னரும் நடைமுறையில் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து வழங்கப்படுவதாகக் காணமுடியவில்லை.

ஆனால், நல்லிணக்கத்துக்கான வழியாக மும்மொழிக் கொள்கையை அரசு இப்போது அறிவித்துள்ளது. ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'' என்பது போல கொள்கைகளும் திட்டங்களும் தாள்களில் மட்டுமே இருக்கும்போது அவற்றால் என்ன பயன் விளைந்துவிடப் போகிறது?

# இலங்கை தடுமாறுகிறது தளம்புகிறது இந்தியா

இலங்கையில் சீனா அமைக்கவுள்ள 350 அடி உயரமான தொலைத் தொடர்பு கோபுரத்தை அமைக்கப்போகிறது. ஏற்கனவே அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைத்துள்ளது. நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம், அதிவேக வீதிகள் எனப் பல அபிவிருத்திப் பணிகளை சீனா மேற்கொள்கிறது. இவற்றை எல்லாம் காட்டித்தான் இந்தியாவைப் பயமுறுத்துகிறார் மஹிந்த ராஜபக்ஷ.

சீனா ஆக்கிரமித்துவிடும் என்ற அச்சம்தான் இலங்கை கூறுவதற்கெல்லாம் இந்தியா ஆமாம் சாமி போட்டுத் தலையாட்டுகின்றது. ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் இந்தியா நழுவல் வழுவல் போக்கைக் காட்டுவதற்கும் இதுதான் காரணம்.

இவற்றை உறுதிப்படுத்துவது போல் அமைந்து விட்டது அண்மையில் இலங்கைக்கு வந்து சென்ற இந்தியத் தலைவர்களின் பயணங்களும் அவர்களது கருத்துக்களும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும், தொடர்ந்து இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் கல்விமானும், சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானியுமான அப்துல் கலாமும் அடுத்தடுத்து இலங்கை வந்து சென்றார்கள்.

இதில் கிருஷ்ணாவின் பயணம் அரசியல் தீர்வு விடயத்தில் ஏற்பட்டுள்ள சர்ச்சை மற்றும் இழுத்தடிப்புக்கள் தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் தடைப்பட்டுள்ள பேச்சுக்கள் சுமுகமாக மீண்டும் ஆரம்பிக்க வழிவகுக்கும் எனப் பெரிதாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இந்த எதிர்பார்ப்புக்கள் எல்லாம் சிதறடிக்கப்பட்டு பெரும் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இலங்கை ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும், கூறி வந்த 13 பிளஸ் என்ற அதே பழைய கதைகளையே கிருஷ்ணாவும் கூறி விட்டுச் சென்றார்.

இந்திய உபகண்டத்தில் இந்தியாவுக்கு மிகவும் அச்சுறுத்தலாக இருக்கும் நாடுகள் சீனாவும் பாகிஸ்தானும். இவ்விரு நாடுகளுடனும் இந்தியாவுக்கு நீறு பூத்த நெருப்பாகப் பகை போல் உள்ளே கனன்று கொண்டு தான் இருக்கின்றது.

சீனா இன்று சகல துறைகளிலும் முன்னேறியுள்ளது. உலகின் எதிர்கால வல்லரசாக வருவதற்கும் முயற்சிக்கிறது. சீனா எப்போதும் இந்தியாவை நட்பு நாடாகக் கருதியதில்லை.

சீனாவும் - பாகிஸ்தானும் எதிரி நாடுகள் என்றே முத்திரை குத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே மூன்று தடவைகள் இந்த இரு நாடுகளும் போர் புரிந்துள்ளன. அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியம் - ஐக்கிய நாடுகள் சபை என்பனவற்றின் தீர்மானங்களையும், கூற்றுக்களையும் இந்த நாடுகள் ஏற்பதும் இல்லை, அக்கறை காட்டுவதும் இல்லை.

ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் எந்த எந்த நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றனவோ, பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்துகின்றனவோ அந்த நாடுகளுடன் நட்பை ஏற்படுத்தி அந்த நாடுகளுக்கு தாமாகவே உதவுவது சீனாவுக்குக் கைவந்த கலை.

இதற்கு ஒரு சிறு உதாரணம். மியான்மார் அந்த நாட்டின் ஆட்சியை இராணுவம் கைப்பற்றிக் கொண்ட போது உலக நாடுகள் அனைத்தும் அதனைக் கண்டித்தன. ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன மியன்மார் மீது பொருளாதாரத் தடையை ஏற்படுத்தின. ஆனால் சீனா மட்டுமே மியன்மாருக்கு ஆதரவளித்தது. அதற்கு உயிர்த் தண்ணீர் வார்த்து ஊக்கமளித்தது.

> “
> மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமெரிக்கா, இலங்கைக்கு எதிரான குற்றப் பத்திரிகையை ஆதரிக்கவுள்ளது. இந்தியாவே, இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எடுக்காமல் நழுவல் வழுவல் போக்கையே புதுடில்லி நேற்று வரைக்கும் காட்டி வருகிறது.

இப்பொழுது சர்வதேச அரங்கில் மனித உரிமை மீறல், போர்க்குற்றச் செயல் என இலங்கைக்கு எதிராக எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களில் இருந்து பாதுகாப்பதிலும் சீனாவே முன்னிலையில் உள்ளது.

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அமெரிக்கா இலங்கைக்கு எதிரான குற்றப் பத்திரிகையை ஆதரிக்கவுள்ளது. இந்தியாவின் ஆதரவின்றி அது தீர்மானமாவது சாத்தியமாகாது.

ஆனால் இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எடுக்காமல் நழுவல் வழுவல் போக்கையே புதுடில்லி நேற்று வரைக்கும் காட்டி வருகிறது.

இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துவிட்டால் சீனா இலங்கையை முற்றுமுழுதாக ஆக்கிரமித்துவிடுமோ என்ற அச்சமே அதற்கான காரணம்.

சீனா, இலங்கையில் கூடுதலான செல்வாக்கைப் பெற்றுவிடவோ, பொருளாதாரத் துறையில் பெருமளவிலான ஆதிக்கம் செலுத்துவதையோ இந்தியா ஒருபோதும் விரும்பவில்லை.

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த அரசியல் ஆதிக்கப் போட்டியின் இடையில் ஈழத் தமிழர்களின் பிரச்சினையும் அவர்களின் அரசியல் தீர்வும், சிக்கிக் கொண்டு சின்னாபின்னமாகி வருகின்றன. இந்தியா-இலங்கை ஆடுகளத்தில் அரசியல் தீர்வும், தமிழர் பிரச்சினையும் ஓர் உதிரி ஆட்டமாகவே அமைந்துள்ளது என்பதுதான் உண்மை. சீனாவைக் காட்டி இலங்கை இந்தியாவை வசப்படுத்தி விட்டதுதான் உண்மை என்கிறார்கள் அரசியல் அவதானிகள்.

அதனால்தான் ஜனாதிபதி 13 பிளஸ், நாடாளுமன்ற தெரிவுக்குழு, மும்மொழிக் கொள்கை, செனட் சபை, அனைத்துக் கட்சிக் கூட்டம் என்று கதைகளை அளந்து வருவதற்கும் காரணம்.

இந்திய தலைவர்கள் வந்து சென்ற அதே சூட்டுடன் பாதுகாப்பு செயலர் கோத்தபாயவும் இந்தியாவுக்கு காவடிதூக்கி விட்டார்.

வருடாந்த ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்றதாகக் கூறப்பட்டபோதும், ஜெனிவாவில் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கையுடன் இந்தியாவின் ஆதரவைத் திரட்டவே கோத்தபாய இந்தியா சென்றார் என்று கூறப்படுகின்றது.

இது இப்படி இருக்க, இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நன்கு பரிச்சயப்பட்டவரும், அமெரிக்க வெளிஉறவுத்துறையில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளவரும், முன்பு சமாதான தூதுவராகச் செயல்பட்டவருமான எரிக்சொல்ஹெய்மும் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு இந்தியாவின் ஆதரவைத் திரட்டுவதே அவரது பயணத்தின் நோக்கம்.

எதிரும் புதிருமாக கோத்தபாயவும், எரிக்சொல்ஹெய்மும் இந்தியா சென்றிருந்தமை போலவே அவர்களது நோக்கங்களும் நேரெதிரானவை. ஆனால் யாருக்கும் தெளிவான முடிவைத் தெரிவிக்காமல் நழுவிக் கொண்டே இருக்கிறது இந்தியா.

சீனாவைக் காட்டி பயமுறுத்தும் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்குமா அல்லது வல்லரசான அமெரிக்காவுக்காக எதிராக வாக்களிக்குமா என்பதே இன்றுள்ள மில்லியன் ரூபா பெறுமதியான கேள்வி.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில மாதங்களின் முன் இங்கு வந்து போன றொபேர்ட் ஓ பிளேக் மீண்டும் வருகிறார். அதே வேளை உலக அமைதி நடவடிக்கை அமைப்பின் சர்வதேச வளங்கள் மதிப்பீட்டு அதிகாரிகள் குழு ஒன்றும் வருகை தருகின்றது.

இவை ஒன்றும் உல்லாசப் பயணம் மேற்கொண்டு பொழுது போக்கிற்காக இங்கு வரவில்லை. ஜெனிவாவில் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்திற்கு முன்வரும் இவர்கள் இலங்கை அரசுக்கும். ஜனாதிபதிக்கும் எதிராக முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு மேலும் வலுவான ஆதாரங்களைத் திரட்டவே வருகின்றனர்.

தொடர்ச்சியான இந்த அழுத்தங்களால் இலங்கை அரசும் தடுமாறி வருகிறது. இதனைச் சமாளிப்பதற்கான முயற்சிகளிலும் அது ஈடுபட்டு வருகின்றது. அமைச்சர்கள் பல்வேறு நாடுகளுக்கும் பயணம் செய்து இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்காதீர்கள் என்று கேட்டு வருகிறார்கள்.

இருப்பினும் வரட்டுப் பிடிவாதத்துக்காக மேற்கு நாடுகளின் அழுத்தங்களுக்குப் பணிந்து போகாமல் சிங்கள மக்கள் மத்தியில் தான் ஒரு வீரன் எனக் காட்டவும் ஜனாதிபதி மஹிந்த முயன்று வருகிறார்.

அரசின் இந்தத் தடுமாற்றமான போக்கு, நாட்டை எங்கு கொண்டு சென்று நிறுத்தும் என்ற கேள்விக்கு இன்னும் சில வருடங்களில் விடை தெரிந்துவிடும்.

ஆனால் இந்தப் பதற்றம், சிக்கல்களில் இருந்தெல்லாம் மீட்சி அடைய சுலபமான வழி ஒன்று இருக்கிறது. இந்த நேரத்திலாவது இலங்கை அரசு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வு ஒன்றை முன்வைத்தால் சர்வதேச மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து ஓரளவு மீட்சிபெற இடமுண்டு. அதைச் மஹிந்த செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மீளக்குடியமர்ந்த மக்களின் தீராப் புலம்பல்கள்

## அடிப்படை வசதிகள் எப்போது வரும் என அங்கலாய்க்கிறார்கள்

தீவான்

அண்மையில் மண்டைதீவில் கடற்படையினர் வசம் இருந்த வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. சொந்த வீடுகளில் மீண்டும் வசிக்கப்போகும் மகிழ்ச்சியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு எதிர்பார்த்த மகிழ்ச்சி கிடைக்கவில்லை. இப்போது புலம்பத் தொடங்கிவிட்டார்கள்.

குடியிருக்க ஆரம்பித்து ஒரு மாதம் கடந்தபோதும், அடிப்படைத் தேவைகள் எதுவும் தமக்கு இன்னும் கிடைக்கவில்லை என்பதே அவர்களின் புலம்பலுக்குக் காரணம். தமது மீள்குடியமர்வு தமது வாழ்க்கையை இருந்ததிலும் மோசமான நிலைக்குத் தள்ளிவிட்டதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

புங்குடுதீவில் கிட்டத்தட்ட அறுபது வீடுகள் கடற்படையினரால் மீளளிக்கப்பட்டன. மிகவும் ஆடம்பரமாக, அமைச்சர் ஆளுநரின் வாக்குறுதிகளுடன் அவை கையளிக்கப்பட்டன. அவற்றில் கொண்டிருந்த நம்பிக்கையினால் மக்கள் தமக்கும் விடிவு கிடைத்துவிட்டது என்று மகிழ்ந்தனர்.

அரையும் குறையுமாக இருந்த வீடுகளை ஒருவாறு பகுதியளவிலாவது திருத்திக்கொண்டு, மக்கள் எதிர்பார்ப்புகளுடன் மீளக்குடியமர்ந்தனர். மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதிகள் ஏதும் இல்லாதபோதும் அவையெல்லாம் உடன் ஏற்படுத்தித் தரப்படும் எனவும், வீட்டுக் கிணறுகளைப் படையினர் சுத்தம் செய்து தருவார்கள் என்றும் கூறப்பட்ட உறுதிமொழிகளை நம்பி மக்கள் மீளக்குடியமர்ந்தனர்.

இரண்டு மாதங்களாகியும் உறுதி மொழிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. வழக்கம்போலவே அவை காற்றில் பறக்க விடப்பட்டன.

கையளிக்கப்பட்ட 60 வீடுகளில் பத்துக்கும் குறைவானவற்றில் மட்டுமே மலசலகூட வசதிகள் ஓரளவுக்காவது உள்ளன. இதனால் ஏனையோர் காலையில் அந்த வீடுகளுக்கு விழுந்தடித்து ஓட வேண்டியிருக்கிறது.

''எமது காலைக் கடன்களுக்காக அடுத்த வீட்டாரைச் சிரமப்படுத்த வேண்டியுள்ளதை நினைக்கும்போது வாழ்க்கையே அருவருக்கிறது'' என்கிறார் மீளக்குடியமர்ந்த ஒருவர்.

குடிதண்ணீர் கிணறுகளோ சுகாதார வசதிகளோ எதுவும் இல்லாத நிலையில் தம்மால் நாளாந்த வாழ்க்கையை நகர்த்த முடியாமல் உள்ளது என்கிறார்கள் மக்கள்.

வீதியும் மிகவும் மோசமாகவே காணப்படுகின்றது. குழாய்நீர் விநியோகம் இடம்பெறுகிறது. ஆனால் அதற்கான குறிப்பிட்ட நேரகால வரையறை ஏதும் இல்லை. விரும்பியபோது விரும்பிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படுகின்றது. இதனால் பொதுமக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

''தண்ணீர் திறந்திருக்கிறதா? இல்லையா? என்பதைக் கண்காணிப்பதற்காகவே வீட்டுக்கு ஒருவரை நிறுத்த வேண்டியுள்ளது'' என்று நிலைமையை விளக்கினார் அங்கிருக்கும் பெண்மணி ஒருவர்.

மண்டைதீவில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் பொலிஸாருக்கு அனுப்பப்படும் தண்ணீரிலேயே தாங்களும் பங்கு போடுவதாகக் கூறும் மக்கள், "அந்தத் தண்ணீர் அவர்களுக்கே போதாது. இருந்தாலும் எங்களது தேவையைக் கருத்தில் கொண்டு நல்ல மனதுடன் தமது தேவைகளையும் கட்டுப்படுத்தி எங்களுக்குத் தண்ணீர் வழங்கி உதவுகிறார்கள்'' என்கின்றனர்.

''எத்தனை நாள்களுக்குத்தான் அவர்களும் தமது தேவையை மட்டுப்படுத்தி எமக்கு உதவ முடியும்?'' இதுதான் மக்களை இன்று அச்சுறுத்தி நிற்கும் கேள்வி.

இப்போது மீளக்குடியமரவிட்ட பேதுருவானவர் ஆலயப் பகுதியில், உண்மையில் பத்துக்கும் குறைவான வீடுகளே நல்ல நிலையில் உள்ளன. ஏனைய வீடுகளில் அனேகமானவற்றுக்குக் கூரை இல்லை. வேறு சில பகுதியளவில் உடைந்தும், கதவு, யன்னல் நிலைகள் இல்லாமலும், கிணறுகள் மூடப்பட்டும், மலசலகூடங்கள் இடிந்தும் காணப்படுகின்றன.

பொதுவாக மீள்குடியமர்வு இடம்பெற்ற பகுதிகளில் வசிக்கும் நிலைப்பாடும் இதுதான். உடைந்து கிடக்கும் சில வீட்டு உரிமையாளர்கள் ''தற்காலிகமாக ஒரு தறப்பாளைத் தந்திருந்தால்கூட சேதமுற்ற கூரைப் பகுதியில் போட்டிருக்கலாம். ஒரு அரசசார்பற்ற நிறுவனம்கூட எங்களை எட்டிப்பார்க்கவில்லை'' என்கிறார்கள்.

இடம் பெயர்ந்து வாடகை வீடுகளில் தங்கியிருந்த பலர், முழுமையாக இங்கு குடிவந்துவிடவில்லை. ஆனால் அடிக்கடி வந்து போகிறார்கள். வீட்டின் பாதுகாப்புக்காகவே இந்த நடவடிக்கை. இதனால் இரட்டைச் செலவுக்கு அவர்கள் ஆளாகியுள்ளனர். இப்பகுதிக்கு குடிதண்ணீர், மின்சாரம், சுகாதாரவசதிகள் வந்துவிட்டால் தாம் இங்கேயே வந்துவிடுவோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

''மின்சாரம் தருவதாகச் சொன்னார்கள். மின்சாரசபையினர் ஒரு தடவை வந்து போயுள்ளனர். அதுவும் கிடைக்குமோ தெரியாது. எல்லோருமே வந்தார்கள்; சொன்னார்கள்; சென்றார்கள் என்றில்லாமல் வந்தார்கள்; சொன்னார்கள்; செய்தார்கள் என மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்து வைக்கும் காலம் "எப்போது வருமோ'' என்று அங்கலாய்க்கிறார்கள் மக்கள்.

அடிப்படை வசதிகளைக் கூடச் செய்து கொடுக்காது, "உங்களது வீடுகளில் நீங்கள் நிம்மதியாக இருங்கள் என்று கூறிவிட்டு 'வடக்கில் வசந்தம்', 'கிழக்கில் உதயம்' என்று சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன அர்த்தம்?'' எனக் கேட்கும் மக்களுக்கு அதிகாரிகள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

# மீட்டெடுப்பவர்களைத் தேடும் இந்து மதம்

வே.ம.இந்திரநாதன்

அன்பே சிவம். அந்த அன்புதான் மதம். எல்லா மதங்களும் போதிப்பது அன்பைத்தான். எங்கே அன்பு பாசம் காட்டப்படுகின்றதோ அங்கே மக்கள் அணி திரள்வார்கள். பின்னர் அதுவே சமயமாகின்றது.

சைவ சமயமும் அன்பு, பாசம், ஆதரவு என்பவற்றையே தனது முழுமுதல் தத்துவங்களாக எல்லா மனிதர்களுக்கும் போதிக்கிறது. ஆனால் இன்று நடைமுறையில் அத்தகைய செயற்பாடுகளை இந்து மத ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் காண்பது அரிதாகி வருகிறது. வருமானத்தை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் போக்கு அதிகரித்துள்ளது. இந்த நிலைமை நீடித்தால், இன்னும் 50 வருடங்களுக்குள் இங்கே கோபுரங்கள் மட்டும்தான் மிஞ்சும்.

அன்பைக் காட்ட வேண்டிய மதம், ஆதரவுக்கரம் நீட்ட வேண்டிய மதம் இதற்கு நேர்மாறாக செயல்படுவது ஏற்புடையதன்று. ஏழை மக்களின் சிரிப்பிலேதான் இறைவன் இருக்கின்றான் என்பதைப் புரிந்து கொண்டு ஆலயங்களும் மத நிறுவனங்களும் செயற்பட வேண்டும்.

ஆலயங்கள் என்பது மக்களால் உருவாக்கப்பட்டவை. அங்கே ஆண்டவன் பெயரால் மக்களால் காணிக்கையாக வழங்கப்படும் பணம் மக்களின் தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றதா? அவர்களின் கல்விக்காகவோ, மருத்துவச் செலவுக்காகவோ, வேறு வசதி குறைந்தவர்களின் வாழ்வாதாரத்துக்காகவோ செலவு செய்யப்படுகின்றதா? ஒரு சில ஆலயங்கள் தவிர பெரும்பாலானவற்றில் இல்லை என்பதே பதிலாகக் கிடைக்கிறது.

யாழ்ப்பாண குடாநாட்டில் 2,700க்கு மேற்பட்ட சைவ ஆலயங்கள் இருக்கின்றன. ஆனால் மக்களுக்குச் சேவை செய்யும் தூர நோக்கத்துடன் செயற்படும் ஆலயமாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தையே உடன் விரல் சுட்டிக்காட்ட முடிகிறது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆரம்பித்த அந்தப் பணி இன்றும் தொடர்கிறது.

வசதி படைத்த ஆலயங்கள் எல்லாம் சமூகம் நோக்கிய பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டும். அதனை விட்டு கோடிகளைக் கொட்டி கும்பாபிஷேகமும் திருவிழாக்களும் செய்வதால் என்ன புண்ணியம் மிஞ்சப்போகிறது? ஆலயங்களுக்கு மாறி மாறி வர்ணம் பூசுவதும் வாண வேடிக்கைகள் காட்டுவதும், ஒலி பெருக்கிகளை ஓங்கி ஒலிக்க விடுவதும், மேளக் கச்சேரிகள் செய்வதும், பாட்டுக் கச்சேரி நடத்துவதுமே சைவ ஆலயங்களின் பாரம்பரியம் என்ற நிலைமையாகிவிட்டது. இதன் மூலம் மக்கள் இறைவன் பெயரால் வழங்கிய பணம் மண்ணாக்கப்படுகிறதே தவிர அதனைக் கொடுத்தவர்களுக்கு ஒரு துளி புண்ணியம் தானும் சேர்வதில்லை.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முல்லைத்தீவிலே சுனாமியினால் 3,000 பேர் இறந்தும் முல்லைத்தீவு நகரமே சுக்கு நூறாகியது. அப்போது துயரம் போக்க இன, மத பேதமின்றி எல்லோரும் உதவிக்கரம் நீட்டினார்கள். மலையகத்தில் உள்ள 50 இந்து ஆலயங்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அனுப்பி அந்த மக்களின் துயரத்தைப் போக்கி, ஆறுதல் கூறினார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து ஆலயங்கள் அந்த மக்களுக்காக பெருமளவில் உதவ முன்வரவில்லை. சில இந்து நிறுவனங்கள் மட்டுமே தம்மால் இயன்றளவுக்கு உதவ முயற்சித்தன. பல பொருள்களைச் சேகரித்துக் கொடுத்தன.

அப்படிப் பார்க்கும்போது இங்கு உள்ள சைவ ஆலயங்களில் கிடைக்கும் வருமானங்கள் மக்கள் சேவைக்காக அன்றி, குறிப்பிட்ட ஒரு பகுதியினரின் சுகபோக வாழ்வுக்காகவே பயன்படுத்தப்படுகிறது எனக் கருதவேண்டியுள்ளது. மக்களுக்குச் சேவை செய்ய மறுக்கின்ற இத்தகைய ஆலயங்கள் இருந்தும் இருக்காததும் ஒன்றே. இந்த நிலைமையை சீர்செய்ய வேண்டிய கடமை, தவறுகளைத் தட்டிக் கேட்க வேண்டிய பொறுப்பு, இந்து மன்றங்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஆதீனங்களுக்கும் உரியது.

பல ஆயிரம் ரூபா செலவு செய்ய உபயகாரரைத் தேடிப் பிடிக்க முடியும்போது நற்பணிக்கு நிதி உதவி வழங்க ஒருவரைப் பிடிப்பதா இந்து ஆலயங்களுக்கு கஷ்டமான காரியமாகப் போகிறது? சைவ ஆலயங்களில் ஆண்டவனுக்குச் செய்யும் அர்ச்சனை எமக்குப் புரியாத மொழியிலேயே இன்றும் நடக்கிறது. அதனைத் தேவனுடைய மொழி என்று வேறு நியாயப்படுத்துகின்றார்கள். நாயன்மார்கள் இறைவன் மேல் பாடிய அருட்பாக்கள் அத்தனையும் எம் இனிய தமிழ் என்பதை மறந்து விட்டார்களே?

அன்பையும் ஆதரவையும் முதன்மைப்படுத்தி அன்று நாயன்மார்களால் வளர்க்கப்பட்ட சைவ மதம் இன்று அவற்றை மறந்து அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அதனைப் பாதுகாக்க சைவமக்கள் மட்டுமல்ல சைவத்தின் பெயரால் இயங்குகின்ற அத்தனை நிறுவனங்களும் முன்வரவேண்டும். ✱

# பனைகளைப் பாதுகாப்போம்!

சி.எஸ்.பரமானந்தா
(மருத்துவர்)

பனையைத் தறிக்காதீர் பயனைக் குறைக்காதீர்" மேற்படி வாசகம் மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்ம வள்ளல் கனகராசா வினால் யாழ்ப்பாண மண்ணில் இற்றைக்கு 30 வருடங்களுக்கு முன் அறிவூட்டப்பட்டது.

காலத்தின் தேவை கருதி அதனை நாம் இன்று மீள விழிப்பிற்கு இடல் வேண்டும். தமிழ் மக்களின் சமூக அடையாளமாகப் பனை மரங்கள் ஆதிகாலம்தொட்டு உள்ளன. வாழ்ந்த பாரம்பரிய மண்ணில் இயற்கையாகவே பனை மரங்கள் உறுதுணையாக இருந்துள்ளன. இதனைத் தமிழகம், இலங்கை, மடகஸ்கார் போன்ற நாடுகளில் காணலாம்.

போரின்போது எமது மண்ணில் பல பனைமரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன; அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. போர் முனையில் எம்மனையில், எம் மண்ணில் பெருமையைக் கூற தலையிழந்தும் தலைநிமிர்ந்தும் நிற்கின்றன எம் பனைகள். எனவே நம் பனையின் பயன்கள் பற்றி வலுயுறுத்தப்படவேண்டும்

தாலசாஸ்திரம் என்ற நூல் பனைமரத்தால் 801 பலன்கள் கிடைக்கின்றன என்று கூறுகின்றது. எத்தகைய நிலத்திலும் வளரும் தன்மையுடையது பனை. மழை பெய்யும் காலத்தில் கிடைக்கும் நீரையும், தன் வேர்களால் நிலத்திலிருந்து உறிஞ்சும் நீரையும் கொண்டே பனைமரம் வாழ்கிறது. இதற்கென நீர் பாய்ச்சுவதோ, உரமிடுவதோ பூச்சி மருந்து தெளிப்பதோ கிடையாது. இவ்வாறு இயற்கை தரும் அற்புத மரத்தை கற்பகதரு என்றே அழைத்தார்கள்.

பனம் பழச்சாற்றை துணியில் பரப்பி வெய்யிலில் காயவிட்டு துண்டுகளாக்கி பனாட்டு என்ற பெயரில் இனிப்புப் பண்டமாகச் சுவைத்திருக்கிறார்கள். தென்னையில் ஆண் மரம், பெண் மரம் என்று கிடையாது. பனையில் ஆண் பனை அலகுப் பனை என்றும், பெண் பனை பருவப் பனை என்றும் அழைக்கப்படுகின்றன. பெண் பனையில் நுங்கு கிடைக்கிறது. இரண்டிலும் பதநீர் எடுக்க முடியும், ஆனால் பெண் பனையில் வரும் பாளைகளில் பதநீர் எடுத்தால் பிறகு நுங்கு கிடைக்காது, பனம் பழம் கிடைக்காது, பனை விதை கிடைக்காது.

பனங்கொட்டை மண்ணில் விதைக்கப்பட்டு கிழங்காகிறது. கிழங்கை எடுக்காமல் அப்படியே விட்டுவிட்டால் பனை மரமாகி விடுகிறது எனவே பெண் பனைகளை விட ஆண் பனைகளில் பதநீர் எடுப்பதே நல்லது.

பதநீர் உடலுக்கு நலம் தருவது, பலம் தருவது. இரவு முதல் அதிகாலை வரை விண்மீன்களும் நிலாக்கதிர்களும் ஒளிபாய்ச்சுகின்றன. காலை முதல் ஞாயிறு தன் கதிர்களால் குளிப்பாட்டுகிறது. தொழிலாளி பாளையைச் சீவி சுரக்கும் நீரில், கடல் வயிற்றுச்சிப்பியின் சுண்ணாம்பும் சேர்ந்து பதப்படுத்துகிறது.

இந்தப் பதநீரைக் குடித்தால், உடல் வெப்பமடையும் நேரத்தில் குளிர்ச்சியூட்டுகிறது. உடல் குளிர்ச்சியாய் இருந்தால் வெப்பமூட்டுகிறது. நரம்பும் தசையும் பழுதடைந்தால் இதயத்தின் செயற்பாடு முடங்கிப் போகும். இவ்வாறு நிகழ்ந்துவிடாமல் பதநீரிலுள்ள கல்சியம் பாதுகாக்கிறது. பல்லும் எலும்பும் பதநீரால் உறுதிப்படுகின்றன. பதநீரில் இருக்கும் இரும்புச்சத்து நரம்புத் தொகுதிக்கு செயலூக்கத்தை அளிப்பதோடு நோய் எதிர்ப்பு சக்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்

எமது மனதுக்கு உதாரணமாக குரங்கைத் தான் சொல்வார்கள். குரங்கு மரத்தில் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்காது. ஒவ்வொரு கிளையாகத் தாவித் தாவிப் போய்க்கொண்டேயிருக்கும். ஏதாவது சேஷ்டை செய்துகொண்டிருக்கும். அதைப் போன்றது தான் மனம். அதனால்தான் குரங்கு என்று சொல்கிறார்கள். இந்த மனதை அலைய விடாமல் ஒரு நிலைப்படுத்து என்று கூறுவார்கள் பெரியவர்கள். அவர்களுக்கு என்ன? சுலபமாக சொல்லிவிடுவார்கள். படுகின்ற அவஸ்தை யாருக்குப் புரியும்.

எமது மனம் அலைவதோடு மட்டும் இருந்தால் அது எங்கே அலைந்து கொண்டிருக்கிறது என்று தேடிப் பிடித்துக் கட்டுப்படுத் தலாம். சில சமயம் அது அப்படியே காணாமல் போய்விடுகிறது. எங்கே இருக்கும் என்று கண்டுபிடிக்கிறதே பெரும்பாடாக இருக்கும். அதன்பின் அதைக் கட்டுப்படுத்துவது கஷ்டம். அதுவாக மனம் வைத்துத் திரும்பி வந்தால்தான் உண்டு.

மனதை ஒருநிலைப்படுத்துவது மிகவும் கஷ்டம் என்று பலபேர் நினைக்கின்றோம். அது எல்லோராலும் முடிகின்ற காரியம் என்றும் வேண்டும் என்றால் ஒரு பரிசோதனை செய்து பாருங்கள் என்றும் கூறுகின்றார் ஒரு பெரியவர்.

ஒரு சாதாரண ஆளிடம் அதிகளவும் சில்லறைக் காசுகளைக் கொடுத்து ''எவ்வளவு இருக்கிறது என்று கூறச் சொல்லுங்கள். அவர் எவ்வளவுதான் எண்ணினாலும் நடுவில் எண்ணிக்கையைத் தவறவிட்டு முழிப்பார். மறுடியும் ஆரம்பத்தில் இருந்து எண்ணத் தொடங்குவார்.

அதே ஆளிடம் நூறு ரூபாய்த் தாள்களைக் கொடுத்து எண்ணச் சொல்லுங்கள். இப்போது அவர் கொஞ்சம் நிதானமாகக் கவனமாக எண்ண ஆரம்பிப்பார். ஏன் இப்படி? ஒரு தாளை தவறவிட்டாலும் நூறு ரூபா போய்விடும். முதலில் அப்படி இல்லை. 5ரூபா போனாலும் 10 ரூபா போனாலும் அது பெரிதாக மனதுக்குத் தோன்றவில்லை.

இந்த உலகத்தில் எதுவும் பெரிதில்லை. இதைவிடப் பெரிதாக ஒன்று உண்டு. அதற்கு விலை மதிப்பில்லை என்கின்ற எண்ணம் வந்துவிட்டால் மனதை ஒருநிலைப்படுத்துவது கஷ்டமாக இருக்காது என்கிறார் அந்தப் பெரியவர்.

மனதை ஒருநிலைப்படுத்திவிட்டால் வெற்றி கிட்ட நெருங்கி வருகின்றது என்று அர்த்தம்.

துரியோதனன், அர்ச்சுனன் இரண்டு பேருக்குமே குரு துரோணர்தான். இவர்கள் இரண்டு பேருக்கும் அவர்தான் வில்வித்தை கற்றுக் கொடுத்தார். கற்றுக் கொடுக்கையில் எந்தவித வித்தியாசமும் இல்லாதுதான் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஆனால் அர்ச்சுனன்தான் திறமையானவனாக உருவாகினான் ஏன்?

ஒரு நாள் துரியோதனன் அர்சுனன் இவர்கள் இரண்டு பேருக்கும் ஒரு சோதனை நடத்தினார் துரோணர் இவர்களின் கற்றல் எந்தளவுக்கு இருக்கிறது என்பதை அறிவதற்கு.

இரண்டு பேரையும் அழைத்துக் கொண்டு காட்டுக்குப் போனார். ஓரிடத்தில் துரியோதனைக் கூப்பிட்டு ''அதோ தெரிகிறது பார் ஒரு மரம் அந்த மரத்தின் வலது பக்கத்தில் ஒரு கிளி உட்கார்ந்து இருக்கிறது. அந்தப் கிளியின் வலது கண்ணுக்கு சரியாக நீ குறி வைக்க வேண்டும் என்றார். துரியோதனன் அதேபோன்று செய்தான். ''இப்போது உனக்கு என்ன தெரிகிறது'' என்று கேட்டார் துரோணர். அவன் ''மரம் தெரிகிறது; அந்த மரத்தின் இலை தெரிகிறது. அதன் மேல் உட்கார்ந்திருக்கும் கிளி தெரிகிறது. அந்தக் கிளியின் தலை தெரிகிறது. கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் நீங்கள் குறிவைக்கச் சொன்ன அந்த வலது கண்ணும் தெரிகிறது'' என்றான்.

''சரி நீ போகலாம்'' என்றார். அடுத்து அர்ச்சுனனைக் கூப்பிட்டார். அதேமாதிரி குறி வைக்கச் சொன்னார். அவனும் அதேபோன்று செய்தான். ''இப்போது உனக்கு என்ன தெரிகிறது'' என்று கேட்டார் துரோணர்.

''கிளியின் வலது கண்ணைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியவில்லை'' என்றான் அர்ச்சுனன். அர்ச்சுனனுக்கு நிகராகத் துரியோதனன் வரவே முடியாது என்பதை அப்போதே முடிவு செய்துவிட்டார் துரோணர். அதனால் மனம் எந்த அளவுக்கு ஒரு நிலைப்படுகிறதோ அதுதான் வெற்றியின் இரகசியம்.

இந்தக் காலத்து இளைஞன் ஒருத்தன் துப்பாக்கியோடு ஒரு வாத்தியாரைத் தேடிக் கொண்டு வந்து ''எனக்கு சுடக் கற்றுக்கொடுங்கள்'' என்றான். ''உனக்கு எப்படிக் கிடைத்தது இந்தத் துப்பாக்கி?'' என்று பயந்துபோய் கேட்டார் வாத்தியார்.

''எங்கள் அப்பா வைத்திருந்தார். அவருக்குத் தெரியாமல் இங்கே எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். எங்கள் அப்பா திரும்பி வீட்டுக்கு வருவதற்குள் கொண்டுபோய் அது இருந்த இடத்தில் வைத்து விடுவேன்'' என்று நம்பிக்கையோடு கூறினான்.

''வாத்தியாரும் துரோணர் போல் ஒரு மரத்தைக் காட்டி அதில் உட்கார்ந்திருக்கும் ஒரு காகத்தின் கண்ணுக்கு குறி வைக்கச் சொன்னார். இவனும் குறி வைத்தான்.

''இப்போது உனக்கு என்ன தெரிகிறது?'' என்று கேட்டார். இவனுக்கு கை, கால்கள் எல்லாம் உதற ஆரம்பித்தது. ''ஐயா, எங்கள் அப்பாவின் முகம்தான் அங்கே தெரிகிறது'' என்றான். ''அங்கே மட்டுமல்ல உனக்குப் பின்னால் கூட உன் அப்பாவின் முகம்தான் இப்போது தெரிகிறது திரும்பிப் பார் அவரே உன்னைத் தேடி இங்கு வந்துவிட்டார்'' என்றார் வாத்தியார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# 'போட்டி' என்ற தரப்படுத்தல் இல்லாத மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை




**சோபனா**

(சென்றவாரத் தொடர்ச்சி)

பாடசாலையின் வளர்ச்சியிலும், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, சேவையை வழங்கும் பாடசாலையின் அதிபர் திருமதி பி. பத்மநாதன் வழிகாட்டலாலும், பாடசாலை நிர்வாகத்தின் சீரிய பணிகளினாலும் சத்தியசாயி பாடசாலை மேன்மை அடைந்து வருகின்றது. பாடசாலையின் நிர்வாகப் பணிப்பாளராகக் கடமையாற்றும் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஸ்ரீ.இரா.வசந்தசேனன், தனது குடும்பத்தாருடன் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பாடசாலையின் நிர்வாக சபையில் கடமையாற்றும் உறுப்பினர்கள், அரச மற்றும் பொதுச் சேவைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்று, இந்தப் பாடசாலைக்கு கிடைக்கப்பெற்றமை ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

பாடசாலையின் ஆரம்ப காலத்தில் யூனியன் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற எஸ்.கந்தசாமி, 2003 ஆம் ஆண்டு முதல் பாடசாலையின் முகாமைத்துவக்குழுத் தலைவராகக் கடமையாற்றி வந்தார்.

அதனைத் தொடர்ந்து பாடசாலையின் அதிபராக 2004 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்து திருமதி பி.பத்மநாதன் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் தற்போதைய பாடசாலையின் அதிபராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

புலமைமிக்க பாடசாலை அதிபர், தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள், சிறப்புமிக்க சமூக சேவையாளர்களாக தம்மை அர்ப்பணித்துள்ள நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோரின் ஒருமித்த சேவையில் பாடசாலை மேன்மை அடைந்து வருகின்றது.

> இலங்கை அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடவிதானத்திற்கு அமைவாக சத்தியசாயி பாடசாலை மனித மேம்பாடு பாடத்திட்டங்களும் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலையின் பண்பு விருத்தியில் மாணவர் மன்றமானது ஆரம்பம், இடைநிலை என இரு பிரிவுகளாக மாணவர்களின் தனித் திறமைகளை வெளிக்கொணரும் நோக்குடன் சேவையாற்றி வருகின்றது.

வாரந்தோறும் குறிக்கப்பட்ட ஓர் நாளில் இயல், இசை, நாடகம் போன்ற துறைகளில் மாணவர்கள் தமது தனித்திறமைகளை வெளிக்கொணர, இந்த மாற்றம் வழி சமைத்துக் கொடுத்துள்ளது. இதனைவிட, பாடசாலையின் முதல்வர்கள் மன்றமானது. தமது சக மாணவர்களுடன் இணைந்து நற்பண்புகளை கற்றுக் கொடுப்பதுடன் பாடசாலை சார்ந்த நிகழ்வுகளுக்கும் தமது தலைமைத்துவமான சேவையை வழங்கி வருகின்றது. இந்தப் பாடசாலை தனது கல்விச் சேவையைச் சீராக வழங்குகின்றது என்பதற்கு அமைவாக வருடந்தோறும் வகுப்பறைகள் அதிகரிக்கப்படுவதுடன், வகுப்பறைக்குத் தேவையான உரிய கட்டட வசதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலையின் வளங்கள் அந்தந்தக் காலப் பகுதிக்கு ஏற்றாற்போல் வளர்ச்சியடைந்து சென்றாலும், சில வளங்கள் உரிய முறையில் கிடைக்கப்பெறாமல் இருப்பதும் பாடசாலையின் ஓர் குறைபாடாக உள்ளது.

இந்தப் பாடசாலையின் மாணவர்க்ளின் விளையாட்டுத் திறன்களை வெளிக்கொணர்வதற்கு, பாடசாலைக்கென ஓர் விளையாட்டு மைதானம் இல்லை என்பது பெரும் குறைபாடாக உள்ளது. இதனை விட மாணவர்கள் தமது திறன்களை வெளிக்கொணர விளையாட்டு உபகரணங்கள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடவிதானத்திற்கு அமைவாக சத்தியசாயி பாடசாலை மனித மேம்பாடு பாடத்திட்டங்களும் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மனித விழுமியங்களே மாணவர்களை சிறந்த ஒழுக்க சீலர்களாக உருவாக்கும் என்பதற்கமைவாக பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு அமைவாக மாணவர்கள் தம்மை ஈடுபடுத்தக் கூடிய வகையில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட வேண்டும் எனும் எதிர்பார்ப்பு பாடசாலை சமூகத்திற்கு உள்ளது.

பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் தம்மை ஈடுபடுத்தி வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சாயி பக்தர்கள், பகவானின் தூண்டலினால் தம்மால் இயன்ற அர்ப்பணிப்பான சேவையினை வழங்கி வருகின்றார்கள்.

ஆன்மிக ரீதியாக மாணவர்கள் மத்தியில் நம்பிக்கை மிக்க நல்லொழுக்கப் பண்புகளை கற்றுக் கொடுத்து எதிர்காலத்தில் சிறந்ததொரு சமுதாயத்தை பாடசாலை வாயிலாக வழங்க வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

மாணவர்களின் நற்பண்புகள் தவிர்ந்த ஏனைய கல்வி, விளையாட்டு, திறனாய்வுப் போட்டிகள் போன்றவற்றில் சகல மாணவர்களும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள். ஏனெனில் இந்தப் பாடசாலையில் " போட்டி " எனும் தரப்படுத்தல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சாயிபாபாவின் தெய்வீக வாக்குக்கமைவாக " போட்டி." எனும் மனப்பாங்கு மாணவர்கள் மத்தியில் உருவாகும் போது பொறாமை, தாழ்வு மனப்பான்மை, அகங்கார உணர்வு போன்ற தீய குணங்கள் மாணவர்கள் மத்தியில் தோன்றுதல் கூடாது என்பதற்கு அமைவாக பாடசாலையில் உள்ள சகல மாணவர்களும் அனைத்து நிகழ்வுகளிலும் உள்வாங்கப்பட்டு, ஒரே தரத்துடன் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்கள்.

இந்த நடைமுறை பாடசாலையின் ஆரம்பகாலம் முதலே இருந்து வருகின்றது. உலகலளாவிய ரீதியில் குடி கொண்டிருக்கும் அதர்மம், அக்கிரமம் போன்ற தீய தூண்டல் செயற்பாடுகளை இல்லாதொழித்து நல்லொழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே சாயியின் சிந்தனையாக உள்ளது. இதனை இந்தப்பாடசாலை நடைமுறை ரீதியாக மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, ஒழுக்க சீலர்களாக மாணவர்களை உருவாக்கி வருகின்றது. சாயியின் சிந்தனைக் கோட்பாடுகளுக்கு அமைவாக பிரார்த்தனை, அமைதி , குழு முயற்சி, குழுப்பாடல், கதை கூறல் எனும் ஐந்து அடிப்படை அம்சங்களை இலக்காக வைத்து பாடசாலையின் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலையின் தங்கு தடையின்றிய வளர்ச்சியில் மானிப்பாய் சத்திய சாயி நிலைய அங்கத்தவர்களும் தமது செயற்பாடுகளை வழங்கி வருகின்றார்கள். அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய சாயி நிறுவனங்களும் இணைந்து தமது செயற்பாடுகளை நிறைவேற்றி வருகின்றனர். சாயி அன்பர்களின் தன்னலமற்ற ஆன்மிக ரீதியான சேவையினால் பாடசாலை மேலும் முழுமை அடைந்து வருகின்றது.

மானிப்பாய் நகரில் தனித்துவமிக்க ஓர் பாடசாலையாகத் திகழும் ஸ்ரீ சத்திய சாயி பாடசாலை, எதிர்காலத்தில் உயர்தர மாணவர்களையும் உள்வாங்கி அவர்களுக்குத் தேவையான கற்றல் செயற்பாடுகளையும் வழங்க வேண்டும் என்பதே அனைவருடைய எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

எனினும் பாடசாலையின் வளங்கள் உரிய நேரத்தில், கிடைக்கப்பெறுவதன் ஊடாகவே இவை சீர் செய்யப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இலவசக் கல்விப் போதனையை, ஆன்மிக சிந்தனைகளுடன் வழங்கும் இந்தப் பாடசாலையின் வீரிய சேவைகள் பகவானின் துணையுடன் தடைகள் இன்றித் தொடரட்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவை விட இந்தியா கூடுதலான பங்களிப்பு

**தவறான பொருளாதாரக் கொள்கையினால் தான் இன்று நாடு பின்னடைவை அடைந்துள்ளது என்று ஹர்ஷா டி.சில்வா எம்.பி. குற்றஞ்சாட்டியுள்ளார்.**

கொழும்பு,பெப்.10

இலங்கையுடனான பொருளாதார ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளில் சீனாவை விட இந்தியாவே கூடுதலான பங்களிப்பை வழங்கி உள்ளது. இதை மூடி மறைத்து சீனாதான் எமக்குக் கூடுதலான பங்களிப்பு வழங்கி வருகின்றது என்று அரசு கூறக்கூடாது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி.சில்வா தெரிவித்தார்.

ஏற்றுமதி, இறக்குமதி கட்டளைகள் ஒழுங்கு வசதிகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை ஒரு விவசாய நாடு. ஆனால் உணவுப் பொருள்களுக்காக வெளிநாடுகளையே நம்பி உள்ளது. கடந்த மாதங்களில் 200 கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை இறக்குமதி செய்துள்ளோம்.

ஆனால் இதனை மூடி நாம் தன்னிறைவு அடைந்துள்ளோம் என்று கூறி வீண் பெருமை காட்டக்கூடாது.

நமது நாட்டின் தேசிய உற்பத்தியில் 23 வீதம் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை இந்தியாவிடமிருந்து கூடுதலான பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

நாம் சீனாவுக்கு எதிரானவர்கள் அல்லர். நாம் உண்மையைக் கூறினால். விரோதமானவர்கள் என்று விமர்சனம் செய்யக்கூடாது.

அண்மையில் இடம்பெற்ற ஏற்றுமதி, இறக்குமதிப் புதிவுகளைப் பார்த்தால் இந்தியாவே சீனாவைவிடக் கூடுதலான பொருள்களை வழங்கி உள்ளது.

ஆனால் அரசு ஏன் சீனாவைத் தூக்கிப் பிடிக்கிறது என்பதும் தெரியவில்லை.

தவறான பொருளாதாரக் கொள்கையினால் தோன்றுகையில் தான் இன்று நாடும் பின்னடைவு அடைந் துள்ளது. இதனை மறுக்க முடியாது-என்றார். (ச-2)

## கண்காட்சியைப் பார்வையிட நேரம் வரையறை

கொழும்பு,பெப்.10

அநுராதபுரம், ஒயாமடுவில் நடைபெறும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியைப் பார்வையிட இரவு 10 மணிக்குப் பின் வருவோர் உள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தேசத்துக்கு மகுடம் கண்காட்சி ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் காலை 8 மணி தொடக்கம் இரவு 12 மணிவரை கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு பொது மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் கண்காட்சியை இறுதி நேரத்தில் பார்வையிடுவதற்கு உள்நுழைவோர் அதிகாலை வரை கண்காட்சி வளாகத்தினுள் தரித்து நிற்பதனால் கண்காட்சி கூடங்களில் கடமையாற்றும் அதிகாரிகள் நீண்ட நேரம் சேவையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே இரவில் 10 மணிக்குப் பின்பு கண்காட்சியைப் பார்வையிட அனுமதிக்கப்படமாட்டாது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# பொன்சேகாவின் சிறைவாசம் கைதிகளின் அடையாளம்



**அரசுதான் நாட்டில் ஜனநாயகத்துக்கு தடை போட்டுள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு,பெப்.10

சரத் பொன்சேகாவை அடைத்து வைத்து அரசியல் செய்கிறது அரசு. அவரது சிறைவாழ்க்கை அனைத்து அரசியல் கைதிகளின் சிறை வாழ்க்கைக்கு அடையாளமாக திகழ்கிறது என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

சரத் பொன்சேகா தொடர்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று எமக்கு நீதிமன்ற ஆணையை பொலிஸார் அறிவித்து உள்ளனர். நாம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு தடை போடுகிறோம் என்று குற்றம் சாட்டப்படுகிறது. நாம் நீதிமன்றத்தை மதிப்பவர்கள். நீதியின் ஆட்சியை வேண்டி நிற்கும் நாம் நீதிமன்ற நடவடிக்கைக்கு தடை போடுவோமா?

இந்த அரசுதான் நாட்டில் ஜனநாயகத்துக்கு தடை போட்டுள்ளது. நாட்டில் மக்களின் சுதந்திர வாழ்க்கைக்கு தடை போட்டுள்ளது. நல்லாட்சிக்கு தடை போட்டுள்ளது. நாட்டில் நீதியின் ஆட்சிக்கு தடை போட்டுள்ளது. எங்களை நீதிமன்றத்தில் நிறுத்தினால் இவற்றை எடுத்துக் கூறுவோம்.

சரத் பொன்சேகாவுக்கு 40 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் வாக்களித்தார்கள். இன்று அவர்கள் அனைவரும் அவரை விடுதலை செய்யச் சொல்லிக் கேட்கிறார்கள். அவருக்கு வாக்களிக்காதவர்களும் அவரின் விடுதலைக்காக இன்று குரல் கொடுக்கிறார்கள் - என்றார். (ச)

## மரணங்களில் பொலிஸார் சந்தேகம்

கொழும்பு,பெப்.10

கொழும்பு,வெள்ளவத்தை, 37 ஆவது ஒழுங்கையில் நேற்றுமுன்தினம் அதிகாலை நிகழ்ந்த இரண்டு மரணங்களும் கொலையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவத்தின்போது 69 வயதான பி. கே .சத்தியநாதன் என்பவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

32 வயதான பாலசுப்பிரமணியன் சர்மிளா என்ற பெண் கட்டிலில் மரணமான நிலையில் காணப்பட்டார். எனினும், அவரின் உடலில் எவ்வித வெளிக் காயங்களும் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றின் நான்காம் மாடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது இந்த வீட்டில் தீப்பரவல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய போதே குறித்த சம்பவங்கள் இடம்பெற்றமை தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த வீட்டின் வெளிக் கதவு பூட்டப்பட்டிருந்தமையால் வேறு நபர்களால் இவர்கள் கொலை செய்யப்படவில்லை என்று வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## விளக்கமளிக்க கால அவகாசம் தேவை என்கிறார் மேர்வின்

கொழும்பு,பெப்.10

தன்மீதான ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பில் விளக்கம் அளிப்பதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாக அமைச்சர் மேர்வின் சில்வா கோரியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று குழுவினால் நடத்தப்பட்டுவரும் விசாரணைகளின்போது, மேர்வின் சில்வா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

விசாரணைக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரிப்பதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு எதிராக குற்றம் சுமத்திய பிரதேசசபை உறுப்பினர்கள் குரோத உணர்வுடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஒழுக்காற்று விசாரணைகளுக்கு தயார் நிலையில் அமைச்சர் சென்றிருந்ததாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், அமைச்சர் மேர்வின் சில்வா எந்தவிதமான பதிலையும் அளிக்காது கால அவகாசம் கோரியதாக குறிப்பிடப்படுகிறது. (ச)

## 120 பொலிஸாருக்கு ஒரே நேரத்தில் இடமாற்றம்

கொழும்பு,பெப்.10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மஹியங்கனைப் பிரதேசத்துக்குச் சென்றபோது ஏற்பட்ட பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமாக, மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 120 உத்தியோகத்தர்களுக்கு உடனடி இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரே தடவையில் 120 பேருக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலம் ஒரே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியமை, ஒழுக்காற்று நடவடிக்கை போன்ற காரணிகளுக்காகவும் இடமாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

120 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் ஊவா மாகாணத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பேராதனை பல்கலைக்கழக கலைப் பீடத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்களையும் உடன் விடுவிக்குமாறு கோரி பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கண்டி மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சுப்பிரமணியசுவாமியுடன் விவாதிப்பது வீண்செயல்

**எமது சமூகத்துக்கு எதிராக செயல்பட்டவர்களை நாட்டுக்கு உள்ளே வருவதற்குக் கூட அனுமதிக்க கூடாது என்று பிரபாகணேசன் எம்.பி. தெரிவித்தார்.**

கொழும்பு,பெப்.10

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட காலத்திலும் இந்தியாவில் இருந்துகொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக குரல் கொடுத்தவர் இந்திய ஜனதா தளக் கட்சியின் தலைவர் சுப்பிர ணிய சுவாமி என்பதை இலங்கைத் தமிழ் மக்கள் மறந்துவிடக் கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்திய அரசியலிலே கோமாளிப் பட்டம் பெற்[illegible] சுவாமி [illegible]ந்திருப்பது வெறும் அரசியல் விளம்பரத்திற்காகவே.

எதிர்காலத்தில் பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சியமைத்தாலும் கூட இவர் போன்றவர்கள் அரசியல் அதிகாரம் மிக்கவர்களாக மாறுவதற்கான சந்தர்ப்பம் கிடையாது. அதேநேரம் எமது இன்றைய அரசியல் பிரச்சினையை இவரிடம் விவாதிப்பது நேரத்தை வீணடிக்கும் செயலாகும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவின் வருகை மூலமாக எமக்கு எதுவும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் நாம் உள்ளோம். எமது பிரச்சினையை சர்வதேச மட்டத்துக்குக்கொண்டு சென்றும் முடிவு பெற முடியாத நிலையில் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதை தீர்மானிக்க முடியாத நிலையில் உள்ளோம்.

எமது சமூகத்திற்கு எதிராக செயல்பட்டவர்களை நாட்டிற்கு உள்ளே வருவதற்குக் கூட நாம் அனுமதிக்க கூடாது. இவரை வைத்து அரசியல் செய்யவேண்டிய அவசியம் இலங்கை தமிழ் அரசியல்வாதிகளுக்கு தேவையில்லை- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

## சுத்தமான உணவு வழங்க உத்தரவு

கொழும்பு,பெப்.10

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியைப் பார்வையிட அநுராதபுரத்துக்கு வருகை தரும் மக்களுக்கு சுத்தமான உணவு வகைகளை வழங்குமாறு உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதனை மீறிச் செயற்படுவோர் தொடர்பாக தனக்கு உடனடியாகத் தகவல் தருமாறு அநுராதபுரம் மாநகர பிதா எச்.பீ.சோமதாஸ பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக அநுராதபுரத்துக்கு அதிகளவிலான மக்கள் வருகை தருவதனால் உணவகங்களின் உரிமையாளர்கள் உணவு வகைகளின் தரம்பாராது விற்பனையை மாத்திரம் நோக்காகக்கொண்டு செயற்படுவதாக குற்றம் சும[illegible] அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழருக்கு உரிமை இன்னும் வழங்கவில்லை

### பா. ஜ.க. உறுப்பினர் இல.கணேசன் குற்றச்சாட்டு



இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டது என்று இலங்கை அரசு அதிகார பூர்வமாக அறிவித்து ஓர் ஆண்டு கடந்த பின்னரும் அங்கு வாழும் அப்பாவித் தமிழர்களுக்கு உரிமை கொடுக்கப்படவில்லை என்று பாரதீய ஜனதா கட்சி தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து புதுக் கோட்டையில் நிருபர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டது என்று இலங்கை அரசு அதிகாரபூர்வமாக அறிவித்து ஓர் ஆண்டுகடந்த பின்னரும் அங்கு வாழும் அப்பாவித் தமிழர்களுக்கு உரிமை கொடுக்கப்படவில்லை.

தமிழர்கள் கட்டும் வீடுகளில் புத்தர் சிலை வைக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. இந்தியாவில் இருந்து செல்லும் பிரதிநிதிகள் ஆழ்ந்து கவனிப்பதில்லை. ராஜபக்ஷ மீது ஐ.நா. குற்றச்சாட்டு தெரிவித்தும், அதை அவர் சரி செய்யவில்லை- என்றார்.(வ)

## இலங்கை மீனவர்கள் இன்று நாடு திரும்புவர்

மூன்று மீன்பிடி படகுகளுடன் 15 இலங்கை மீனவர்கள் இன்று நாடு திரும்புவார்கள் என்று மீன்பிடித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆந்திர பிரதேசத்தில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறி குறித்த இலங்கை மீனவர்கள் இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை மற்றும் தெவுந்தர ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (வ)

# மெய்வன்மைப் போட்டிகள்

சுன்னாகம்,பெப்.10

மல்லாகம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் ந. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜாவும்,சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற உப அதிபர்களான திருமதி பு.மாணிக்கவாசகர்,ந.நந்தகோபன், தெல்லிப் பழை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ.கோபாலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-38)

* * *

சுழிபுரம்,பெப்.10

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்கள் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு,விக்ரோறியன், சி.சிவகணேசன் ஓய்வு நிலை அதிபர் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-28-15)

* * *

தென்மராட்சி,பெப்.10

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை இல்ல மெய்வன்மைப்போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி சி.கந்தசாமி தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும்,சிறப்பு விருந்தி னராக வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமாரும் கலந்து கொள்வர். (வ-9)

* * *

வடமராட்சி,பெப்.10

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கர வெட்டி பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் கலந்து கொள்வார். திருமதி உ.வரதீஸ்வரன் பரிசில்களை வழங்குவார். (வ-8)

* * *

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் வே.க.இரத்தினகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமாரனும் கலந்து கொள்வர். (38)

* * *

யாழ்ப்பாணம், பெப்.10

கொட்டடி நமசிவாய வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் பாடசாலை அதிபர் பி.கணேசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். நகரசபை மேயர் யோகேஸ்வரி பற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக ராசி, நல்லி சில்க் உரிமையாளரான பூலோகராஜ் சசிதரன் கலந்துகொள்வார். (வ-16)

* * *

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் வேல் சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் இரா.மருதயினாரும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கமும் கலந்துகொள்வர். பரிசில்களை திருமதி அம்பாலிகை மருதயினார் வழங்குவார். (வ-86)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.10

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் கு.வேல் சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பொறியியலாளரும் கட்டட நிர்மாணிப்பு கூட்டுத்தாபனத்தின் நிர்வாக இயக்குநருமான மா. இராமதாசனும் சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சற்குணானந்தன் கைலாசநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (வ)

* * *

புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக யாழ் கல்வி வலய மாணவர் அபிவிருத்திப் பிரிவைச் சேர்ந்தவரான இ.குணநாதனும் சிறப்பு விருந்தினராக அச்சுவேலிப்பிரிவு ராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் பி.ஏ.எல்.கீத்சிறி ஆகியோர் கலந்துகொள்வர். (வ)

* * *

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கே.குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பிரதிப் பணிப்பாளர் ஏ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற உதவிப்பொது முகாமையாளர் பி.கணேசலிங்கமும் கலந்து கொள்வர்.(வ)

# புலிகளுக்கு உதவி செய்ததை ஒப்புக் கொண்ட இலங்கைத் தமிழர்

### குறைந்தது 15 வருடகால சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்படலாம்

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உதவி செய்ததாக தன் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டை கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர் ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

நீர்மூழ்கி படகு அமைப்பதற்குரிய மென்பொருளைக் கொள்வனவு செய்ய விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.


இந்த நிலையில் அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்ட இலங்கைத் தமிழர் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டை ஒப்புக்கொண்டுள்ளார்.

கனடாவில் ஒன்ராரியோவை வசிப் பிடமாகக் கொண்ட ரமணன் மயில் [illegible] என்பவர் 2006 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுக்கு நீர்மூழ்கி வடிவமைப்பு தொழில்நுட்ப மென் பொருள் மற்றும் இரவுப்பார்வை கருவிகள் போன்றவற்றை பெற்றுக் கொடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


தன் மீதான குற்றச் சாட்டை அவர் ஒப்புக் கொண்டுள்ளதால் குறைந்தது 15 வருடகால சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்



இணுவில் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் மஞ்சத் திருவிழாவில் முருகப்பெருமான் வீதியுலா வருகிறார். (வ-86)



நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார திருவிழாவின் இறுதிநாள் திருவிழாவில் வைரவப் பெருமான் முருகன், விநாயகர் சகிதம் எழுந்தருளி பூஞ்சப்பரத்தில் தெரு வீதியுலா வருகிறார். (வ- 17)



அராலி கிழக்கு ஆவாரம்பிட்டி முத்துமாரி அம்மன் கோயில் குளிர்த்தி உற்சவம் அண்மையில் நடைபெற்றது. சுவாமி வெளி வீதியுலா வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுக்கிறார். (வ)



நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய விசேட பூசை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மா.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்றது. (வ)

## தும்பளை தூயலூர்து அன்னையின் திருவிழா

தும்பளை தூயலூர்து அன்னையின் திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் வழிபாடுகள் ஆரம்பமாகி திருப்பலியும் திருவுரையும் திவ்விய நற்கருணை ஆராதனையும் பவனியும் இடம்பெறும். நாளை சனிக்கிழமை காலை திருவிழாத் தினத்தன்று முதற் திருப்பலி காலை 5 மணிக்கும் திருவிழாத் திருப்பலி காலை 7 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும். திருவிழாத் திருப்பலியை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமை வகித்து குருக்களுடன் ஒப்புக்கொடுப்பார். அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (வ)




ஐந்து மாவட்டங்களிலும் ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## மின்சாரத்தால் ஒளிபெற்றது மண்கும்பான் கிராமம்

மண்கும்பான் கிராமத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தின் சகல இடங்களிலும் கடந்த சில மாதங்களாக மின்சார வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதனையடுத்து துரிதகதியில் அந்தப் பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு வைபவ ரீதியாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. (ந-14)

# கொமன்வெல்த் அமைப்பிலிருந்து இலங்கையை அகற்ற வேண்டும்

### கனடா பிரதமரிடம் அந்த நாட்டின் எதிர்க்கட்சி உறுப்பினர் வலியுறுத்து

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் கனடா முக்கியமானதொரு நாடாக இருப்பதால் கொழும்பில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொண்டு கனடாவின் குரல் அந்த மாநாட்டில் தமிழர்களுக்காக ஒலிக்க வேண்டுமென புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மைக் சுளிவான் வலியுறுத்தியுள்ளார்.

கனடிய மனித உரிமை அமைப்பு நடத்திய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்தக் கருத்தை மைக் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது கட்சி எதிர்க்கட்சி என்ற ரீதியில் என்னவென்ன அழுத்தங்களை கொடுக்க முடியுமோ அதனைச் செய்து வருகிறது .எங்களது கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ள ராதிகா சிற்சபைஈசன் தங்களின் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலங்கை விவகாரத்தில் எவ்வாறு செயற்படவேண்டுமென்பதற்கான ஆலோசனைகளை வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன என்றும் சர்வதேச நாடுகளின் கவனயீர்ப்பை கவனத்தில் எடுக்காமல் அது நடந்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

மேலும் கனடியப் பிரதமர், தான் இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டுக்குச் செல்லமாட்டேன் என அறிவித்திருந்தார். ஆனால் அதற்கும் மேலாகச் செய்ய வேண்டியவை பல உள்ளன எனத் தெரிவித்த மேற்படி உறுப்பினர், இலங்கையும் கனடாவைப் போல பொதுநலவாய நாடுகள் அமைப்பின் ஒரு கௌரவ அங்கத்துவ நாடாக இருப்பதோடு அதன் மாநாட்டையும் நடத்துகிறது. எனவே ஐ.நா.வில் அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும். இராஜதந்திர வட்டாரங்களினூடாக அந்த நாட்டின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும். இலங்கையைப் பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

> மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலமே இலங்கை அரசு பொதுநலவாய நாடுகள் அமைப்பில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கத் தகுதியுள்ளதா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

மேலும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலமே இலங்கை அரசு பொதுநலவாய நாடுகள் அமைப்பில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கத் தகுதியுள்ளதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அதனை ஆளும் கனடிய அரச கட்சி தனது கொள்கைகளை மாற்றுவதன் மூலமே சாத்தியம் . கனடா முன்னைய காலங்களிலும், இப்போதும் உலக முடிவெடுக்கும் தலைமைகளில் மாற்றங்களைக் கொண்டுவரக் கூடிய ஒரு நாடாக காத்திரமான பங்கை வகிக்கிறது. எனவே இந்த நிலை தொடர கனடா காத்திரமான ஐக்கிய நாடுகள் சபை, பொதுநலவாய அமைப்பு, மற்றும் ஏனைய நாடுகளினூடான தொடர்புகளின் மூலம் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். (ந)

## பகவத் கீதை இளைஞர்களுக்கு கூறுவதென்ன?

*''வாழ்தல் என்பது ஒரு கலை, ஒரு திறன், ஒரு நுட்பம். ஒரு விளையாட்டை விளையாட, இசைக் கருவியை இசைக்கப் பழகுவது போல் வாழ்க்கை நுட்பத்தைக் கற்று பயிற்சி செய்ய வேண்டும்.''*

*-சுவாமி பார்த்தசாரதி*

*வாழ்க்கைக்கான வழிகாட்டி நூலே பகவத்கீதை. அது காலத்தால் அழியாத, உலகளாவிய வாழ்க்கைக் கோட்பாடுகளை விளக்குகிறது. எந்த ஒரு விஞ்ஞான பாடத்தையும் கற்பது போல இந்த உண்மைகள் ஒழுங்கு முறையாக இளம் வயதிலேயே கற்கப்பட வேண்டும்.*




*காலத்தால் அழியாத இந்தக் கோட்பாடுகளைக் கற்று நடைமுறைப்படுத்துவதன் மூலம் தெளிவான புத்தியை வளர்த்து, வாழ்வின் சவால்களைச் சிறந்த முறையில் எதிர்கொள்ள முடியும்.*

*கீதை செயல்துடிப்பையும், மன அமைதியையும் ஒருங்கே இணைக்கும் வாழ்க்கை நுட்பத்தைச் சொல்லித்தருகிறது. கீதையின் தத்துவம் சுய முன்னேற்றத்தை விருத்தி செய்து, மனித வாழ்வின் மிக உயர்ந்த மெஞ்ஞான நிலையை அடைய உதவுகிறது. பகவத் கீதையின் 13 ஆவது அத்தியாயம் ஒரு நிறைவான மனிதனிடமுள்ள எளிமை, தூய்மை, துன்பம் விளைவிக்காமை, சுயகட்டுப்பாடு, விடாமுயற்சி போன்ற '20 சீரிய குணங்களை' விளக்குகிறது. இந்த விழுமியங்களைக் கற்று, உள்வாங்கி வாழ்வதன் மூலம் வெற்றியையும், அமைதியையும் அடையலாம்.*

## மாலைதீவு ஜனாதிபதிக்கு ஆதரவு

மாலைதீவின் புதிய ஜனாதிபதிக்கு இலங்கை, இந்தியா தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

மாலைதீவில் திடீரென அந்நாட்டு ஜனாதிபதி மொஹமட் நசீட் பதவி விலகும் நிலை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக மொஹமட் வஹீட் ஹசன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

புதிதாகப் பதவி ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மொஹமட் வஹீட் ஹசனுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் தொடர்ந்து தனது ஆதரவு இருக்குமெனக் கூறியுள்ளார் இந்திய பிரதமர் மன் மோகன் சிங்க். இதேபோல் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தனது ஆதரவை தெரிவித்துள்ளதுடன் பதவி மாற்றம் நடந்தாலும் இரு நாடுகளுக்குமான உறவில் மாற்றமில்லை எனக் கூறியுள்ளார். (ந)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 08 . 1926

மறைவு 10 . 02 . 2011

**அமரர் நாகராசா அன்னம்மா**

ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது
தவிக்கின்றோம்.

N. நாதன்
32, தாளையடி லேன்,
திருநெல்வேலி. (14271)(6-7-8)

பிள்ளைகள்.

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 13 . 06 . 1976

உதிர்வு 12 . 02 . 2009

**தம்பியப்பா சிவகுமார்**

சிவா என்று சிரித்த முகம் சினந்தறிய வண்ணமுகம்
சுறுசுறுப்பாய்க் கலகலப்பாய்
செய் தொழிலின் ஊக்கமதாய் உற்றவருக்கும்
மற்றவருக்கும் உண்மைமிகு
உத்தமனாய் வாழ்ந்து வந்த சிவா உன்னை
அன்னியன் வந்து தாக்கியதோ
உன் ஆறாத் துயரால் அழுது புலம்புகின்றோம்.

ச.சந்திரமூர்த்தி,
சாந்தகுமாரி
(அத்தான்,
அக்கா)
155.ஆம் கட்டை,
இந்துபுரம்,
திருமுறிகண்டி. (110281)(6-7-8)

உன் ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள், அன்னை, தந்தை,
அக்காமார், அண்ணாமார், தம்பிமார், தங்கைமார்,
அத்தான்மார், மச்சான்மார், மச்சாள்மார், மாமா,
மாமி, மருமக்கள்மார், மருமகள்மார், உற்றார்,
உறவினர், நண்பர்கள் அயலவர்கள்.

## தவறிவிட்டது

NPJV 8037எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் ரின்பக்க இலக்கத்தகடு யாழ்ப்பாணத்துக்கும், சங்கானைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 250 0505 எனும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## பிறீமா நம்பர் 01கோழிக் குஞ்சு

பிறீமா முட்டைக் குஞ்சு (வெள்ளை, சிவப்பு) இறைச்சிக் கோழிக் குஞ்சு. ஒரு குஞ்சு 100/= ஓடர்களை முன் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய

தொலைபேசி இல:
077 9337287 / 077 4164734

## தவறிவிட்டது

வீமன்காமம் மாவிட்டபுரம் எனும் முகவரியுடைய கிருஷ்ணன்சுகுமார் என்பவரின் தே.அ.அ. இல (730404174V) ஹற்றன் நஷனல்வங்கிப்புத்தகம் (016020352284) மற்றும் வாகனசாரதி அனுமதிப் பத்திரம் என்பனஅடங்கியபேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(14304)(6-7-8) 077 6029621

## தவறிவிட்டது

டச்சு வீதி சண்டிலிப்பாய் என்னும் முகவரியுடைய தருமலிங்கம் மோவீதன் என்னும் பெயருடைய தேசிய அடையாள அட்டை (832243779V) மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று கடந்த 05.02.2012 அன்று சங்குவேலி வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 077 0759898
(14306(6-7-8)

கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய்
Dr.S. குகதாசன்
கண் சத்திரசிகிச்சை நிபுணர்

## இலவச கண் கிளினிக்

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த
வைத்தியசாலைக்கு
கண் சத்திர சிகிச்சை நிபுணர்
**Dr.S. குகதாசன்**
ஒன்றவிட்ட வியாழக்கிழமைகளில்
வருகை தந்து இலவச கண் கிளினிக்
நடத்துவார் என்பதை மகிழ்வுடன்
அறியத்தருகின்றேன்.
வியாழக்கிழமை (16.02.2012)
அன்று இக் கிளினிக்கைத்
தொடக்கிவைப்பார்.

021 225 5157
077 6171451
வைத்திய மேலதிகாரி
(14310) (45-6-7)

## அழைப்பு

மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்
கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய்

இணுவில் மக்லியோட் வைத்தியசாலை, மானிப்பாய்
கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மருத்துவ சேவையை
முன்னிட்டு உடுவில் தென்னிந்திய திருச்சபை
தேவாலயத்தில் (உடுவில் மகளிர் கல்லூரி வளாகம்)
12.02.2012 பிற்கல் 3 மணிக்கு
வைத்தியசாலை ஞாயிறு ஆராதனை நடைபெறும்.
நண்பர்கள் யாவரும் இந்த அழைப்பை ஏற்று
இந்த ஆராதனையில் பங்கேற்று சிறப்பிக்குமாறு
அன்புடன் வேண்டுகின்றேன்.

தொ.பே.இலக்கம்
021 225 5157,
021 224 1569
(14310) (45-7-6)

வைத்திய மேலதிகாரி,
கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை,
மக்லியோட் வைத்தியசாலை.

## Job Opportunity

எமது யாழ்.நகர் கிளையில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Course Counselor | - Female |
| Customer Relation Officer | - Female |
| Computer Instuctor | - Male / Female |
| English Language Lecturer | - Male |
| Assist. Lecturer for C, C++, Java | - Male / Female |
| Lecturer for Auto CAD, Tally | - Male / Female |

நேரடியாக, தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

**ASIAN COMPUTER EDUCATION**

#2G, Stanley Road, Jaffna.
e-mail : asianedu@dialogsl.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** விரதம், இறைவழிபாடுகளில் நாட்டம் செல்லும். அதிக கற்பனை செய்திருந்த காரியம் ஒன்று, நடக்காமல் போகலாம். வயிறு தொடர்பான உபாதைகளைத் தவிர்க்க, உணவில் கவனம் அவசியம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கையான அணுகுமுறை அவசியம். சங்கடம் தரும் செய்திகளை அல்லது சந்தோசமான செய்திகளைக் கேட்கலாம்.

**இடபம்:** மற்றவர்கள் சிலரின் பொருளுக்கு ஆசைப்படுவீர்கள். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சக ஊழியர்கள் சிலரின் செயற்பாடுகளைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள். உறவினர்கள் மத்தியில், உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். சிலருக்கு வாக்குக் கொடுத்துவிட்டு, அதைக் காப்பாற்ற முடியாமல் போகலாம்.

**மிதுனம்:** பம்பரமாக சுழன்று பணியாற்றும் நாள். உங்களின் கடந்த கால அனுபவங்களை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். அயலாரின் தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். சில நல்ல வாய்ப்புகள் தேடி வரலாம். பெரிய மனிதர்கள் சிலர் மூலம், காரியங்களை முடிக்க வாய்ப்புக் கிடைக்கும். இனிமையான நாள்.

**கடகம்:** வீண் பேச்சுக்கள்பேசி, அரட்டை அடித்து நேரத்தைப் போக்குவீர்கள். சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல், அவர்களின் அதிருப்திக்கு ஆட்படலாம். வேறு வேலைகள் காரணமாக வழக்கமான பணிகளைச் செய்ய முடியாமல் விடுப்பு எடுக்கலாம். உடல் நலக்குறைவால் மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

**சிங்கம்:** சிக்கலான நபர்களையும் சாமர்த்தியமான பேச்சுக்களால் கவிழ்த்து, காரியம் சாதிப்பீர்கள். மாற்று மத அல்லது மாற்று மொழி பேசும் நண்பர்கள் வழியில், உதவிகள் கிடைக்கலாம். தொழில் விடயங்களில், யாரிடமும் சிடுசிடுப்பாக நடந்து கொள்ள வேண்டாம். நாளை சந்திக்க நினைத்த நண்பர் ஒருவரை, இன்றே சந்திக்கலாம். இனிய அனுபவம் பெறலாம்.

**கன்னி:** மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு, நீங்கள் பொறுப்பேற்க நேரிடலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களைத் தேடி வரலாம். பொறுப்பில்லாமல் செயற்படும் குடும்ப உறுப்பினர்கள் மீது, கோபம் கொள்ளலாம். விருந்தினர்கள் வருகையால் சிரமங்கள் ஏற்படலாம். சோம்பல் ஆள்கொள்ளும்.

**துலாம்:** கருணை, பரிவுடன் நடந்து கொள்வீர்கள். நண்பர்கள் சிலரிடம் ஆலோசனை கேட்டு முக்கிய காரியங்களைச் செய்வீர்கள். நிலம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகள் வழியில், சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். ஆடை, ஆபரணம் வாங்கலாம்.

**விருச்சிகம்:** அசட்டுத் தைரியம், துணிச்சலுடன் சில வேலைகளைச் செய்வீர்கள். பல நாள்களாகச் செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் செல்லலாம். நண்பர்கள் இடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றை தலையிட்டுத் தீர்த்து வைப்பீர்கள். மாணவர்கள், ஆசிரியர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். நினைத்தது எல்லாம் நினைத்ததுபோல நடக்கும் நாள்.

**தனுசு:** உறவினர் ஒருவரின் செயற்பாடுகளால், கோபம், எரிச்சல் அடையலாம். நண்பர்கள் சிலரிடம் உங்களின் பிரச்சினையைச் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். உறவினர் ஒருவரிடம் பெருமை பேசுவீர்கள். நீங்கள் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல், சிலர் கையை விரிக்கலாம். மற்றவர்களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுக்கலாம்.

**மகரம்:** மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களிடம் காட்டலாம். வெளியில் செல்லும் போது, சில பொருள்களை எடுத்துச் செல்ல மறந்து விட்டு, அதனால் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். உங்களின் பலவீனத்தைச் சுட்டிக் காட்டி, சிலர் கேலி செய்யலாம்.

**கும்பம்:** உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். சிலருக்கு மனம் உவந்து பொருள் உதவி செய்வீர்கள். உடன் பிறப்புகள் வழியில், எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். உங்களின் சில அனுபவங்களை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள் பேசுவீர்கள்.

**மீனம்:** மனதில் பட்டதை, சரியென செய்யும் நாள். இரண்டு நாள்களாக தடைப்பட்ட காரியங்கள், இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரலாம். போட்டிகள், சவால்களில் வெற்றி பெறுவீர்கள். உறவினர் ஒருவர் கடந்த காலத்தில் செய்த உதவிக்கு, இப்போது பதில் உதவி செய்யலாம்.

**நாளை**

தை 28 சனிக்கிழமை 11.02.2012
திதி: சதுர்த்தி மு.இ. 09.42 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.ப. 11.02 வரை
சுபநேரம்: 03.34 - 05.04 வரை,
ராகு காலம்: 09.34- 11.04 வரை

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 2 | | 5 | | 3 | 7 | |
| | | 8 | | 3 | 4 | | 6 | 9 |
| | | | | 6 | | 2 | | |
| | 4 | | | | | 8 | | 5 |
| 2 | | | 8 | 1 | 3 | | | 6 |
| 8 | | 6 | | | | | 2 | |
| | | 3 | | 9 | | | | |
| 6 | 2 | | 5 | 8 | | 4 | | |
| | 1 | 4 | | 7 | | 5 | 8 | |

சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 6 | 8 | 2 | 1 | 9 | 5 | 7 |
| 9 | 1 | 5 | 7 | 6 | 4 | 3 | 8 | 2 |
| 2 | 7 | 8 | 9 | 5 | 3 | 1 | 4 | 6 |
| 5 | 9 | 3 | 2 | 1 | 6 | 8 | 7 | 4 |
| 6 | 8 | 2 | 4 | 3 | 7 | 5 | 1 | 9 |
| 1 | 4 | 7 | 5 | 8 | 9 | 6 | 2 | 3 |
| 8 | 5 | 4 | 3 | 9 | 2 | 7 | 6 | 1 |
| 3 | 2 | 1 | 6 | 7 | 8 | 4 | 9 | 5 |
| 7 | 6 | 9 | 1 | 4 | 5 | 2 | 3 | 8 |

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
06.04.1945

உதிர்வு
22.01.2011

**திருமதி**
**பரமேஸ்வரன்**
**ஞானபதி**

அன்பும், பண்பும் அறிவும் ஆற்றல் பலவும் கொண்டு
ஆசையாய் எல்லோருடனும் அக மகிழ்ந்தீர்கள்
எத்தனை கனவுகள் கண்டோம் அத்தனையும் கனவாய் போனதே
சோதனைகள் வேதனைகள் தாண்டி வந்த உங்களுக்கு
இறைவனின் பெரிய சோதனையில் தோற்று விட்டீர்களே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் - உங்கள்
நினைவுகள் என்றென்றும் மறைந்திடுமோ
காலங்கள் விடைபெறலாம் ஆனாலும்
கண்முன்னே நிழலாடும் உங்கள் நினைவுகள்
நித்தமும் எம்முடன் உயிர் வாழும் அம்மா
நொடிகள் நிமிடமென காலங்கள் கரைந்தாலும்
கரைவதில்லை அன்பாலே ஆட்கொண்ட நினைவலைகள்
பூவுலகில் பிறந்துவிட்ட யாவருக்கும் இறப்பு என்பது விதி!
ஆனால் இனிமையால் நிறைந்து விட்ட
உங்கள் உணர்வலைகள் என்றுமே இறப்பதில்லை
உங்களை இழந்த பின்னர்.....
வேரை இழந்த விழுதுகள் ஆனோம்
மாண்டவர் வருவதில்லை மனதை தேற்றிவிடு
ஆயிரம் அறிவுரைகள் ஆனாலும் அடங்கவில்லை
எங்கள் குமுறல்கள்.
பூத்திருக்கும் பூக்கள் கூட பார்த்திருக்க வாடி விடும்
ஆனால் பார்க்காமல் இருக்கும் உங்கள்
பூ முகமோ என்றும் வாடாதிருக்கும் அம்மா

உங்கள் ஆத்மா சாந்தி பெற்று மீண்டும்
உயிர் பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சீ.வீ.பரமேஸ்வரன் (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

(14277) (2-6-7)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**வைரவநாதன்**
**இராசரத்தினம்**

திதி : திருதியை (10.02.2012)

**அன்னை மகிழ: 20.05.1931**

**அனைவரும் நெகிழ: 11.02.2009**

எம் அன்பு அப்பாவே
ஆண்டு மூன்று கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
எங்கள் உயிரின் உயிரானவரே
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது

இராஜவீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
சிறுப்பிட்டி.

என்றும் உங்கள் நினைவுடன்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன செய்ய முடியும் அந்த அபலையால்?

நேற்றுமுன்தினம் அதிகாலை அவசர அவசரமாக தனது காலைக் கடனை முடித்துக் கொண்டிருந்தாள். வேலைக்குப் போவதற்கான நேரம் நெருங்க நெருங்க அவளின் நெஞ்சில் படபடப்பு. ''ஏன் புள்ளை அவசரப்படாதை ஆறுதலாய் வீட்டு வேலையை பார்க்கலாமே'' என்று அவளது தாய் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள். சொல்லுவதை காதில் போட்டுக் கொள்ளாமல் தனது வீட்டு வேலையில் மும்முரமாக ஈடுபட்டாள் கமலா. வீட்டு வேலையை முடித்துக் கொண்டு மதிய உணவினை கரியலில் எடுத்துக் கொண்டு மானிப்பாய் பஸ் தரிப்பிடத்திற்கு வந்து சேர நேரம் 9.15 ஆகிவிட்டது. அங்கே பல பெண்கள் பஸ்ஸிற்காக காத்துக்கொண்டு நிற்கிறார்கள், யாழ்ப்பாணம் செல்லும் ஏதாவது ஒரு பஸ்ஸில் ஏறி விட வேண்டும் என்று பஸ்ஸிற்காகப் பார்த்துக் கொண்டு நின்றாள். நேரத்துக்கு அலுவலகத்துக்கு சென்று விட வேண்டும். நேரம் செல்லச் செல்ல மனதில் படபடப்பு அதிகரித்தது. பக்கத்தில் யார் நிற்கிறார்கள். வீதியில் யார் போகிறார்கள் என்று கூட பார்ப்பதற்கு நேரம் இல்லை. அடிக்கடி தனது கையில் கட்டப்பட்டிருந்த மணிக்கூட்டினை பார்த்த வண்ணம் நிற்கிறாள்.

வீதியில் தூசி எழுப்பியபடி அதி கூடிய வேகத்தில் ஒரு மினி பஸ் வந்து கொண்டிருக்கிறது. அதன் பின்னே அரச பஸ் ஒன்றும் போட்டிக்கு வந்து கொண்டிருக்கிறது. யார் முந்துவார்கள்? இது பயணிகள் பஸ்ஸா அல்லது ஏதாவது பஸ்களுக்கிடையே ஓட்டப் போட்டி நடக்குதா என்று தெரியாமல் அதி கூடிய வேகத்தில் பஸ்கள் வந்து கொண்டிருப்பதால் பஸ் தரிப்பிடத்தில் நிற்பவர்களுக்கு ஒன்றுமே விளங்காமல் விழி பிதுங்கி நின்றனர். இவளோ அக்கம் பக்கம் பார்க்கிறாள்.

யாராவது கொடி காட்டிக் கொண்டு நிற்கிறார்களா என்று. ஓட்டப் போட்டிகள் நடக்கும்போது வீதிகளில் கொடி காட்டி வீதிகளில் செல்பவர்களை ஓரங்கட்டுவார்கள். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. மீண்டும் பஸ்கள் வரும் பக்கம் பார்க்கிறாள். பயணிகள் பஸ்தான் என முடிவெடுத்தது போல தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தாள். மினி பஸ் பக்கத்தில் வந்து புழுதியைக் கிளப்பி அங்கே நின்றவர்களை குளிப்பாட்டியது. அந்த மினி பஸ்ஸில் இருந்து இறங்கிய இளம் நடத்துநர் ''ஏறுங்கோ சீங்கிரம் ஏறுங்கோ'' என கத்திக் கொண்டு நின்றான்.

அந்த நடத்துநர் கத்தும்போது யாரோ துரத்திக் கொண்டு வாறாங்கள். உடனே ஏறாவிட்டால் பிடித்து விடுவார்கள் என்ற மாதிரி இருந்தது. அவள் அந்தரப்பட்டு பார்ப்பது தெரிகிறது.

அந்த பஸ்தரிப்பிடத்தில் நின்றவர்கள் ஏற மனமில்லாமல் நின்றனர். இப்படி அதிவேகமாக ஓடும் மினி பஸ்ஸில் ஏறி ஏதாவது விபத்து நடந்தால் எலும்பு கூட மிஞ்சாது போய் விடும் என்ற பயத்தில் ஒருவரும் ஏறாமல் நிற்பது தெரிகிறது. ஆனால் நடத்துநர் விட்ட பாடில்லை. அங்கே நின்ற தாய்மார்களின் கையைப்பிடித்து இழுத்து மினி பஸ்ஸில் கட்டாயப்படுத்தி ஏற்றினான். இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்காமல் நின்ற தாய்மார்கள் ஒன்றுமே செய்ய முடியாமல் ஏறிக் கொண்டனர். ''அடப்பாவிகளா இப்படியா ஏற்றுவது'' என்று நடத்துநரைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்த அவள் அருகில் வந்து ''எல்லோரும் ஏறி விட்டார்கள் நீ ஏன் ஏறாமல் நிற்கிறாய்'' என்று கேட்டுவிட்டு அவளது பதிலை எதிர்பார்க்காமல் அவளது கையைப் பிடித்து இழுத்தான். அவள் கையைத் தட்டி அவனது பிடியில் இருந்து நழுவுவதற்கு முயற்சி செய்தாள். கயிறு இழுவைப் போட்டி போல இவர்கள் இழுபடுகிறார்கள். அவ்வீதியூடாக செல்பவர்களில் சிலர் பார்த்துக் கொண்டு தமது வேலை நிமித்தம் பேசாமல் சென்று கொண்டிருக்கிறார்கள். சிலர் கொஞ்சம் தள்ளிச் சென்று ஓரமாக நின்று விடுப்பு பார்த்துக் கொண்டு நின்றார்கள். அதையும் பொருட்படுத்தாமல் பஸ் நடத்துநர் அவளை இழுத்து பஸ்ஸில் ஏற்றுவதிலேயே குறியாக நின்றான்.

களைப்பில் அவள் விட்டுக் கொடுக்க அவளை இழுத்து பஸ்ஸில் ஏற்றுகிறான். உள்ளே போகும் படி அவள் முதுகில் கை வைத்து தள்ளி விடுகிறான். பஸ்ஸில் ஏற்றப்பட்டவள் களைப்பின் நிமித்தம் மூச்சு வாங்குவது தெரிகிறது. என்ன செய்ய முடியும் அவ்ளால். ஆணாக இருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும். பஸ்ஸிற்குள் எல்லோரும் தலை குனிந்தபடி நின்றனர். மினி பஸ் பறக்கத் தொடங்கியது. முந்திக் கொண்ட அரச பஸ்ஸினை துரத்த ஆரம்பித்தது. பஸ்ஸிற்குள் இருப்பவர்களைப் பார்க்கிறாள். கூடுதலாக முதியவர்கள் காணப்பட்டார்கள்.

அவர்களில் பலர் ஆஸ்பத்திரி கிளினிக்குக்காகச் செல்பவர்கள். இப்படியாக வேகமாக ஓடினால் முதியவர்களின் நிலைமை என்னவாகும். அவர்களது வருத்தம் கூடி விடுமே ஒழிய ஒரு போதும் குறைந்து விடாது. அவளின் முகபாவனையில் அவர்களைப் பார்த்து உருகுவது தெரிகிறது. பஸ் பறக்கிறது. பஸ்ஸில் உள்ள கம்பி ஒன்றை இறுக்கிப் பிடித்துக் கொண்டு நிற்கிறாள். எங்கே கொண்டு போய் மோதப் போறானோ என்று தெரியாமல் விழித்துக் கொண்டு அவள் மட்டுமல்ல அந்த பஸ்ஸில் இருக்கின்ற எல்லோரும் பார்ப்பது தெரிகிறது.

அவர்கள் முகத்தில் பயம் தொற்றிக் கொண்டிருப்பது தெரிகிறது. இதற்கிடையில் அந்த நடத்துநர் அவளிடம் மோதுவதில் விருப்பம் போல அதுதான் அவளை தொந்தரவு செய்த வண்ணமே இருக்கிறான். ''தஞ்சக் கேடாய் இருக்கிறாய் சாப்பிடவில்லையோ?'' என்று நடத்துநர் அவளிடம் கேட்கிறான். தான் சாதித்து விட்டது போல அவனது நக்கல் சிரிப்பு இருந்தது. என்ன செய்ய முடியும் அவளால்? மௌனமாகவே தான் இறங்கும் இடம் வரும் வரை பார்த்துக் கொண்டு நின்றாள். ஏதாவது திருப்பிக் கேட்டால் கையைப் பிடித்து இழுத்தவன், வேறு ஏதாவது செய்து விட்டால் சனத்துக்குள்ள மானம் போய்விடும் என்று அவள் நினைப்பது பயத்தில் ஒடுங்கி ஓரமாக நிற்பதில் இருந்து தெரிகிறது. அவள் இறங்கும் இடம் வந்ததும் இறங்க முற்பட முன்னரே அவன் மீண்டும் அவளின் கையைப்பிடித்து இழுத்து இறக்கி விட்டான். அவள் ஒன்றுமே செய்ய முடியாமல் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அந்த மினி பஸ்ஸை திரும்பிப் பார்க்காமல் வேலைத் தளத்துக்கு வந்து சேர்ந்தாள். வேலைத்தள வாசலுக்குள் நுழையும் போது வேலை முடிந்து மீண்டும் எப்படித்தான் வீட்டுக்கு பஸ்ஸில் பயணம் செய்யப் போறேனோ என்று தெரியாமல் பயத்தில் உறைந்திருப்பது அவள் முகத்தில் தெரிகிறது. ✱

கோப்பாய் சண்முகம்

கதையோடு செய்தி


31 ஆம் நாள் நினைவஞ்சலி

வைத்தியலிங்கம் துளசியம்மா தம்பதியரின் அன்பு மகனும்

யாழ்ப்பாணம் 154, நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் வைத்தியலிங்கம் மகேந்திரன் (குணம்)

மகேந்திரன் மரக்காலை உரிமையாளர்

தாயின் மடியில் 16 06 1945

இறைவன் அடியில் 11 01 2012



குணம் எனில் குணத்தில் நல்லோன்
குன்றிடா உழைப்பில் வல்லோன்
மணமிகு அன்பு கொண்டோன்
மற்றவர்க்குதவும் பண்போன்
இனியவன் இறை பதம் சேரும்
இன்னருட்பேறு பெற்றார்
நினைவெலாம் உயிர்த்து நாளும்
நீங்கிடாது எம்முள் வாழ்வார்
அப்பா.... அப்பா.... அப்பா....
அன்புடன் அறிவையூட்டி
அரவணைத் தவனி தன்னில்
இன்பமாய் இனிது வாழ
இணையிலா வழியும் காட்டி
இந்நில மீது நாங்கள்
எங்கணும் உயர்ந்து நிற்க
இன்முகத்தோடு எந்தை
எத்தனை கடமை செய்தாய்
மென்மைசேர் நினது வாழ்வு
மேன்மையை காணும்வேளை
மின்னலாய் மறைந்ததேனோ?
எம்மை நீர் பிரிந்ததேனோ?
உன்னுயிர்ப் பூக்கள் நாங்கள்
உணர்விழந் துருகுகின்றோம்
என்றும் எம் உள்ளமெங்கும்
உயிர்த்து நீர் இருப்பீர் வாழ்வீர்!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

மனைவி: ம. கமலேஸ்வரி,
பிள்ளைகள்: ம. நிறைஞ்சன் (U.K), ம. கிருபாகரன் (U.K),
ம. வசந்தன் (U.K), ம. சர்மிலன் (U.K),
அ. துஷ்யந்தி (வவுனியா)

"வினோ வாசா"
இல. 222, தேக்கவத்தை,
கண்டி றோட், வவுனியா.

குடும்பத்தினர்.



5 ஆம் ஆண்டு நினைவலைகள்



சித்த வைத்திய கலாநிதி

வேலாயுதம்பிள்ளை குகமூர்த்தி

திதி : அபரபக்க திருதியை (10.02.2012)

தோற்றம்: 21.04.1940 மறைவு: 05.02.2007

சுகவாழ்வை எமக்களித்த அப்பா - அப்பா
எம்மால் ஆனபிழை ஏதுமுண்டோ
ஏமாந்தோம் நீங்கள் இருப்பீர்கள் என்றே
பூவுலகில் இனி எங்கே காண்போம் அப்பா

"கந்தையா வளவு",
259, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (10.02.2012) வெள்ளிக்கிழமை, நாவலப்பிட்டி நகரசபை மண்டபத்தில்
பிரதம விருந்தினர்
மாண்புமிகு மஹிந்தானந்த அளுத்கமகே
(விளையாட்டுத்துறை அமைச்சர்)
சிறப்பு விருந்தினர்
உயர்திரு A. நடராசா
(கண்டி இந்திய தூதரக அதிகாரி)
ஆகியோர் முன்னிலையில், நாவலப்பிட்டி மக்களால் கௌரவிக்கப்படும்
கலாபூஷணம்
பிள்ளைநாயகம் திருநாவுக்கரசு
அவர்களை நாமும் பாராட்டுகிறோம்.

அரியாலை திருமதி நாகலிங்கம்-புஸ்பமணி
அரியாலை திரு. திருமதி சிவானந்தன்-கலாமாலா
கொக்குவில் திரு. திருமதி செல்வதாஸன்-மலர்
அரியாலை திரு. திருமதி வரதராஜன்-இரஞ்சினிதேவி
குடும்பத்தினர்.

C\8869) (6,7,10)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோ. வரதராஜமூர்த்தி
(வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிமனை, முல்லைத்தீவு)

எமது பாடசாலையில் பத்து வருடங்களுக்கு மேல் ஆசிரியராக அரும்பணியாற்றிய இவர் கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தி பெற்று பிரதிக் கல்விப் பணிப்பாளராக தென்மராட்சி வலயத்தில் பணியாற்றி தற்போது முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள தங்களை மேலும் பல பதவிகள் பெற்று பல்லாண்டு காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யாழ். கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம், கைதடி

(இ/8876)(6-9-45)


# பனைகளைப்....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி....)

தியையும் கொடுக்கிறது.

பதநீரிலிருக்கும் தயமின் என்ற உயிர் சக்தி மூளையைச் சுறுசுறுப்பாகச் செயற்பட வைக்கின்றது. இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது. பதநீரில் இருக்கும் நியாசின் எனும் மூலக்கூறு மனத்தடுமாற்றம் வராமலும் வாய்ப்புண் வராமலும் காக்கிறது. இப்போது குளிர்பானம் மற்றும் சோடாவுக்குப் பதிலாக கடைகளிலெல்லாம் பதநீர் கிடைக்க வேண்டும். குறிப்பாக 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பதநீர் மிகவும் அவசியமான பானமாகும். இது பிற்காலத்தில் என்புருக்கி நோய் வராது தடுக்கும்.

மண்ணில் எந்தவித முதவீடும் இல்லாமல், பராமரிப்பும் இல்லாமல் உரமிடுதல்,நீர்பாய்ச்சுதல் என்று செலவே இல்லாமல் வளர்ந்து நிற்கும் மரங்களிலிருந்து இத்தனை நலன்களைத் தரும் பதநீரை நாம் எடுக்கிறோமா? எடுக்காமல் இருப்பது மடமை அல்லவா?

பனையைச் சார்ந்த காகமும் அமுதுண்ணும் என்ற பழமொழியே உண்டு. பதநீரைக் கூழாக்கி சிரட்டையில் ஊற்றி எடுப்பதைக் கருப்பட்டி, கற்பகக்கட்டி என்கிறோம். பதநீரைப் பக்குவமாகக் காய்ச்சிக் கூழாக்கி சில நாள்களில் படிக வளர்ச்சிப்படி கற்கண்டாகத் தயாரிக்கலாம். இவையனைத்தும் அருமையான சக்தி படைத்தவை.

பருவமடைந்த மரங்களில் மட்டுமே தொழிலாளர்கள் ஏறி இறங்கிப் பயனைக் கொண்டு வருகிறார்கள். பருவமடைந்து விட்டோம் பதநீரும் நுங்கும் தருவதற்கு நாங்கள் தயாராக இருந்தும் எங்களைப் பயன்படுத்துவாரில்லையே. உலக மக்களுக்கு நாங்கள் உதவ முடியவில்லையே என்று ஓலைக்கரங்களால் தங்கள் தலைகளில் அடித்துக்கொண்டு அழுது அரற்றும் மரங்கள்.

ஒரு பனை மரத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் ரூ.10,000 வருட வருமானம் கிடைக்கும்.

நமக்கு முந்தைய தலைமுறை செய்த இந்த அற்புதப் பணியை நாமும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு புதியவர்களை உடல் உழைப்பாலேயே மரங்களில் ஏறிப் பயன்பெற ஒருபுறம் பயிற்சி அளிக்க வேண்டும்.

இன்னொருபுறம் பனை ஏறக் கருவியொன்று மிக அவசரமாகக் காண வேண்டும். கனமற்ற - ஆனால் உறுதியான - உலோகத்தால் இதைச் செய்ய வேண்டும். ஒருவர் தூக்கிச் செல்லும் எடைதான் இருக்க வேண்டும். சக்கரங்களைப் பொருத்தி பனந்தோப்பில் இழுத்துச் செல்லும் வகையிலும் அமைக்கலாம்.

மிக எளிதில் பொருத்தப் பயன்படுத்திக் கழற்றி அடுத்த மரத்துக்கு எடுத்துச் செல்லும் வகையில் ஒரு கருவியை நம்மால் செய்ய முடியும் என்று தொழில்நுட்ப வல்லுநர்கள் இதை ஒரு சவாலாக ஏற்க வேண்டும். இத்தகைய கருவிகள் பரவலாகச் செய்யப்பட்டால் பலர் பயிற்சி பெற வருவர். மக்கள் பனை மரங்கள் மூலம் பயன் பல பெறுவர்.

இறுதியாக செம்பனையும், செம்மஞ்சள் பின்னணியும் 21 ஆம் நூற்றாண்டின் தமிழின எழுச்சிக்கான புரட்சிக் கொடியாக அமையும். இது செம்பிறை, செஞ்சிலுவை, செவ்வரிவாள், செந்நட்சத்திரம் போல் சமூகப் புரட்சிக்கான தமிழரின் கொடியாக அமையும்.

பனைவளத்தைப் பேண நாம் ஐந்து அம்ச நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.அவையாவன:

* அரசியல் அர்ப்பணிப்பு. அதாவது அரச உதவி பனை மீள்நடுகைக்கு அவசியம்.
* விவசாயத் திணைக்களம், விவசாய பீடங்கள் இணைந்து,பனை நடுகை, ஆராய்ச்சிகளில் ஈடுபடல் வேண்டும்.
* பனம் பொருள்கள் சந்தைப்படுத்தும் தன்மையினை பனை அபிவிருத்திச்சபை நவீன தொழில்நுட்ப உதவியுடன் செய்தல் வேண்டும்.
* பனை மரப் பாதுகாப்பினையும் தரிசு நிலங்களில் பனை மரங்களை உருவாக்கலையும் பிரதேச சபைகள் ஊக்குவிக்க வேண்டும்.
* பனை மரம் தொடர்பான புள்ளி விவரங்களையும் அவற்றின் பாதுகாப்பினையும் பிரதேச செயலகங்கள் மூலம் பேண வேண்டும்.


## பணிநிலை வேண்டுகை (பெண்)

01. கணினித் தட்டெழுத்தாளர் (அனுபவமுள்ள, பழக விரும்புவோர்)
02. பாடசாலை உபகரணங்கள் விற்பனையாளர். பெண் பிள்ளைகள் வேண்டப்படுகின்றனர். நேரில் வரவும்.

இன்று மாலை 4.00 - 6.00 மணி
நாளை மு.ப. 10.00 - 12. 00 மணிவரை.

தொடர்புகளுக்கு:
அபிஷேக் மல்ரி ஸ்ரோர்
இராமநாதன் கல்லூரி முன்பாக, மருதனார்மடம்.
0718565540, 0217200882, 0779005856


உதயன் 05.02.2012 ஆம் திகதி இதழின் 25 ஆம் பக்கத்தில் வெளியான ஐயாத்துரை வில்வரத்தினம் (துரைராஜாதுரை) என்பவரின் மரண அறிவித்தல் விளம்பரத்தில்;

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வேறொரு பக்கத்தில் அச்சான செய்திப்படம் பதிவாகிவிட்டது.

செய்திப் படத்தில் காணப்படும் திரு.கி.குகநாதன், திரு.மு.விக்னேஸ்வரன், திருமதி. சு.சிவானந்தன் மற்றும் மாணவிக்கு இந்தத் தவறினால் ஏற்பட்டிருக்கக் கூடிய மன உளைச்சலுக்கு வருந்துகின்றோம்.

-நிர்வாகத்தினர்


ஓம் சக்தி

## யாழ். வடமராட்சி
## கரணவாய் வடக்கு, எள்ளங்குளம்பதி நாச்சிமார் என வழங்கும்
## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய
## மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்



அம்பாள் அடியார்களே!

விராட் புருடனது இடைநாடிஸ்தானமெனச் சாந்தோக்கிய உபநிடதத்திலும், சிவபூமி, சுவர்ணபூமி என விதந்து போற்றப்படும் ஈழமணித் திருநாட்டின் வடபால் சைவமும், தமிழும் தழைத்தோங்கி கல்வி, செல்வம், வீரத்தில் சிறந்து விளங்கும் யாழ். வடமராட்சி எள்ளங்குளம் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களின் இன்னல் தீர்த்தருளும் நாச்சிமார் என வழங்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இரண்டு ராஜகோபுரங்களுக்கும் இரண்டு மணிக் கோபுரங்களிற்கும் நவக்கிரகங்களுக்கும் நிகழும் மங்களகரமான கர வருஷம் தைத் திங்கள் 27 ஆம் நாள் (10.02.2012) வெள்ளிக்கிழமை பூர நட்சத்திரமும், கும்ப லக்கினமும் கூடிய 09.30 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் அதற்கு முன்னரும், பின்னரும் நடைபெறும் கிரியைகளில் ஆசாரசீலர்களாக வருகைதந்து எம் பெருமாட்டியின் பேரருளுக்கு பாத்திரமாகி எல்லாப் பேறுகளையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சம்பியனானது அனலைதீவு அருணோதயா

ஊர்காவற்றுறை,பெப்.10

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுக்கள் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போட்டிகளில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், இரண்டு தீவுகள் இறுதிப் போட்டிக்கு முதல் முதலாகத் தெரிவாகின.

இந்த இறுதிப் போட்டிக்குத் தெரிவான அனலைதீவு அருணோதயா விளையாட்டுக் கழகமும், எழுவைதீவு பத்திமா விளையாட்டுக்கழகமும் அனைத்து ரசிகர்களின் கரகோஷங்களின் மத்தியில் மைதானத்தில் விளையாடுவதற்குக் களமிறங்கின.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில், அபாரமாக ஆடிய எழுவைதீவு பத்திமா இரண்டு சுற்றுக்களில் 21:25, 18:25 என்ற செற் கணக்கில் அனலைதீவைத் தோற்கடித்து முன்னிலை வகித்தது.

அனலைதீவு அருணோதயா அடுத்த மூன்று சுற்றுக்களிலும் நிச்சயமாக வென்றாகி விட வேண்டும் என்ற போராட்டத்தில் ஆடியது. 3 ஆவது சுற்று ஆரம்பமாகியது. இதில் அனலைதீவு அருணோதயா இலகுவான போராட்டத்துடன் 22:25 என்ற செற் கணக்கில் எழுவைதீவு பத்திமாவை வீழ்த்தியது.


நான்காவது சுற்றை வெல்ல வேண்டிய கட்டாயத்துடன் அனலைதீவு அருணோதயா விளையாட்டுக்கழகமும் களமிறங்கியது. இரு தீவுத் தரப்பினர்களும் தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை இந்த ஆட்டத்தில் வெளிப்படுத்தினார்கள்.

நான்காவது சுற்றின் இறுதி ஆட்டத்தில் யார் வெல்வது என்ற போராட்டம் இறுதிவரை நீடித்தது. ஆட்டம் 25:25 என்ற செற்கணக்கானது. ஆனால் எழுவைதீவை அருணோதயா இலகுவாக ஆடி 27:25 என்ற செற்கணக்கில் எழுவைதீவு பத்தி மாவை தோற்கடித்தது.

அனைத்து ரசிகர்களின் கரகோஷங்களின் மத்தியில் 5 ஆவது சுற்று விளையாடுவதற்காக, இரு தீவுகளும் களமிறங்கின.

அனலைதீவு அருணோதயா விளையாட்டுக்கழகம் எப்படியாவது கரப்பந்தாட்டக் கிண்ணம் தமது வசமாக வேண்டும் என்ற கனவை நனவாக்கி, 15:11 என்ற செற் கணக்கில் எழுவை தீவு பத்திமாவை தோற்கடித்தது.

3:2 என்ற கணக்கில் வெற்றி பெற்று ஊர்காவற்றுறை பிரதேச செயலக கரப்பந்தாட்டச் சம்பியனை வென்றது. (ம-325)



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் முதன்முறையாக இல்ல மெய்வன்மைப் போட்டியுடன் கராத்தே போட்டியும் இணைக்கப்பட்டுள்ளது. இதில் நான்கு இல்லங்களுக்கு இடையில் காட்டா, குமித்தே போட்டிகள் நடத்தப் பட்டன. மாணவிகள் போட்டியில் ஈடுபடுகின்றனர். நடுவராக கராத்தே ஆசிரியர் எஸ்.விஜயராஜ் கடமையாற்கின்றார். (ம-23)

## பெருவிளையாட்டு போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான பெருவிளையாட்டுக்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. நடைபெற்று முடிந்த பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

கிரிக்கெட் - பெண்கள்

முதலாம் இடம் -ஊர்கவற்றுறை சென்.ஜேம்ஸ் வி.க,
இரண்டாம் இடம் -எழுவை தீவு பத்திமா றேஞ்சஸ் வி.க.

கரப்பந்தாட்டம் - பெண்கள்

முதலாமிடம் ஊர்காற்றுறை சென்.ஜேம்ஸ் வி.க,
இரண்டாமிடம் ஊர்காவற்றுறை றேஞ்சஞ் வி.க.

வலைப்பந்து - பெண்கள்

முதலாம் இடம் -ஊர்காவற்றுறை றேஞ்சஸ் வி.க.,
இரண்டாம் இடம் -ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் வி.க.

எல்லே - பெண்கள்

முதலாம் இடம் - ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் வி.க.,
இரண்டாம் இடம் - எழுவைதீவு பத்திமா வி.க. ( ம-325)

## இன்றைய கிரிக்கெட்



யாழ்ப்பாணம்,பெப்.10

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-23)

## கிரீடா சக்திக்கு தெரிவானோர் ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

வலி. வடக்கு பெப் 10


யாழ். மாவட்டத்தில் இருந்து கிரீடா சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள் இன்று பகல் ஜனாதிபதியை அலரி மாளிகையில் சந்திக்கவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கூடைப்பந்தாட்டம் (ஆண்கள், பெண்கள்), உதை பந்தாட்டம், கரப்பந்தாட்டம் (ஆண்கள், பெண்கள்), கபடி (ஆண்கள், பெண்கள்), மெய்வன்மையாளர்கள் (ஆண்கள், பெண்கள்) கொண்ட 19 வீர வீராங்கனைகளும் மற்றும் பெற்றோர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஜனாதிபதியுடனான இந்த சந்திப்பில் கலந்து கொள்கின்றனர்.

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெறும் இந்த நிகழ்வில், விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகேயும் பிரதி அமைச்சரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-86)

# மரண அறிவித்தல்

## தம்பையாபிள்ளை சுந்தரலிங்கம்



பருத்தித்துறை, வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையாபிள்ளை சுந்தரலிங்கம் (08.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரிமளாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பையாபிள்ளை - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், பவளமாளிகை, பரமேஸ்வரியம்மா, காலஞ்சென்றவர்களான Dr. பரமகுருநாதன், பார்வதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவதீசன் (நியூசிலாந்து), குமர தீசன் (வண்ணன் - அபுதாபி), கிருஷ்ணகுமாரி (குமாரி, யா/ வல்வை மகளிர் மகாவித்தியாலய -ஆசிரியை), சத்திய குமாரி (றோசா), காலஞ்சென்ற சுந்தரவேல் (மலரவன்) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும். ரோகிணி (நியூசிலாந்து), கலாமதி (கொழும்பு), சிதம்பர நாதன் (துன்னாலை), கெங்காதரன் ஆகியோரின் மாமனும்.

ஜெயதேவி (ஸ்ரீ), கமலாதேவி - சச்சிதானந்தம் (லண்டன்), தங்கம்மா - பால சுப்பிரமணியம், காலஞ்சென்ற நல்லையா (கம்பளை ) ஆகியோரின் மைத்துனரும், ஓய்வுபெற்ற அதிபர் R.S. நடராசா (பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை) சிவபாக்கியம் (புலோலி மேற்கு) ஆகியோரின் சம்பந்தியும், மலரவன், கலைநிலா, சோதிகா, சிந்திக்கா, அபிநாத், கேஷிகா, கிஷன், கரேஷ், பவித்திரன், சிவசக்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.02.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமார வளவு,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

தகவல்:
குமரதீசன் (வண்ணன்),
றோசா.

(14210) (45-8-7)

நவநாகரிக ஆடவர்களின் இன்றைய ஒரே தெரிவு

YAMAHA




YBR 125-165000/=
SZ 150-187000/=
FZ - 247000/=
FZS - 261500
FAZER - 290000/=



கவர்ச்சிகரமான மீற்றர் அமைப்பு
153 CC காற்றினால் குளிர்ச்சியூட்டும் இயந்திரம்
மொனோ சஸ்பென்சன்
உறுதியான பெரிய டிஸ்க் பிறேக்
வெப்பத்தை வெளிக்காட்டாத சைலென்சர் அமைப்பு
மிக அகலமான டயர்

For Genuine 'YAMAHA' Spares
அனைத்து வகையான YAMAHA அசல் உதிரிப்பாகங்களையும் AMW நிறுனவத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நியாய விலையில் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

02 வருடம் 30000 kmற்கான உத்தரவாதம்

- லீசிங் வசதி செய்து தரப்படும்
- இலவச ஜக்கட்
- 03 இலவச சேவை

யாழ் மாவட்ட அங்கீகரிக்கப்பட்ட ஏகமுகவர்.

டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்

குஞ்சர் கடை சந்தி,
நெல்லியடி.
021-300 7646.

62/16, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ் சம்பத் வங்கி முன்பாக)
021-2224040.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஹேல

# நொண்டிக் குதிரைக்கு....

முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் இந்திய அணிக்கெதிராக நேற்று முன்தினம் ஏற்பட்ட தோல்விக்கு அணியின் தெரிவு காரணம் அல்லவென இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்திய அணியுடனான ஆட்டத்தில் இலங்கை அணி 4 இலக்குகளால் தோல்வியடைந்தது. வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் இலங்கை அணி இந்த ஆட்டத்தில் தோல்வியைச் சந்தித்தது. இந்த ஆட்டத்தில் நிபுணத்துவமிக்க எந்தவொரு சுழற்பந்துவீச்சாளரும் இணைத்துக் கொள்ளப்படாத நிலையே தோல்விக்கான காரணம் என ஆட்டத்தின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எனினும், தமது அணியின் வேகப்பந்துவீச்சாளர்கள் ஒன்றிணைந்து சிறந்த முறையில் செயற்பட்டதாகவும் மஹேல ஜெயவர்தன குறிப்பிட்டுள்ளார். அத்துடன் துடுப்பாட்டத்தில் சில தவறுகளை விட்டதாக சுட்டிக்காட்டிய மஹேல ஜெயவர்தன தமது திட்டங்களில் பலவற்றை நிறைவேற்றிக்கொண்டதாகக் கூறினார். இந்தத் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய மற்றும் இலங்கை அணிகள் இன்றைய தினம் பேர்த் விளையாட்டரங்கில் விளையாடவுள்ளன. (5)

# இந்திய - இலங்கை மோதல்;

## முக்கிய சில பதிவுகள்



இந்திய, இலங்கை, ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் ஆஸ்திரேலியாவில் இடம்பெற்று வரும் முக்கோணத் தொடரில் நேற்று முன்தினம் இந்திய - இலங்கை அணிகள் மோதியது இதில் இந்திய அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் இடம் பெற்ற சுவாரஸியமான விடயங்கள்:

முதல் வெற்றி

இந்தியா, இலங்கை அணிகள் அந்நிய மண்ணில் கடைசியாக சந்தித்த நான்கு ஆட்டங்களில், மூன்றின் முடிவு 'டக்வோர்த்-லூவிஸ்' முறைப்படி தான் நிர்ணயிக்கப்பட்டது. இந்த மூன்றிலும் இலங்கை தான் வென்றது. ஒரு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இந்த நிலையில் ஐந்தாவது ஆட்டத்தில் நேற்று முன்தினம் இந்தியா முதன் முறையாக வெற்றி பெற்றது.

இலங்கைக்கு எதிராக இதற்கு முன்னர் (2008) அடிலெய்டில், 239 ஓட்டங்கள் விரட்டி இலங்கையை வென்றது. இப்போது பெற்ற வெற்றி (234/6) ஆஸ்திரேலிய மண்ணில், இலங்கைக்கு எதிரான இந்தியா எடுத்து இரண்டாவது சிறந்த 'சேசிங்' ஆகும்.

ஆட்டநாயகன் விருதை முதன் முறையாக அஸ்வின் தட்டிச்சென்றார்.

விராத் ஹாக்லி அதிகம்

இந்திய வீரர் விராத் ஹோக்லி, 76 ஒரு நாள் ஆட்டங்களில் பங்கேற்று 2,968 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 8 சதம், 19 அரைசதங்கள் அடங்கும். இதே அளவிலான ஆட்டங்களில் சச்சின் பங்கேற்று இருந்த போது, 17 அரைசதங்கள் உட்பட 2,109 ஓட்டங்கள் தான் எடுத்திருந்தார். சச்சின் முதல் 78 ஆட்டங்களில் சதமே அடிக்கவில்லை.

சச்சின் அபாரம்

நேற்று முன்தினம் சச்சின் 17 ஓட்டங்கள் எடுத்த போது, இலங்கை அணிக்கு எதிரான ஒரு நாள் ஆட்டத்தில்3000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த முதல் வீரர் என்ற பெருமை பெற்றார்.

இதற்கு முன்னர், ஆஸ்திரேலியாவுக்கு எதிராகவும் 69 ஆட்டங்களில், 3060 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இந்த இரு அணிகளுக்கு எதிராகவும், 3000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த ஒரே வீரர் இந்தியாவின் சச்சின் தான். தவிர, இந்த இரு அணிகளுக்கு எதிராகத் தான் அதிக சதமும் எடுத்துள்ளார் ( ஆஸ்திரேலியா 9, இலங்கை 8).

சச்சின் ஆஸ்திரேலியா, இலங்கையை அடுத்து தென்னாபிரிக்கா (2001), பாகிஸ்தான் (2474) ஆகிய நான்கு அணிகளுக்கு எதிரான ஒரு நாள் ஆட்டங்களில், 2000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த ஒரே வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# சங்காவே முதல்வன்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் டெஸ்ட் போட்டியின் அடிப்படையில் வீரர்களின் தர வரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

துடுப்பாட்ட வீரர்களின் வரிசையில் இலங்கை வீரர் சங்ககரா முதலிடத்தில் உள்ளார். அடுத்து கலிஸ் (தென்னாபிரிக்கா) 2 ஆவது இடத்திலும், கிளார்க் (ஆஸ்திரேலியா) 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

டீ வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), யுனிஸ்கான் (பாகிஸ்தான்), அலிஸ்டர்குக் (இங்கிலாந்து), சமரவீர (இலங்கை), அம்லா (தென்னாபிரிக்கா) ஆகியோர் முறையே 4 முதல் 9 ஆவது இடங்களில் உள்ளனர். பத்தாவது இடத்தில் இந்திய அணி வீரர் சச்சின் உள்ளார்.

இதேபோன்று பந்து வீச்சாளர்களின் வரிசையில் தென்னாபிரிக்காவின் வேகப் பந்து வீரர் ஸ்ரெய்ன் 896 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், அஜ்மல் (பாகிஸ்தான்) 2 ஆவது இடத்திலும், அண்டர்சன் (இங்கிலாந்து) 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

ஸ்டூவர்ட் புரோட் (இங்கிலாந்து), பீட்டர் சிடில் (ஆஸ்திரேலியா), சுவான் (இங்கிலாந்து), அப்துர் ரகுமான் (பாகிஸ்தான்), ஹில்பென்ஹாஸ் (ஆஸ்திரேலியா), மோர்னி மோர்கல் (தென்னாபிரிக்கா) ஆகியோர் முறையே 4 முதல் 9 ஆவது இடங்களில் உள்ளனர். 697 புள்ளிகளுடன் சகீர்கான் (இந்தியா) பத்தாவது இடத்தில் உள்ளார். (5)

# மோசடியைப் போட்டுடைக்கிறார் மோடி



2009 ஆம் ஆண்டு இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) போட்டிகளுக்கான வீரர்கள் ஏலத்தின்போது அன்ட்ரூ பிளின்டொவ்வை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வாங்குவதற்கு முறையற்ற வகையில் வழியமைக்கப் பட்டதாக ஐ.பி.எல்.லின் முன்னாள் தலைவர் லலித் மோடி கூறியுள்ளார்.

ஐ.பி.எல். ஸ்தாபனத் தலைவரான லலித் மோடி நிதிமுறைகேடு குற்றச் சாட்டின் காரணமாக ஐ.பி.எல்லில் இருந்து இந்திய கிரிக்கெட் சபையினால் நீக்கப்பட்டார். தற்போது அவர் லண்டனில் தங்கியிருக்கிறார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமை இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனத்தை சாரும் இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான என். ஶ்ரீநிவாசன், 2009 ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளராக விளங்கியதுடன் தற்போது அந்தச் சபையின் தலைவராகவும் பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

' சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இங்கிலாந்து வீரர் அன்ட்ரூ பிளின்டொவ்வை தக்கவைத்துக் கொள்வதற்காக விதிகள் மாற்றப்பட்டன. அதே போல பாகிஸ்தான் வீரர்களை அணியில் சேர்க்கக் கூடாது எனவும் கிரிக்கெட் சபை அதிகாரிகள் திரைமறைவு வேலையில் ஈடுபட்டனர். கடந்த சில ஆண்டுகளாகவே ஒரு சில அணிகளுக்கு சாதகமாக விதிகள் மாற்றப் படுகின்றன. அதனால் சம வாய்ப்பு இல்லை என்று சகாரா இந்தியா நிறுவனத் தலைவர் சுப்ரதோ ராய் கூறியது சரியானது தான், என்று லலித் மோடி கூறியுள்ளார்.

முறையற்ற வகையில் பிளின்டொவ்வை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வாங்குவதற்கு தான் அனுமதித்திருக்கக்கூடாது எனவும் தானே இந்த விடயத்தில் குறைகூறப்பட வேண்டியவர் எனவும் லலித் மோடி இந்திய தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

இந்த விடயத்தில் சென்னை அணிக்கு தான் எவ்வாறு உதவினார் என்பதை லலித் மோடி வெளியிடவில்லை. எனினும் பாகிஸ்தான் வீரர் சொஹைல் தன்வீரை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தக்க வைத்துக்கொள்ளச் செய்ததன் மூலம் பிளின்டொவ்வை வாங்குவதற்கு போதிய பணமில்லாத நிலையை ரோயல்ஸ் அணிக்கு ஏற்படுத்தி, சென்னை சுப்பர் கிங்ஸுக்கு உதவியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் லலித் மோடிக்கும் என். ஶ்ரீநிவாசனுக்கும் இடையில் பரிமாறப்பட்ட மின்னஞ்சல்கள் தற்போதுவெளியாகியமை இந்தக் கருத்துக்கு பலம் சேர்க்கின்றன.

கோவாவில் நடந்த ஏலத்தின்போது அன்ட்ரூ பிளின்டொவ் 1.55 மில்லியன் டொலர்களுக்கு வாங்கப்பட்டார். அவரும் கெவின் பீட்டர்சனுமே அதிக ஏலத்தில் விற்கப்பட்டவர்கள். ஒவ்வொரு அணிக்கும் ஏலத்தில் வீரர்களை வாங்குவதற்கு அதிகபட்சமாக 2 மில்லியன் டொலர்களை செலவிட அனுமதிக்கப்பட்டிருந்தன.

மும்பை இந்தியன்ஸ் அணி ஜே.பி. டும்னியை 950,000 டொலர்களுக்கு வாங்கியதால் பிளின்டொவ் தொடர்பான ஏலத்திலிருந்து விலகியது. ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி பிளின்டொவ்வில் ஆர்வம் காட்டவில்லை.

ராஜஸ்தான் ரோயல்ஸ் இதற்கு முயற்சித்தது. தன்வீரை தக்க வைத்துக் கொண்டதால் அந்த அணிக்கு 1.875 மில்லியன் டொலர்களையே ஏனைய வீர்களுக்கு செலவிட அனுமதிக்கப் பட்டது. ஷோன் ரெய்ட்டை 375,000 டொலர்களுக்கு வாங்கிய நிலையில் அந்த அணியிடம் 1.5 மில்லியன் டொலர் மாத்திரமே எஞ்சியிருந்தது. இதனால் சென்னை சுப்பர் கிங்ஸ் 1.55 மில்லியன் டொலர்களுக்கு பிளின்டொவ்வை வாங்க முடிந்தது.

இலங்கை வீரர் சாமர கப்புகெதரவை 150,000 டொலர்களுக்கு தக்கவைத்துக்கொள்ள முதலில் சென்னை சுப்பர் கிங்ஸ் தீர்மானித்திருந்தது. எனினும் அந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய அந்த அணிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால் ஏலத்தின்போது 2 மில்லியன் டொலர்களையும் செலவிட அந்த அணியால் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் மோடியின் குற்றச்சாட்டு எவ்வித உண்மையும் இல்லாதது என்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் என் ஸ்ரீநிவாசன் கூறியுள்ளார். ''அவர் 2009 ஏலம் குறித்து பேசுகிறார். இது 2012. அவர் சொல்வது உண்மையென்றால் அதை அவர் ஏன் முன்னரே கூறவில்லை?'' என்று ஶ்ரீநிவாசன் சாக்குப் போக்கான கேள்வியை எழுப்பியுள்ளார். (5)




# அதிக வருமானம் பெறும் கால்பந்தாட்டக் கழகம்



சர்வதேச ரீதியில் அதிக வருமானம் பெறும் கால்பந்தாட்டக் கழகங்களின் பட்டியலில் றியல் மெட்றிட் கழகம் முதலிடம் பிடித்துள்ளது. இந்தப் பட்டியலில் தொடர்ந்து 7 ஆவது வருடமாக மெட்றிட் கழகம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 480 மில்லியன் யூரோக்களை இந்த கழகம் வருமானமாகப் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தை பார்சிலோனா கழகமும் மூன்றாவது இடத்தை மென்செஸ்டர் கழகமும் பெற்றுக் கொண்டுள்ளன. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மூர்த்தி மகேஸ்வரன் (மில் ராசா)



கற்குளி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட மூர்த்தி மகேஸ்வரன் நேற்று (09.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூர்த்தி - அருளம்மா தம்பதியரின் மகனும் காலஞ் சென்றவர்களான சிவப்பிரகாசம் - தையல்நாயகி தம்பதியரின் மருமகனும் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் ஸ்ரீதரன், ஸ்ரீவதனா (பிரான்ஸ்), ஸ்ரீறஜனா ஆனந்தரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுஜாதா, கனகராஜ் (பிரான்ஸ்), குலச்செல்வம் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), வளர்மதி ஆகியோரின் அன்பு மாமனும் டிலானி (பிரான்ஸ்), பரணிதரன் (பிரான்ஸ்), சாயிஜீவன் (பிரான்ஸ்), மயூரி (பிரான்ஸ்), கிரிஷா (பிரான்ஸ்), வித்தகன், சோபிகன், ராகவன், அபினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரனின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2012) வெள்ளிக் கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குளி வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## DR. தியாகராசா சிவசுதன்

(மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை, வவுனியா)



மந்துவில் மேற்கை பிறப்பிடமாகவும் பம்பைமடு வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட Dr.தியாகராசா சிவசுதன் நேற்றுமுன்தினம் (08.02.2012) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
தி.சிவமூர்த்தி.
(சகோதரன்)

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

# எல்லே போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம் பெப்.10

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கி டையில் ஆண்களுக்கு நாளை சனிக்கிழமை இடம் பெற விருந்த எல்லே போட்டி, தவிர்க்க முடியாத கார ணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும், போட்டிக் கான திகதி பின்னர் அறியத்தரப்படும் என்றும் யாழ். பிரதேச செயலக விளையாட்டுத்துறை உத்தி யோகத்தர் நித்திலநாயகம் தெரிவித்துள்ளார்.

(ம-23)

# கிரிக்கெட் வெற்றியாளர்

யாழ்ப்பாணம் பெப்.10

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட்போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டுக் கழகங்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

ஆண்கள் பிரிவு

கண்ணபுரம் விண் மீன்கள் விளையாட்டுக்கழகம் (முதலாமிடம்).

கொழும்புத்துறை றொசாறியன் விளையாட்டுக் கழகம் (இரண்டாமிடம்).

பெண்கள் பிரிவு

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் (முதலாமிடம்).

திருவள்ளுவர் விளையாட்டுக்கழகம் (இரண்டாமிடம்). (ம-23)

# கரவெட்டியில் உதைபந்து

யாழ்ப்பாணம்பெப்.10

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக் கான 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன இதில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு .

2.30.மணிக்கு மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர் சுடர் ஒளி விளையாட்டுக்கழம்

மாலை 4மணிக்கு

நித்தி விளையாட்டுக்கழகம் எதிர் செஞ் சுடர் விளையாட்டுக் கழகம். (ம-23)

# உதைபந்தாட்டம்



யாழ்ப்பாணம்,பெப்.10

வடமராட்சி வலய மட்ட பாடசாலை களுக்கு இடையி லான 19 வயது பிரிவு பெண் களுக்கான உதைபந் தாட் டச் சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கி ழமை கரவெட்டி விக் னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரைஇடம் பெறவுள்ளது.

(ம-23)

# பெண்கள் கிரிக்கெட் வெற்றியாளர்கள்

யாழ்ப்பாணம்,பெப். 10

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்க ளுக்கு இடையிலான பெண்களுக் கான கிரிக்கெட் போட்டியில் வெற்றி யீட்டிய அணிகளின் விவரங்கள் வருமாறு:-

ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் - முதலா மிடம், எழுவைதீவு பார்த்திமா விளையாட்டுக்கழகம் - இரண்டா மிடம்.

(ம-23)

# வேலணையில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,பெப். 10

தீவகக் கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 13, 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர் தெரி வித்துள்ளார். (ம-23)

# மரண அறிவித்தல்

## குருநாதர் விசுவலிங்கம் (நயினாதீவு)

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதர் விசுவலிங்கம் நேற்று (09.02.2012) வியாழக்கிழமை காலை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதர் - வள்ளியம்மை தம்பதிய ரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் மங்களத்தின் பாசமிகு கணவரும் காலஞ் சென்ற மகாலிங்கம் மற்றும் பாலசிங்கம், மகேந்திரன், குகநாதன் (கனடா), ரவீந்திரன் (டெனமார்க்), உதயகுமாரன் (ஆசிரியர், யா/கொழும்புத்துறை இ.ம.வி.), செல்வமலர், யோகேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி, பரமகுருநாதன் (கனடா), நாகேஸ்வரி, வள்ளிநாயகி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராணி, நிர்மலா (கனடா), இராசமலர் (டென்மார்க்), மனோகரி (ஆசிரியை யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), ஸ்ரீமுருகன், சுந்தரேஸ்வரன் (கனடா), சிவபாலன் (யாழ். தபாலகம்), விஜிதா (கனடா), சோதிலிங்கம், தேவதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, நாகம்மா, சின்னத்துரை மற்றும் தில்லையம்பலம், காலஞ்சென்றவர்களான தெய்வானை, நாகநாதர், வேலாயுதம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், சிவக்கொழுந்து, காலஞ்சென்ற வடிவேலு இராசரத்தினம் மற்றும் தவமணி, நீலாம்பாள், தங்கரத்தினம், தங்கமணி, காலஞ்சென்ற யோகம்மா மற்றும் செல்வராசா, மீனாட்சி, செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் வரப்பிரகாஸ், நந்தினி, நந்தன், தர்சினி, விதுஷன், நிஷாந்தன், திருஷாந்தன், திருஷாந்தினி நிருஷாந்தன், சுரன்ஜா, சஜீவன், புரந்தகி, திருமாறன், அஜந்தா, தர்சிகா, சுசிலா, வினோத், வினோரா, மாதங்கி, சஞ்சீவன், மதுமிதா, கெவின், பிரதீபன், பார்த்தீபன், ஜெயதீபன், சரண்யா, சுகன்யா, சுமங்கலி, நிகிதா, நிதுசன், குலறஜனி, சுதாகரன், ஸ்ரீகீதன், கேதீஸ்வரி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆத்மிகா, ஆதீசன், கோபிதர்ஷன் ஆகியோரின் பூட்ட னுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2012)வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு

தகவல்:
குடும்பத்தினர்

வேலணைப் பிரதேச செயலராக 01.02.2003 தொடக்கம் 31.01.2012 வரை சிறப்புறப் பணியாற்றி உடுவில் பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுச் சென்ற
திருவாளர் முத்துலிங்கம் நந்தகோபாலன் S.L.A.S
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



கண்ணியம் கடமை நேர்மை
கற்பனைக் கெட்டாத் திறமை
எண்ணிய கருமம் யாவும்
இலகுவில் ஆற்றும் பாங்கால்
திண்ணிய நெஞ்சம் கொண்டு
திறம்படச் சேவை ஆற்றி
எண்ணியே எட்டு ஆண்டு
இனிதுறப் பணிகள் செய்தீர்!

இடப்பெயர்வால் இடருற்று வந்தோர்தம்மை
இன்முகத்தோ டரவணைத்து உபசரித்து
தடம்பதித்தீர் தக்கபணி செய்தீரென்ற
சான்றிதழைப் பெற்றன்று உயர்ந்து நின்றீர்
திடங்கொண்டு தீவுதெற்கின் அபிவிருத்திச்
செயற்பாட்டில் வெற்றிகண்டீர் நந்தன் ஐயா
இடமாற்றம் பெற்றுடுவில் சென்றபோதும்
எல்லோரின் மனங்களிலும் இடம்பிடிப்பீர்!

மாலவனார் மறுபெயரைத் தாங்கி நின்று
மக்களிடர் களைவதற்கு மனமேகொண்டு
வேலவனார் அணைந்தவிடத் தமர்ந்துகொண்டீர்
வித்துவத்தால் அனைவரையும் கவர்ந்துநின்றீர்
வேலணைப் பிரதேச செயலராக
விருப்புடனே எட்டாண்டு பணிகளாற்றி
சீலமுடன் செயற்பட்டீர் நந்தன் ஐயா
செல்லுமிடஞ் சிறப்புறவே வாழ்த்துகின்றோம்!

வாழ்த்தி வழங்குவோர்:
பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்,
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிவஞானரத்னமுதலியார் கார்த்திகேசு

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை முன்னாள் வதிவிடமாகவும் கொண்ட சிவஞானரத்னமுதலியார் கார்த்திகேசு நேற்று (09.02.2012) வியாழக்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் மதனதேவியின் அன்புக் கணவரும் சுதர்ஜினி, தயாளினி, பிரஷாந், நிஷாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுமார், பற்குணன், நிர்மாலினி ஆகியோரின் அன்பு மாமனும், அமிர்தசன், லக்ஷிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளிவல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டக்களப்பில் உள்ள கல்வியங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*48/1, பார் வீதி,*
*மட்டக்களப்பு.*

தகவல்:
க. நல்லநாதன்.

## திருமதி கனகரத்தினம் மகேஸ்வரி



தாவடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் மகேஸ்வரி நேற்று (09.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகாலட்சுமி, சரஸ்வதி மற்றும் தியாகராசா, இராசலட்சுமி, காலஞ்சென்ற றோகினி மற்றும் இரா மச்சந்திரன், சறோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
க.தியாகராசா,
க. இராமச்சந்திரன்.

## திருமதி அந்தோனிப்பிள்ளை விறிசித்தம்மா (புஷ்பம்)



கரம்பனைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்துவந்தவருமாகிய திருமதி அந்தோனிப்பிள்ளை விறி சித்தம்மா 07.02.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை இன்னாசிமுத்து - யோசப்பினா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற பிறஞ்சுப்பிள்ளை - றோசாமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், அலெக்ஸ் யூலியனின் (நோர்வே) பாசமிகு தாயும், சுதாநந்தியின் (நோர்வே) அருமை மாமியும், டனிசுஜேயின் (நோர்வே), அருமை அப்பம்மாவும், எலிசபெத் (ராசாத்தி), காலஞ்சென்ற மேரிறீற்றா, மேறி சிசிலியா, மேரி மெட்லின், ஜோசேப், அன்ரன் (விஜயகுமார்) ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பொரளை AF றேமன்ஸ் மலர்ச்சாலையில் இன்று 10.02.2012 (வெள்ளிக்கிழமை) காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 12.02.2012 (ஞாயிற்றுக்கிழமை) சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*28-2/4 யோகா கோட்,*
*மாதங்கவத்தை,*
*கொழும்பு-06*
*சில்லாலை,பண்டத்தரிப்பு*

தகவல்:
மகன், குடும்பத்தினர்
அலெக்ஸ் (வசந்தன்).

# திருட்டுச் சம்பவம் சந்தேகநபர் மறியலில்

யாழ்ப்பாணம், பெப். 10.

திருநெல்வேலியிலுள்ள மரக்காலை ஒன்றினுள் புகுந்து அங்கு இருந்த மின்மோட்டர் ஒன்றையும் அதன் உபகரணங்களையும் திருடிய சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் இடம்பெற்ற இந்தத் திருட்டுத் தொடர்பாக மரக்காலை உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். விசாரணையின்போது திருடிய உடமைகள் மீட்கப்பட்டதோடு சந்தேகநபரும் இனங்காணப்பட்டார். அவர் பிற வழக்குகளில் சம்பந்தப்பட்டு ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அந்நபரைத் தொடர்ந்தும் மறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார்.

திருடப்பட்ட பொருள்கள் நேற்று உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. இந்த வழக்கு எதிர்வரும் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஒ-4)

# வீதியில் இடையூறு விளைவித்த இருவருக்கு சிறைவாசம்

யாழ்ப்பாணம், பெப். 10.

யாழ். பஸ் நிலையம் முன்பாக இருவர் தமக்கிடையே கைகலப்பில் ஈடுபட்டு பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு விளைவித்த குற்றத்துக்காக இரண்டு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்ட யாழ். கொட்டடி மற்றும் பளையைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைதுசெய்து யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தினர்.

இருவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா அபராதமும் ஐந்து வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையும் அபராதம் செலுத்தத் தவறின் இரண்டுமாதகால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி உத்தரவிட்டார். குற்றவாளிகள் இருவரும் அபராதம் செலுத்தத் தவறியதால் சிறையில் வைக்கப்பட்டனர்.

(ஒ-4)


ஆசிரியர்கள் தேவை
Ms Office, Tally, Hardware, Computer Accounting, Video Editing, DTP.
CENTER
வெளிக்கள உத்தியோகத்தர் தேவை
(Foreign Service Employees)
Point Pedro Veethi,
3m Kaddai, Kalviyankadu.
திறப்புவிழா (01.03.2012)
Tel.0094-212262744
Kodikamam,
Tel:011 572 53 36
திறப்புவிழா
(10.02.2012)
Madaththady, Alvai East.Alvai Tel: 0094-212262744.
(C8889)(6-7-10)


# கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்
சஜீதனின் பாசமிகு அண்ணன்
**பாலசுப்பிரமணியம் சுகந்தன்**
அவர்கள் (08.02.2012) புதன்கிழமை லண்டனில் அகாலமரணமானார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
(S.M.H. நண்பர்கள்)
காண்டீபன், சுகிர்தன், அருள் வேந்தன், கமல், பிரசாத்.

# மரண அறிவித்தல்

## கனகசபை தியாகலிங்கம்

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்,
சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும், சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தியாகலிங்கம் நேற்று (09.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - முத்தாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் இராசபூபதி, காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் இரத்தினபூபதி, கனகபூபதி, முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகதேவி (ஆசிரியர், யா/அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம்), மகிழ்ராஜன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரிதரன் (மின் இணைப்பாளர், லங்கா சிமெந்து), தமயந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் கிஷோராம், கபில்ராம் (யா/மகாஜனக் கல்லூரி), தாரங்கி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), அலேசியா (சுவிஸ்), டெனிசியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.02.2012) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம், கொத்திஆலடி, இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜெற்மோட்டோஸ்,**
**சுன்னாகம் வடக்கு,**
**சுன்னாகம்.**

தகவல்:
குடும்பத்தினர்.


# வீடு வாடகைக்கு

22/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சகல வசதிகளுடனும் கூடிய 3 பரப்பில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.

நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தொடர்புகளுக்கு:-

**0776660422**


# பாராட்டி வாழ்த்துகிறோம்

திருமதி கமலராணி ஜெயபாலசிங்கம் நேற்று (09.02.2012) உதயன் பக்கம் 18 இல் பிரசுரமான விளம்பரத்தில் திருமதி கமலராணி தனபாலசிங்கம் என எம்மால் தவறுதலாகத் தரப்பட்டுவிட்டது இதனைத் திருமதி கமலராணி ஜெயபாலசிங்கம் என திருத்தி வாசிக்கவும்.

திருமதி. க. சிவகுமார், திருமதி. க. சிவானந்தம்

# காணவில்லை



வேலணை
5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
## அருட்சிவம் செல்வகுமார்
(10.01.2012) இல் இருந்து காணவில்லை. இவர் மன நோயாளி. இவரைக் கண்டவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

5ஆம், வட்டாரம்,
வேலணை,
கயந்தினி உணவகம்,
மானிப்பாய் றோட்டு,
உடுவில்.

அ. உதயகுமார்
தொ.பே. இல.
077 6703928,
021 5680752

(14314)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரிக்கை நிறைவேறாவிடின் எமது போராட்டம் தொருடம்

## எச்சரிகிறது தாதியர் சங்கம்

கொழும்பு, பெப்.10
எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் வெடித்துக் கொண்டே இருக்கும். எத்தகைய அழுத்தங்கள் எம் மீது பிரயோகிக்கப்பட்டாலும், எமது நிலைப்பாட்டிலிருந்து நாம் ஒருபோதும் பின்வாங்கப்போவதில்லை. எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக வேலை நிறுத்தத்திலும் ஈடுபட நாம் தயார்.

- இவ்வாறு அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சு பக்கச்சார்புடன் செயற்படுகின்றது. அரச சேவைகள் ஆணைக் குழுவினால் தாதியர் சேவை தொடர்பான சுற்றறிக்கை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், சுகாதார அமைச்சர் கையொப்பமிட்டு அனுமதி வழங்க மறுக்கின்றார் என அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை தேசிய வைத்திய சாலையின் முன்பாக நேற்று நண்பகல் 12 மணி முதல் ஒரு மணிவரை இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களுக்கு ஓர் உன்னத சேவையை வழங்கும் முகமாக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றோம். சேவையில் ஈடுபட்டுள்ள ஏனைய அரச சேவையாளர்களுக்கு உரிய சலுகைகளை வழங்குகின்றனர். ஆனால், எமது சேவையாளர்களுக்கு மட்டும்ஏன்பார பட்சம்காட்டி பக்கச்சார்புடன் சுகாதார அமைச்சு செயலாற்றிவருகின்றது?

தாதியர் சேவை தொடர்பான சுற்றறிக்கை அரச சேவைகள் ஆணைக்குழுவினரால் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (த-சி)

# சவேந்திர சில்வா தப்பினார்

1

இதன் காரணமாக இந்த மனுவை தள்ளுபடி செய்வதாக குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கை அமெரிக்க நீதி மன்றம் மறுபரிசீலனைசெய்யும் என எதிர்பார்ப்பதாக மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (த)

# மின் கட்டணம் அதிகரிக்காது

1

ரவி கருணாநாயக்க வாய் மூலம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்துப் பேசும்போதே பிரதியமைச்சர் இவ்வாறு கூறினார். நாட்டின் மின்சாரத் தேவைக்கு ஏற்ப மின்சார உற்பத்தி செய்வதற்காகப்பல திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மின்சார உற்பத்திக்கான செலவுகள் அதிகரித்துள்ளபோதும் பொது மக்களுக்கு சிரமம் ஏற்படாதவாறு கட்டணம் அறவிடுவதில் அரசு கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. அரசின் குறிக்கோளும் அதுவாகும். சிரமமில்லாத கட்டண முறையை தொடர்ந்தும் கடைப்பிடிக்கவே அரசு உத்தேசித்துள்ளதால் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாதென பிரதி அமைச்சர் கூறினார்.

# மெய்வன்மைப் போட்டி

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் திருமதி சி.கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.பிரேமகாந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (131)

# ஐ.தே.க. - கூட்டமைப்பு முக்கிய பேச்சு

1

யக் கட்சியின் அறிக்கையின் பிரதான அம்சமாக இருக்குமென அறிய முடிகின்றது.

ஜெனிவா மாநாடு நெருங்கும் நிலையில் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சி இவ்வாறு பகிரங்க அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளமையானது அரசை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# மாலைதீவு ஜனாதிபதியின் குடும்பம் இலங்கையில் தஞ்சம்

1

அரசின் ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி நஷீட்டின் குடும்பத்தினர் பாதுகாப்புத் தேடி இலங்கைக்கு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மொஹமட் நஷீட்டின் மனைவியும் இரு பிள்ளைகளும் இலங்கை வந்தடைந்தனர் எனவும் அவர்கள் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசி மூலம் உரையாடினர் எனவும் பந்துல ஜயசேகர ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார். மொஹமட் நஷீட்டினதும் அவரின் குடும்பத் தினரதும் பாதுகாப்புக் குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷ கரிசனை கொண்டுள்ளார் என்றும் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார். (த-சி)

# தமிழருக்குத் தீர்வைப்பெற வாருங்கள் போராடுவோம்

1

தமது உரிமைகளுக்காகப் போராடவேண்டிய நிலையே இன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு போராடும் பட்சத்திலேயே தீர்வு கிடைக்கின்றது. கட்டுநாயக்க ஆர்ப்பாட்டம் இதற்கு சிறந்ததோர் உதாரணமாகும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களை ஒன்றுதிரட்டி, வீதியில் இறங்கிப் போராடவேண்டும். மண்ணில் கால்படாமல் எதனையும் செய்யமுடியாது. தமிழ்மக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு நாம் பக்கபலமாக இருப்போம்.

மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, மாலைதீவு ஜனாதிபதி பதவி விலகியுள்ளார். மக்களின் உணர்வுகளுக்கு அவர் மதிப்பளித்ததால் முதலில் எமது நன்றிகள் உரித்தாகட்டும்!

மாலைதீவு ஜனாதிபதியின் பதவி விலகல் எமது நாட்டு ஆட்சியாளர்களுக்குச் சிறந்ததொரு பாடமாக - எடுத்துக்காட்டாக அமைய வேண்டும்.

மாலைதீவு ஜனாதிபதி கடந்த ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு நற்சான்றிதழ் கொடுத்தவர். இலங்கைக்காக தூது சென்றவரும் கூட. எனவே, அவரின் பதவி இழப்பு இலங்கைக்கு நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

முஸ்லிம் நாடுகளின் எதிரான போக்கு மஹிந்த அரசுக்குப் படுபாதாளத்துக்கான கதவை திறந்துவிட்டுள்ளது. ஜெனிவா மாநாட்டில் மாலைதீவு விவகாரம் இலங்கையை ஆட்டம் காண செய்யும் - என்றார் அவர்.

# இலங்கைக்கு எதிரான பிரேரணை ஆதரிக்கும் நிர்ப்பந்தத்தில் ஆஸி.

1

எனினும், தொழிற்கட்சியும், கூட்டமைப்பும் இதற்கு எதிராக வாக்களித்தன.

இதுகுறித்து செனட்டர் ரியானொன் பேசுகையில், "இலங்கையில் 26 வருடங்கள் மிலேச்சத்தனமான சிவில் யுத்தம் நீடித்துள்ளது. இக்காலத்தில் புரியப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக முறைப் பாடுகள் எழுந்துள்ளன. இவை குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரும் பிரேரணை இன்று செனட்டில் தோற்கடிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் ஆஸ்திரேலியா மற்றொரு தடவையும் பின்வாங்கியுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு:-

இலங்கையின் போர்க் குற்றங்கள் மீதான சர்வதேசத்தின் அக்கறை பல மாதங்களாக அதிகரித்துவருகிறது. இதை வெளிவிவகார அமைச்சர் கெவின் ரூத் கண்டுகொள்ளாமல் இருந்தார். இதுதொடர்பாக அழுத்தம் எழுந்தது.

இச்சமயத்தில், "இலங்கை அரசின் ஆணைக்குழு அறிக்கை வெளியாகட்டும், பார்ப்போம்" என சமாளித்து வந்தார். இந்த அறிக்கை வெளியாகி இரு மாதங்களும் கடந்து விட்டன. எனினும், இதுவரை ரூத் வாய்மூடி மௌனியாகவே இருக்கிறார்.

அதேவேளை, இந்த அறிக்கை அரைகுறையானது என்றும் இலங்கையில் போர்க்குற்றங்களை விசாரிக்க சுயாதீன சர்வதேச குற்றவியல் விசாரணை தேவை என்றும் பிரிட்டனும், கனடாவும் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்துள்ளன.

மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆட்டிலறி தாக்குதல், வைத்தியசாலைகள் மீதான தாக்குதல், அரசு படைகளால் மேற்கொள்ளப்பட்ட பலாத்கார பாலியல் சம்பவங்கள் ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக விசாரணை நடத்தவேண்டுமென இவ்வறிக்கை கோரிக்கை விடத் தவறிவிட்டது.

சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், பிரிட்டிஷ் தொலைக்காட்சியும் இச்சம்பவங்களைக் குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை, மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கைக்கு எதிராக இம்மாத பிற்பகுதியில் ஜெனிவாவில் நிகழும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பிரேரணையொன்றைக் கொண்டுவர அமெரிக்கா முன்வந்துள்ளது என்ற தகவல்களும் வெளியாகி யுள்ளன.

இந்நிலையில், சுயாதீன போர்க்குற்ற விசாரணைக்கு நீதிமன்றம் அமைக்கப் படவேண்டுமென்ற கோரிக்கைக்கு ரூத்தால் அழுத்தங் கொடுக்கமுடியும். தமிழர்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட பயங்கர அட்டூழியங்களுக்கு எதிராக சர்வதேச தலைவர்கள் பயணிக்கும் வழியிலிருந்து ஆஸ்திரேலியா மீண்டும் தடம் புரண்டு விடக்கூடாது.

இராஜதந்திர அணுகுமுறைகளுக்கான காலம் கடந்துவிட்டது. எமது பிராந்தியத்தில் போர்க்குற்றங்களும், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ளன. எனவே, இதற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கும் சம்பந்தப்பட்டவர்களை நீதி முன் நிறுத்துவதற்குமான பொறுப்பு எமக்குண்டு.

- இவ்வாறு செனட்டர் ரியானொன் தமதுரையில் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

# அரச படையினரிடம் ஒப்படைத்தோரை மூன்று வருடங்களாகியும் காணவில்லை

1

முல்லைத்தீவுக்கு இரகசியமாக வந்த ராப், பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்துப் பேசினார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள செல்வபுரம் என்ற இடத்தில் அமைந்திருக்கும் யூதாத தேயூ ஆலயத்தில் இந்தத் திடீர்ச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. உடனடியான அழைப்பை ஏற்று சுமார் 25 வரையான பொது மக்கள் சந்திப்புக்கு வந்திருந்தனர். பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமான சந்திப்பு சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது.

இறுதிப் போரின்போது நடந்தவைகள் குறித்து ராப் அந்த மக்களிடம் விசாரித்தார். போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் அவர் கேள்விகளை எழுப்பினார். ஐ.நா. வல்லுநர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த போர்க் குற்றங்களுக்குக் காரணமானவர்களை அந்த மக்களிடம் இருந்து அறிந்து கொள்வதிலும் அவர் ஈடுபாடு காட்டினார்.

பொதுமக்கள் அவரிடம் தெரிவித்ததாவது:-

### காணாமற்போனோர்

இறுதிப் போரின்போது காணாமற்போனவர்கள் இரு வகைப்பட்டவர்கள். போர் நடந்துகொண்டிருந்தபோது காணாமற்போனவர்கள் ஒரு வகையினர். மற்றொரு தொகுதியினர் சரணடைவதற்காக இலங்கை இராணுவத்தினரிடம் உறவினர்களால் நேரடியாக ஒப்படைக்கப்பட்டவர்கள்.

வட்டுவாகலில் வைத்து இவர்கள் இராணுவத்தினரிடம் மனைவிமாராலும் தாய்மாராலும் நேரடியாக ஒப்படைக்கப்பட்டவர்கள். இப்படி ஒப்படைக்கப்பட்டவர்கள் அனைவரும் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள் என்பதைப் பின்னால் வந்தவர்கள் கண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது கேட்டால் அப்படித் தாங்கள் யாரையும் பொறுப்பேற்கவில்லை என்று இராணுவத்தினர் கூறுகிறார்கள்.

தமது பிள்ளைகள் எங்கே என்று கேட்டுச் சென்ற தாய்மார்கள் சிலருக்கு, "உங்கள் பிள்ளைகள் இறந்து விட்டார்கள் என்று பதிவு செய்து கொள்ளுங்கள்" என இராணுவத்தினர் பதிலளித்துள்ளனர்.

### ஆணைக்குழு விசாரணை நடிப்பு

நல்லிணக்க ஆணைக் குழு எங்களிடம் பகிரங்க இடத்தில் விசாரணை நடத்தியது. புலனாய்வுப் பிரிவினர் அங்கு நின்றிருந்தார்கள். உண்மையைச் சொன்னால் ஏதாவது நடந்துவிடும் என்ற அச்சம் காரணமாக நாங்கள் எல்லாவற்றையும் சொல்லவில்லை. உண்மையில் எம்மால் அங்கு சுதந்திரமாகச் சாட்சியமளிக்க முடிந்திருக்கவில்லை.

அப்படி இருக்கையில் அந்த ஆணைக்குழுவின் அறிக்கையை நாம் எப்படி ஏற்க முடியும்? அதில் எமக்கு நம்பிக்கை இல்லை. நீதி கிடைக்க சர்வதேச விசாரணை ஒன்றே நடத்தப் படவேண்டும்.

### மீள்குடியமர்வு முடிய வில்லை

இந்த நாட்டில் விடுதலைப் புலிகள் இருப்பதற்கான அடையாளங்கள் எதுவும் கடந்த மூன்று வருடங்களாகக் கிடையாது. அவர்களால் எந்த அச்சமும் இல்லை. ஆனால் பல இடங்களில் எம்மை மீளக்குடியமர விடுகிறார்கள் இல்லை. படையினர் தமக்குத் தேவை என்று பெரும் தொகையில் காணிகளை ஆக்கிரமிக்கிறார்கள். அவர்கள் ஒரு முகாம் அமைக்க 5 முதல் 10 ஏக்கர் காணி போதாதா? எதற்காக 400 முதல் 500 ஏக்கர் காணியைக் கேட்கிறார்கள்? அவ்வாறு கேட்பதால்தான் எங்களால் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியவில்லை. அவர்கள் ஒரு பக்கத்தில் இருந்துவிட்டு மீதியை மக்கள் மீளக்குடி யமர அனுமதிக்கலாம் தானே?

### இராணுவப் பிரசன்னம்

வன்னியில் இராணு வத்தில் பிரசன்னம் இன்றி [illegible] எந்த ஒரு நிகழ்வாயினும் படையினர் அங்கிருப்பர். சிவில் நிர்வாகம் நடக்கிறது என்று அரசு கூறுகிறது. பின்னர் ஏன் ஒவ்வொரு நிகழ்விலும் இராணுவத்தை நிறுத்துகிறது?

### காணி, பொலிஸ் அதிகாரம் வேண்டும்

நாங்கள் சிங்களவர்களுக்கு நிகராக சம உரிமைகளுடன் வாழ்வதற்கே விரும்புகிறோம். அதனையே கேட்கிறோம். பொலிஸ், காணி அதிகாரங்களுடன் கூடிய ஒரு மாகாண சபையையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். அத்தகைய ஒரு தீர்வை அரசு வழங்க அமெரிக்கா இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

### இந்தியாவில் நம்பிக்கை இல்லை

நீண்ட காலமாக நாம் இந்தியாவை நம்பி இருந்தோம். ஆனால் இப்போது அவர்களை நம்பும்படியாக எதுவும் இல்லை. அவர்கள் தமிழர்களை ஏமாற்றுகிறார்கள். இப்போது நாங்கள் அமெரிக்காவைத்தான் நம்பியுள்ளோம். நீங்கள்தான் அழுத்தத்தைக் கொடுத்து தமிழர்களுக்கு நீதி கிடைக்க வழி ஏற்படுத்த வேண்டும் - என்றனர்.

மக்களின் கருத்துக்களைக் கேட்ட ஸ்ரீபன் ராப், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க அமெரிக்க அரசு [illegible] அனைத்தையும் செய்யும் என்று தெரிவித்தார். (உ-01, 06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை பள்ளியில் ஆசிரியரை கழுத்தறுத்துக் கொன்ற மாணவன்

### குருவின் கண்டிப்பால் சிஷ்யன் கொலைவெறி

சென்னை, பெப். 10

வகுப்பறையிலேயே மாணவர் ஒருவரால் ஆசிரியை ஒருவர் கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை பாரிமுனையில் உள்ள அர்மீனியன் தெருவில் இருக்கும் புனிதமேரி ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பாடசாலையில் ஹிந்தி ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்த உமாமகேஸ்வரி (வயது - 43) என்பவரை ஒன்பதாம் வகுப்பு படித்துவரும் முகமது இர்பான் என்ற மாணவன் நேற்றுக்காலை வகுப்பறையிலேயே கழுத்தை அறுத்துக் கொலை செய்தார்.

**ஆசிரியையை கொலைசெய்தது ஏன்?**

இதேவேளை, குறித்த ஆசிரியையை கொலை செய்தது ஏன் என்பது குறித்து மாணவன் முகமது இர்பான் வாக்குமூலம் பரபரப்பு அளித்துள்ளார்.

தன்னைப் பற்றி பெற்றோரிடம் முறைப்பாடு கூறியதாலும், மதிப்பெண் போடுவதில் ஏற்பட்ட பிரச்சினையாலும் அவரை குத்திக் கொன்றதாக இர்பான் தெரிவித்தார்.

ஆசிரியைகொலை செய்யப்பட்டதை அறிந்து அந்தப் பாடசாலையை பெற்றோர்கள் முற்றுகையிட்டனர். இதனால் சென்னை பாரிமுனை பகுதியில் பெரும் பரபரப்பு நிலவுகிறது.

முள்ளந்தண்டு உபாதைக்குச் சிகிச்சை!

# இளம்பெண் மரணமான சம்பவம் ஆயுள்வேத வைத்தியருக்குப் பிணை

யாழ்ப்பாணம், பெப்.10

முதுகெலும்பில் ஏற்பட்ட உபாதைக்கு சிகிச்சையளிக்கப்பட்ட போது இளம் பெண் ஒருவர் மரணமடைந்த சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆயுள்வேத வைத்தியர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மூளாய் கிழக்கு காளிகோயிலடியைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்தியரான மாரிமுத்து வீரசிங்கம் (வயது- 61) என்பவரே குறித்த சந்தேக நபராவார்.

இளம்பெண்ணின் முள்ளந்தண்டில் ஏற்பட்டிருந்த உபாதைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டபோது முள்ளந்தண்டில் முறிவு ஏற்பட்டதாகவும், இரத்த நாளங்கள் சிதைவடைந்ததாகவும் மல்லாகம் நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் கடந்த முதலாம் திகதி குற்றத் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட வைத்தியரும் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

குறித்த மரணம் தொடர்பாக விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையில், பொலிஸார் கோரியதன் பிரகாரம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை சந்தேக நபருக்கு விளக்க மறியல் உத்தரவு நீதிவானால் வழங்கப்பட்டது.

கவயீனமான- கண்மூடித்தனமான செயலினால் குறித்த இளம் பெண்ணுக்கு மரணம் விளைவித்ததாக இலங்கைத் தண்டனைச் சட்டக் கோவையில் 298ஆம் பிரிவின் கீழ் சந்தேக நபருக்கு எதிராக குற்றப்புகார் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரேரணை ஒன்றின் மூலமாக இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா குறித்த மரணம் தொடர்பான பொலிஸ் விசாரணை முடிவடைந்திருப்பதால் சந்தேக நபருக்குபிணைஅனுமதிவழங்குமாறு விண்ணப்பித்தார்.

ஆயுள்வேத சபையினால் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு வைத்தியராக சந்தேக நபர் இருந்துவந்துள்ளார் எனத் தெரிவித்த சட்டத் தரணி, நிகழ்ந்த சம்பவம் எதிர்பார்க்கப்பட்டிராத ஒரு துரதிஷ்டவசமான நிகழ்வு எனக் குறிப்பிட்டார்.

சந்தேக நபர் தரப்பில் பொலிஸ் விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும், சாட்சிகளிடம் சந்தேக நபர் எந்த வித தலையீட்டிலும் ஈடுபடமாட்டார் என்றும் மேலும் தெரிவித்தார்.

இந்த வழக்குத் தொடர்பான குற்றச் சாட்டை நீதிவானால் பிணை வழங்கக் கூடிய ஒன்று என்பதனால் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் பரிசீலித்து பிணை தொடர்பில் சாதகமான உத்தரவை வழங்குமாறு சட்டத் தரணி விண்ணப்பித்தார்.

பொலிஸ் விசாரணை தொடர்பான விடயங்களை வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடமிருந்து வினர்விப் பெற்றுக் கொண்ட நீதிவான், ஒரு இலட்சம் பெறுமதியான ஆள் பிணையிலும் குறித்த பிணையாளி வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலைய அதிகார எல்லைக்குள் வசிப்பவராக இருக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டு சந்தேக நபரைப் பிணையில் விடுவித்தார்.

(ஒ-4)

# தப்பியோடிய நபர் பொலிஸில் சிக்கினார்

சாவகச்சேரியில் தங்கச்சங்கிலியை அறுத்து நெல்லியடிப் பகுதிக்கு விற்பனைக்காகக் கொண்டுவந்த நபர், ஏற்கனவே பொலிஸ் காவலில் இருந்து தப்பியோடி இருந்தார்.

குறித்த நபர் வடமராட்சி மண்டான் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.தேடப்பட்டுவந்த இந்த நபர் குறித்து நெல்லியடிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அவர்கள் விரைந்துசென்று சந்தேக நபரைக் கைது செய்தனர். தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் மனைவி கொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும் ஏற்கனவே இவர்மீது வழக்குப் பதிவாகியுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்னர். (த-15)

**காணி விற்பனைக்கு**

யா/ பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு பின்னால் செல் லும் வீதியில் 5 பரப்பு காணி விற் பனைக்குண்டு.
தொடர்புகொள்ளவேண்டிய தொலை பேசி இல.: 0779231944

**ENGLISH GRAMMAR**

ஆங்கிலத்தை மிக விரைவாகக் கற்க விரும்புவோருக்கு ஓர் அரிய வாய்ப்பு
இரண்டே நாட்களில்
நவீன உத்தியான FORMULATION TECHNIQUE முறைமூலம் Formulation Table ஐ பயன்படுத்தி அடிப்படை ஆங்கில இலக்கணம் Basic English Grammar முழுமையாகக் கற்பிக்கப்படும்.
இடம்: The Excellent Learning Centre
கொக்குவில் சந்தி, கே.கே.எஸ். வீதி. (கொக்குவில் இந்துக் கல்லூரி அருகில்)
காலம்: இந்த மாதம் 11, 12 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி
11 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் 9.00 மணிவரை Formulation Technique பற்றிய இலவச விளக்கம் அளிக்கப்படும்.
ஆசிரியர் P.T.புனிதராஜா Contact No. 071 44 50 379 / 077 77 33 404
ஒவ்வொருவார இறுதி நாட்களிலும் இலவச விளக்கமும் அதனைத் தொடர்ந்து வகுப்புகளும் நடைபெறும்.

சிங்களம்
eTRANSITION
Feel the change
பேச, எழுத, வாசிக்க இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
அரச தனியார் அலுவலர்கள்,பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் மற்றும் வெளி மாவட்டங்கள் செல்வோருக்கான
மற்றுமோர் சந்தர்ப்பம்
ஆரம்பம்:- 13/02/2012
கற்கைநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்
By: ஸ்ரீ Master
166/3, Navalar Rd, Jaffna
T.P : 021 221 9230
Email : info.etransition@gmail.com
Web : www.etransition.net

அரசியல் விஞ்ஞானம்
திரு. இ.ஸ்ரீரங்கநாதன்
A/L 2012
துரித மீட்டல் வகுப்புகள், வினாவிடைப் பயிற்சி, தொடர் பரீட்சைகள், கருத்தரங்கு
A/L 2013
இலங்கை அரசியல்
A/L 2014
அரசியல் அறிமுகம்
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
ஆரம்பம் -10.02.2012
விக்னா கல்வி நிறுவனம்,
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

விக்னா கல்வி நிறுவனம்,
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
சிங்கள வகுப்புகள்
தலைநகர் பிரபல ஆசிரியர்
திரு. பரமேஸ்வரன்
எழுத, பேச, வாசிக்க சிறுவர் முதல் வயது வந்த அனைவருக்குமான விசேட பிரிவுக் கட்டணம் 500/-
சனி, ஞாயிறு-
7.30-8.30 பிரிவு-1
8.30- 9.30 பிரிவு-2
9.30- 10.30 பிரிவு-3
ஆரம்பம் 10.02.2012

IIS
Invitation
The CEO, Directors and Staff of the IIS Cordially invite Patrons, Friends and Well wishers to the
16th INSTITUTE DAY & Graduation - 2012
at the Jubilee Hall, St. John's College, Jaffna.
on Saturday 11th February 2012 at 9.30 a.m

Personal-Group Classes( Vavuniya - Jaffna )
Auto CAD
2D-Drawing & 3D-Modeling
B.Y.M.K.N.Mayurathan (D/A),
Cert. in 2D-Drawing & 3D-Modeling -Open University of Sri Lan
Cert. in Auto CAD (1st Class-Batch Top)
Information Technology - Ministry of Rehabilitation-Sri Lanka
Diploma in Engineering Drawing & Auto CAD (1st Class)
IIS-International University –Dublin
Contact No:0719978819

சிங்கள வகுப்பு
ஆரம்பம் : 14.02.2012
(செவ்/ வியாழன்) காலை 6.30 – 7.30
ஆசிரியர் : திரு. ஸ்ரீமாஸ்டர்
ஆங்கில வகுப்பு
Spoken English
A/L வகுப்புகள்
AAT : Maths and Stats
CHART - ACC
தொடர்புகளுக்கு : 0777 593839, 0775 533060
124/2 பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, அருகில்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
சனி ஞாயிறு பிரிவு ஆரம்பம்
11-02-2012 சனிக்கிழமை

| | |
|---|---|
| ராஜமாணிக்கம் மண்டபம் அருகில் அச்சுவேலி | காலை 8.00 - 9.00 |
| NSB அருகில், கொடிகாமம் வீதி நெல்லியடி | காலை 9.00 - 10.00 |
| நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி சாவகச்சேரி | காலை 11.30 - 12.30 |
| 182, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | மாலை 3.00 - 4.00 |
| இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை | மாலை 5.00 - 6.00 |

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளில் பணியாற்றுவதற்கு தகுதியும் அனுபவமும் உள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சிட்டை எழுதுனர்கள்
(Bill Clerks)
(வயது 30 - 45 இற்கும் இடைப்பட்டவர்கள்)
2. விற்பனையாளர்கள்
(Sales Men)
(வயது 25 - 40 இற்கும் இடைப்பட்டவர்கள்)

இப்பதவிகளில் இணைந்துகொள்ள விரும்புவோர் தமது சுயவிபரம் கொண்ட விண்ணப்பத்தினை 15.02.2012 இற்கு முன்னர் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகாமையாளர்
NARAYANA HARD WARES TRADER
நாராயணர் கட்டடப்பொருள் வர்த்தகர்
92,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org